# வாழ்வொளி




## ISLAMIC MAJLIS, PALALY G.T.C. 1975

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976 23

# THE OPENING

**( Al - Fatihah )**

## In the Name of Allah
## The Gracious
## The Merciful

*All praise belongs to Allah alone,*
*Lord of all the worlds,*
*The Gracious the Merciful,*
*Master of the Day judgement.*
*Thee alone do we worship and*
*Thee alone do we implore for help.*
*Guide us in the straight path,*
*The path of those on whom*
*Thou hast bestowed Thy favours,*
*those who have not incurred Thy*
*displeasure and those who have not*
*gone astray.*

*— AMEEN —*

கூட்டுறவு அச்சகம், யாழ்ப்பாணம். 665/75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பிறை

( இஸ்லாமிய மஜ்லிஸ் வெளியீடு )

**1975**

1395

## இஸ்லாமிய மஜ்லிஸ்,

பலாலி ஆசிரியர் கழகம்,

வசாவிளான்

இலங்கை.

314527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

…………எனது வாழ்நாளில் சில முக்கியமான வருடங்களைப் பொதுப் பணிக்காகவும், எனது சமூக மக்களின் சன்மார்க்க வளர்ச்சிக்காகவும் அர்ப் பணித்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். அத்தோடு நான் திருப்தி அடைய மாட்டேன். எனது தாய் நாட்டுக்கும், அங்கு வாழும் மக்களின் முன்னேற்றத் திற்கும் மென்மேலும் சேவையாற்றச் சந்தர்ப்பம் கிடைக்க வேண்டுமென்பதே எனது முழுமையான ஆர்வமும், அவாவுமாகும்…………

— கௌரவ கல்வியமைச்சரவர்கள்,
1933ல் எழுதிய ஒரு கடிதத்திலிருந்து—

(நன்றி:— எஸ். எம். ஏ. ஹஸனின் ''கலாநிதி பதியுதீன்'')

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஷாயிதூ மில்லத்"



மாண்புமிகு

கலாநிதி அல்ஹாஜ் பதியுத்தீன் மஹ்மூத் அவர்கள்

M. A. D. Lit., L. L. D., D. E. D.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழக்கிலங்கையின்
முன்னணி கூட்டுறவுச் சங்கமாகத் திகழும்

எம்மிடம்
கொள்வனவு செய்து, பணத்தை சேமியுங்கள்

★

உங்களுக்குத் தேவையான

- O பன் கைப்பைகள்
- O பன் பாய்கள்
- O பன் தட்டுகள்
- O ஓலைப் பெட்டிகள்

மற்றும்

★ அவல் ★ அரிசித்தவிடு ★ வைக்கோல்

என்பனவற்றிற்கு
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்,

தரமான காய்ந்த மிளகாய், உருளைக்கிழங்கு, விநியோகம் செய்பவர்களிடமிருந்து விலைப் பட்டியலுடன் முழு விபரங்களும் கோரப் படுகின்றன.

தொலைபேசி :— 14

# நிந்தவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
# Nintavur Multi-purpose Co-operative Society Ltd.

பிரதான வீதி,
நிந்தவூர்.

**Main Street,**
**NINTAVUR.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் ஒலிபரப்புத் துறை பிரதியமைச்சரும்,
திருமலை மாவட்ட அரசியலதிகாரியும், மூதூர் முதல்வருமான
**ஜனாப் ஏ. எல். அப்துல் மஜீத் அவர்கள் அளித்த**

# ஆசியுரை

ஈழத்து சஞ்சிகை வரலாற்றிலே முற்போக்கு அணியில் அண்மைக் காலத்தில் முன்னிடம் பெற்றுக்கொண்ட ''யாழ்பிறை'' க்கு வாழ்த்துச் செய்தி யொன்றை அனுப்பிவைப்பதிற் பெருமிதமடைகின்றேன்.

படித்த முஸ்லிம் இளைஞர்கள் தங்கள் சமூகத்துக்கும், நாட்டுக்கும் ஆற்றிய பணிபற்றி வெவ்வேறு அபிப்பிராயம் நிலவிய காலம் மலையேறி விட்டது. இந்த விஷயத்தில் இன்று அவர்கள் ஏனைய சமூகங்களின் இளைஞர்களுடன் கைகோர்த்து – முன்னணியில் திகழ்கின்றனர், இதற்கு அண்மைக் காலை வெளிவந்த ''யாழ்பிறை'' போன்ற சஞ்சிகைகள் சாட்சியாக நிற்கின்றன.


முற்போக்கு ஆக்க இலக்கியத் துறையில், நாளைய தலைவர்களான இன்றைய முஸ்லிம் இளைஞர்கள் ஆற்றிவரும் அரும்பணியை ஆனந்தத்துடன் பாராட்டும் அதேவேளை, அவர்கள் தங்கள் பணியை, தங்களது தனித்துவத்தைத் தட்டிக் கழிக்காத வகையில் மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்கிறேன். தேசியம் குன்றாத தனித்துவம், தனித்துவம் குன்றாத தேசியம் என்ற ஒன்றுடன் ஒன்று இணைந்த கோட்பாட்டை இன்றைய முஸ்லிம் இளைஞர்கள் தங்களது பணியின் அடிநாதமாகக் கொள்ளவேண்டும்.

இறுதியாக, இன்றைய இளைஞர்களை – நாளைய தலைவர்களை - அவர்கள் ஆக்கங்களை, சமூகம் எதிர்பார்க்கிறது. சமூகத்தை வழிநடத்தும் பெரும் பொறுப்பும் அவர்கள் கையிலேயே உண்டு. எனவே, அதற்கான உங்கள் அறப்பணி தொடரட்டும்; ஆயிரம் ''யாழ்பிறைகள்'' மலரட்டும்; மணம் பரப்பட்டும்.

ஏ. எல். அப்துல் மஜீத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதியமைச்சர் வாழ்த்துகிறார்



தகவல் ஒலிபரப்புத்துறை
பிரதியமைச்சர்

## ஜனாப் ஏ. எல். அப்துல் மஜீது அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With*
*The Best Compliments*
*from*

# HAKEEM TRADES

**EXPORTERS & TRANSPORT AGENTS**

**63, Dam Street,**
**COLOMBO-12**

T'phone :
34412

Cable :
HAKIMPEX

*With*
*The Best Compliments*

# M/s SAGAR & CO.,

**105, 2nd Cross Street,**
**Colombo-11**

T'phone : 25751

*With The*
*Compliments*

*From*

# KAMAL HARDWARES,

**No. 3, Stanley Road,**
**JAFFNA.**

T'phone :
335

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரின் செய்தி

பலாலி ஆசிரிய கலாசாலை இஸ்லாமிய மஜ்லிசின் ஆண்டு மலராகிய **யாழ் பிறை** இவ்வாண்டு கார்த்திகை மலராக வெளிவரவிருப்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறேன்.

உலகெங்கும் கல்வித்துறையில் மகத்தான மாற்றங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இம்மாற்றங்கள் முன்னேற்றமடைந்துவரும் நாடுகளுக்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்தவை. நமது நாட்டைப் பொறுத்தவரையில், 1970 ம் ஆண்டு மாண்புமிகு கல்வி அமைச்சரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட மறுமலர்ச்சியின் சிறப்பு அம்சமாகத் தொழில் முன்னிலைக் கல்வியை மையமாகக் கொண்டு கல்வி பயின்ற மாணவ சமுதாயம் முதல்முறையாக அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் N.C.G E. பரீட்சைக்கு தோற்றவிருக்கின்றது. அடுத்த இரண்டு வருடங்கள் இப்புதிய கல்வித்திட்டம் பத்தாம், பதினோராம், வகுப்புக்கள்வரை விஸ்தரிக்கப்படவிருக்கின்றது.

இந்நிலையில் இவ்வருடம் இங்கு பயிற்சி பெற்று வெளியேறவிருக்கும் ஆசிரியர்களுக்கு ஒரு புனிதமான பொறுப்புக் காத்திருக்கின்றது. பேராசிரியர் Lauwerys என்பவர் "சிறந்த கல்வித் திட்டங்கள், பாடவிதானங்கள், முறைகள் சாதனங்கள் யாவும் தரமான பொறுப்புள்ள ஆசிரியரில்லாவிடின் பயனற்றவையாகும்" என்று கூறியிருக்கின்றார். எங்கள் கலாசாலையிற் பயிற்சியை முடித்துக்கொண்டு இந்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் சேவை செய்ய விருக்கும் நமது ஆசிரியர்கள் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் அணிகலன்களுடன் இந்நாட்டின் முன்னேற்றத்தையும் நமது நற்பெயரையும் கருத்திற் கொண்டு சேவை செய்வார்களென்பதில் ஐயமில்லை.

அவர்கள் சகல ஐசுவரியங்களையும் பெற ஆண்டவன் அருள்பாலிப்பானாக.

திரு. வி. கந்தசாமி
(அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிபர் வாழ்த்துகிறார்



கலாசாலை அதிபர்

**உயர் திரு. வி. கந்தசாமி**

B. Sc. (Hons.) Dip-in-Ed. (Cey.)
Dip-in-Ed. (Lond.) A. C. E. (Oxon.)

அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL BOARD



*Seated L to R :-* M. H. M. Ismail, M. Z. Kamaldeen (Treasurer), M. S. A. Saroor (Vice-Patron), V. Kandasamy (Principal), A. M. M. Ramzeen (President), M. M. Rahim (Sec. Ed.), M. S. Amanullah (Editor).

*Standing L to R :-* M. H. Hafeel, M. A. Azeez, M. M. Azeez, M. A. M. Azhar, A. J. Mohamed, T. Moosa.

*Absenties :-* M. S. M. Hardy (Secretary).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975

# யாழ் பிறை

சஞ்சிகைக் குழு

★

இதழாசிரியர் :

எம். எஸ். அமானுல்லா

★

செயலாசிரியர் :

எம். எம். றகீம்

★

துணையாசிரியர் :

எம். எஸ். எச். ஏ. இஸ்மாயில்

★

குழுவினர் :

ஏ. ஜே. முகம்மது
எம். ஆர். ஏ. எம். அஸ்ஹர்
ரீ. மூஸா
ஏ. எம். எம். ரம்ஸீன்
எம். எஸ். எம். ஹாதி
எம். இஸற் கமால்தீன்
எம். எச். ஹபீல்
எம். ஏ. அஸீஸ்
எம். எம். எம். அஸீஸ்

இஸ்லாமிய மஜ்லிஸ்,
பலாலி ஆசிரியர் கழகம்,
வசாவிளான்,
இலங்கை.

ISLAMIC MAJLIS,
PALALY TEACHER'S COLLEGE,
VASAVILAN.
SRI LANKA.

1395

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Vice-Patron's Message

ASSALAM-U-ALAIKUM

At a time when religious, regional and language fanaticism seems to strike at our national Unity, it is my prayer that you will recall the happy days of your stay at this institution and take courage to remould the character of your community.

As passed out Trainees and old students of this college, you go out not only professionally qualified to train the whole man, but committed to fostering Social harmony and therefore national Unity. Will you be worthy of your Alma Mater?


I congratulate the Editor, the Editorial Board and the members of the Islmic Majlis for specially portraying Yazeer Arafat, leader of the Palastenian Liberation Front in your journal's cover at the time the U. N. O. and the Government of Sri Lanka recognised his leadership.

I wish you all success and assure all support and assistance for the Majlis to fulfil its cherished goal.

M. S. A. Saroor
PALALY G.T.C.
24th - Oct. - 75

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR VICE-PATRON




*M. S. A. Saroor Esq.*

**( Lecturer )**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EXECUTIVE COMMITTEE



*Seated :-* Mrs. F. Sajahan, M. S. M. Hardy (Secretary), M. Z. Kamaldeen (Treasurer) V. Kandasamy (Patron) A. M. M. Ramzeen (President), M. S. Amanulla (Editor), M. S. A. Saroor (Vice-Patron), Mrs. U. S. Mohamed.

*Standing :-* M. H. Hafeel, M. H. M. Fairooz, R. M. Nazeem, M. A. Atha-Ur-Rahman, H. M. A. Wadood.

*Absenties :-* A. C. Saifudeen (Auditor), M. A. Azeez, H. L. M. Aboobucker.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய மஜ்லிஸ்

# இவ்வருட உத்தியோகஸ்தர்கள்

போஷகர் :

திரு. வி. கந்தசாமி அவர்கள்

(அதிபர்)

உப போஷகரும், சிரேஷ்ட பொருளாளரும் :

ஜனுப். எம். எஸ். ஏ. சரூர், (பேராசிரியர்)

தலைவர் :

ஜனுப். ஏ. எம். எம். ரம்ஸீன்

உப தலைவர் :

ஜனுப். எம். எச். ஹபீல்

பொதுச் செயலாளர் :

ஜனுப். எம். எஸ். எம். ஹாதி

பொருளாளர் :

ஜனுப். எம். இஸற். கமால்தீன்

உப செயலாளர் :

ஜனுப். எம். ஏ. அலீஸ்

உப பொருளாளர் :

ஜனுப். ஆர். எம். நாஸீம்

கணக்குப் பரிசோதகர் :

ஜனுப். ஏ. சி. சைபுத்தீன்

பத்திராதிபர் :

ஜனுப். எம். எஸ். அமானுல்லா

செயற்குழு :

மௌலவி எச். எல். எம். அபூபக்கர்
ஜனுப். எச். எம். அப்துல் வதூத்
,, எம். ஏ. அவுத்தாவுர் ரகுமான்
,, எம். எச். எம். பைரூஸ்
ஜனுபா எப். சாஜகான்
ஜனுபா யு. எஸ். முகம்மது

1976 செப் 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத்
தேவையான

- O சேர்ட்டுகள்
- O சூட்டிங்குகள்
- O சேர்ட்டிங்குகள்
- O பழையகாட் சாரங்கள்

யாவும் மலிவாகக்
கிடைக்குமிடம்

மஜீத் ரெக்ஸ்ரைல்ஸ்

MAJEED TEXTILES
64, GRAND BAZAAR
JAFFNA.

போன்: 286

அழகிய
தங்கப் பவுண்
நகைகளுக்கும்
வைரங்களுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

கே.டி.எம். ஜுவல்லர்ஸ்

★ நகை, வைர வியாபாரம் ★

67, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

K. T. M. JEWELLERS
67, KANNATHIDDY,
JAFFNA.

*Phone:-* 531 *Grams:* "ENEMES"

N.M. SULTAN MOHIDEEN HADJIYAR & BRO:

*DEALERS IN*

No. 2, NEW MARKET,
HOSPITAL ROAD,
JAFFNA.

★

123,125,143, K.K.S ROAD,
JAFFNA.

- O FANCY GOODS
- O PRESENTATION ARTICLES
- O SUNDRIES
- O STAINLESS STEEL WARES
- O GLASS
- O ENAMEL & ALUMINIUM WARES
- O STATIONERY, GROCERIES
- O OILMANS etc......etc......


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒரு மனிதனுக்கு சமுதாயப்பற்று மட்டும் இருந்தால் போதாது. மதப் பற்றும் இருக்கவேண்டும். மதப் பற்று மட்டும் இருந்தால் போதுமா? சமுதாயப் பற்றும் மிக மிக அவசியம். ஏனெனில்,..... இவ்விரண்டும் இணைவதன் மூலமே ஒரு சிறந்த சமுதாய அமைப்பு உருவாக முடியும்.

— நழீம் ஹாஜியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனிதையர்
விரும்பும்
வகைவகையான பிடவைத் தினிசுகள்

கூறைச்சேலை வகைகள்
ஆடவர் விரும்பும்
சேட்டிங்,
சூட்டிங்
ரெடிமேட் உடைகள்

யாவும் நிதானவிலையில் பெற

# மணியம்ஸ்

16, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:
7545

* நவநாகரீக முறையில்
உங்கள் ஆடைகளைத்
தைத்து அணிய வேண்டுமா?
இன்றே நாடுங்கள்

* சிறந்த முறையில்
குறைந்த விலையில்
ஆடைகளைத் தைத்தளிக்கும்

யாழ் நகரில்

சிறந்த ஒரு ஸ்தாபனம்

# "வெல் பிற்"
# WELL FIT

20, பெரியகடை, யாழ்ப்பாணம்.

Cable: IRUMBU | Telephone: 443 (EXT)

# M. M. ABDUL CADER & Bros.

DIRECT IMPORTERS & DEALERS IN HARDWARE & BRASSWARE GOODS

WHOLESALE & RETAIL MERCHANTS

*BANKERS:*
THE COMMERCIAL BANK OF CEYLON LTD.
JAFFNA.

*STORES:*
14, Stanley Road, JAFFNA.
10, Manipay Road, JAFFNA.
No. 97, K. K. S. Road,
JAFFNA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பாளிகள்

| | | |
|---|---|---|
| இளங்கிரன் | ※ | ஏ. எல். அப்துல் மஜீது |
| செ. யோகராசா | ※ | எஸ். எம். பளீல் |
| எம். ஏ. ஷம்சுதீன் | ※ | எம். எஸ். ஏ. சரூர் |
| ஏ. எஸ். இபுராகிம் | ※ | எம். எஸ். எம். ஹாதி |
| திக்குவல்லை—கமால் | ※ | அன்பு ஜவஹர்ஷா |
| ஏறுவூர் அஜிவத் | ※ | மூதூர் முகைதீன் |
| எம். எம். றகீம் | ※ | எம். எஸ். எம். ஹுஸைன் |
| ஜமீலா இஸ்ஸதீன் | ※ | எஸ். அபூசாலிஹ் |
| எம். எம். எஸ். சஹிரியா | ※ | எம். எம். எஸ். யு. பதுரியா |
| எம். எச். எஸ். ஏ. இஸ்மாயில் | ※ | ஜமாலி |
| எம். ஆர். எம். ஏ. அஸ்ஹர் | ※ | ரஹ்மத் |
| யூ. எல். எம். சாலிஹ் | ※ | எஸ். ராசிக்பரீத் |
| பாணந்துறை நவீர் | ※ | எம். ஏ. லத்திப் |
| அ. கா. சைபுத்தீன் | ※ | தோப்பூர் ஸகீத் |
| எப். ஏ. ஷரீப்தீன் | ※ | எம். எம். றபீக் |
| புரட்சிக் கவிஞன் 'கே' | ※ | எச் எம். கபீர் |

அட்டை: கலைவாதி கலீல்

அட்டையில்:- யசிர் அரபாத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The Yarl Crescent

1975

# நமது வளர்ச்சி

வரலாற்றுப் பெருமைகொண்டவர்கள் நாம்.

ஏகாதிபத்தியவாதிகளை விரட்டுவதில் இந்நாட்டு சிங்கள அரசர்களுடன் தோளோடு தோள்நின்று போரிட்ட வரலாறு நம்முடையது. இந்த நாட்டின் தேசிய வளர்ச்சியோடு நம்மைப் பிணைத்துக் கொண்டவர்கள் நாம்.

நமது வளர்ச்சி வேறு, நமது நாட்டின் தேசிய வளர்ச்சி வேறு என எப்போதும் நாம் பிரித்துப் பார்த்தது கிடையாது.

இந்நாட்டில் கலாச்சார மாற்றங்கள், அரசியல் புனரமைப்புகள், ஏனையதுறை வளர்ச்சிகள் ஏற்படும் போதெல்லாம், அதற்கு நாம் நமது பங்களிப்பை செய்துதான் வந்திருக்கின்றோம்.

பொருளாதார வளர்ச்சியிலும், கல்வித்துறை மறுமலர்ச்சியிலும் ஈழத்து முஸ்லிங்கள் என்றைக்கும் தாய் நாட்டுப் பற்றுடன் உழைத்து வந்திருக்கின்றார்கள்.

தேசிய ஐக்கியத்துடன், தேசிய நலத்துடன் தங்களைப் பிணைத்துக் கொண்டுள்ள ஈழத்து முஸ்லிங்கள் இன்றைக்கும், இந்நாட்டின் தேசிய இனங்களுள் ஒன்றாகச் சிறப்பாகக் கணிக்கப்படுகின்றர்.

தேசிய உணர்ச்சிபற்றிய சந்தேகத்திற்கு நாம் என்றும் உள்ளானது கிடையாது; அதுபோன்ற நிகழ்ச்சிகளுக்கு நாம் இடம் வைத்ததும் கிடையாது.

இத்தனை ஆரோக்கியமான — வளமான பின்னணிகளுடன் மிகச்செழுமையாக வளர்ந்து வருபவர்கள் நாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்—

மற்ற தேசிய இனங்களின் வளர்ச்சியோடு ஒப்பிடுகையில், இன்றைய நமது நிலை என்ன?

ஏனைய சமூகங்களோடு இணைத்துப் பார்க்கையில், ஈழத்து முஸ்லிங்கள், கல்வியில் பெருமளவு பின்தங்கி இருக்கிறார்கள்; பொருளாதார வளர்ச்சியில் பரிதாபத்துக்குரியவர்களாக இருக்கின்றார்கள்.

இந்த இஸ்தம்பித நிலை ஏன்? இந்த வரட்சியான நிலைக்கு யாது காரணம்?

அடிப்படைக் காரணங்களுக்கான தேடலும், தெளிவான தரிசனங்களும், அவற்றைக் களைவதற்கான ஆராய்ச்சியுமே, இன்றைய முன்னணி—உடனடி நடவடிக்கைகள் ஆகும்.

இந் நாட்டிலுள்ள 22 மாவட்டங்களிலும் முஸ்லிங்கள் பரவலாக வாழ்கின்றார்கள். முறைமையற்ற கல்வித்திட்டம் இதுவரை அமுலில் இருந்தகால கட்டத்தில் முஸ்லிங்கள் போதியளவு கல்வியறிவு பெறக்கூடிய வசதிகளைப் பெற்று இருந்தார்கள் என்று கூறுவதற்கில்லை. ஆனால், இன்று, நிலைமை ஓரளவுக்கேனும் மகிழ்ச்சி தரக்கூடிய அளவில் மாறி இருக்கின்றது. இந்த உவப்பான சூழ்நிலையை நமது சமூகம் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, கல்வி வளர்ச்சியில் பிரக்ஞையுடன் செயலாற்றியாக வேண்டும்.

கடந்துவிட்ட அரசியல் சூழ்நிலைகள் எப்படி இருந்தபோதிலும், தற்போதய நிகழ்கால அரசியல் மாற்றங்களையும், அதன் அடிப்படையில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற பொருளாதார புனர் அமைப்புக்களையும் நாம் சிரத்தையோடு அவதானிக்க வேண்டும். வளமான பிரஜைகளை உருவாக்குவதற்காக இயற்றப்பட்டு வருகின்ற சோஷலிச பொருளாதாரத் திட்டங்களின் அடிப்படையில், நாடு சுபிட்சப் பாதையில் முன்னேறிவருவதை நாம் ஏற்றுக் கொண்டாக வேண்டும். எனவே, எமது பொருளாதாரச் சீர்குலைவை நிமிர்த்துவதற்கு தெளிவான சிந்தனைப் போக்குடனும், தீர்க்கதரிசனத்துடனும் நாம் செயற்பட வேண்டும்.

நாட்டின் இதர தேசிய இனங்களோடு நாமும் நிகரான வளர்ச்சி பெறுவதற்கு, கல்வி, பொருளாதார துறைகளில், துரித கதியினில் முன்னேற வேண்டியது அவசியமாகும்.

வளர்ந்துவரும் புதிய தலைமுறையினரின் சுபிட்சம், நமது கரங்களிலும், நமது தீர்க்க தரிசனத்திலுமே தங்கி இருக்கின்றது. நவீன உலகின் வளமிக்க பிரஜைகளாக மாறவிருக்கின்ற நமது இளைய தலைமுறையினருக்கும் நாம் விட்டுச் செல்லவிருக்கின்ற அழியாத சொத்துக்கள், இன்றைய நமது சிந்தனை வளர்ச்சியும், செயற்பாடுதான்.

நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதை வரலாறு, வெகு ஆவலுடனும், முனைப்புடனும் பார்த்துக் கொண்டிருக்கிறது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் முகம்

ஆண்டுதோறும் புதுப் பொலிவுடன் ஒளிக் கோலம் பரப்புவதில் ''யாழ்பிறை'' எப்போதும் தவறியது கிடையாது. இவ்வருடமும், அதனை இலக்கியப் பொலிவுடன் வெளியிடும் காரியமும் சித்தித்திருக்கிறது.

வழமைபோல் ''யாழ்பிறை'' வெளியீடு பற்றிய எண்ணம் கருத்தில் 'சூல்' கொண்டபோது அதன் செலவினங்கள் கொஞ்சம் அதிர்ச்சி தரத்தான் செய்தது. என்றபோதும், சஞ்சிகையினை சிறப்பாக வெளியிட்டே தீருவது என்ற அங்கத்தவர்களின் திடசித்தமும், பலருடைய ஒத்துழைப்பும் இணைந்து, மலரை 'பிரசவிக்கச்' செய்தது.

வழக்கமான உள்ளடக்கத்திற்கு புறம்பாக ''யாழ்பிறை'' க்கு இவ்வருடம் வேறுபட்ட புதுத் தரிசனங்களைச் சேர்ப்பதில், சற்றே அக்கறை கொண்டு, உழைத்தோம். தற்போதைய ஆற்றல் இலக்கியத்துறையின் போக்கையும், அதன் வளர்ச்சியின் வேக பரிமாணங்களையும் ஏற்றுக்கொண்டு அந்தத் திசையில் நாமும் உழைத்தல் பயனுடையதே! இம் முயற்சியில் வெற்றி பெற்ற சிறு களிப்பையும் இப்போது உணரமுடிகிறது.

தரப்பட்ட சிறுகால இடைவெளிக்குள், அபூர்வ சிருஷ்டிகளை ஆக்கித் தந்துதவிய வெளி எழுத்தாளர்களுக்கு எம் இதயபூர்வமான நன்றி. நமது அங்கத்தவர்களும், மிகத் திறமையாக தங்கள் ஆக்கங்களை சிருஷ்டித்ததை பெருமையோடு நினைத்துப் பார்க்கையில், சஞ்சிகையின் விஸ்தீரணக் குறைவினால் எல்லாவற்றையும் வெளியிட முடியாத வேதனையும் நெஞ்சில் நெருடுகின்றது.

''யாழ்பிறை''யின் அழகு நிறத்திலும், தரத்திலும் நீங்கள் சற்றேனும் மகிழ்ச்சியும் திருப்தியும் கொண்டால், அவ் வெற்றி முழுவதும் இவ் வெளியீட்டில், ஒத்துழைத்த சகலருக்கும் உரித்தாகிறது.

எதிர்காலத்தில் மேலும் பல சஞ்சிகைகள் தோன்றி இலங்கையில் இலக்கிய வளம் பெருக்க வேண்டும் என்பது எமது உள்ளார்ந்த அபிலாஷை!

எமது தார்மீக வெற்றியும் அதுதான்.

★ இதழாசிரியர் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூய இஸ்லாம்

## கண்ட

# ஜனநாயக சோஷலிசம்

*

எம். ஆர். ஏ. எம். அஸ்ஹர்
(ஏகுவருடம் — உடற்கல்வி)

தூய இஸ்லாம் ஒரு சமயம் மட்டுமல்ல அது சிறந்ததொரு வாழ்க்கைத் திட்டமுமாகும். ஒழுங்கு முறையுடன் கூடிய சமுதாய அமைப்பும் முழுமையான நாகரீகமும் அமைந்ததே இஸ்லாம். இறைவன், மனிதன், சமூகம் இம்மூன்றையும் ஒன்ருய் இணைக்கும் இஸ்லாம் சர்வாதிகாரத்தையும் முதலாளித்துவத்தையும் வன்மையாகக் கண்டிக்கிறது.

இஸ்லாம் முதலாளித்துவ அமைப்பை ஒழிப்பதற்கான திட்டங்களை வகுத்துள்ளது. ஏகாதிபத்தியவாதம், பிரபுத்துவ முறை, முடியாட்சிமுறை ஆகியவற்றையும் இஸ்லாம் வெறுத்தொழிக்கின்றது. அதே வேளையில் குடியாட்சி முறை, ஜனநாயகம், சோஷலிஸ அமைப்பு ஆகியவற்றை இஸ்லாம் வரவேற்கின்றது.

### ஏகபோகம் :

இஸ்லாமியப் பொருளாதாரமுறை முதலாளித்துவ அமைப்பாக உள்ளது என்ற தவருன அபிப்பிராயம் தற்பொழுது உலகில் நிலவிவருகிறது. இது உண்மைக்கு முற்றும் அப்பாற்பட்டது. பொதுவாக ஆராயுமிடத்து இஸ்லாம் ஜனநாயக அடிப்படையிலான சோஷலிஸ அமைப்பையே விரும்புகிறது என்பது புலனுகிறது என்பது புலனுகிறது தனிப்பட்ட முறையில் சொத்துக்களை வைத்துக்கொள்வதை இஸ்லாம் அனுமதிப்பதாயினும் ஒரு சிலரிடம் மட்டும் செல்வம் குவிந்துகிடப்பதைத் தடை செய்கின்றது. இதனையே ஏழைவரி, தருமம் முதலான வழிகளால் வறியோர்களை கௌரவிக்கும் படி இஸ்லாம் தூண்டுகிறது.

### வறுமைக்கு நிவாரணம் :

பணத்தைப் பதுக்கி வைப்பதையும், அதை ஒரே இடத்தில் குவியலாகச் சேகரித்து சுகபோகம் அனுபவிப்பதையும் இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கிறது. தேவைக்கு மேற்மேற்பட்ட பணம் மற்றும் பொருள்கள் மீது கடுமையான வரி விதிப்பின் மூலம் தேவையுள்ளவர்களின் நன்மைக்கு வழி வகுக்கிறது.

பெருமானூர் (ஸல்) அவர்கள் ''உள்ளவர்களிடமிருந்து எடுத்து இல்லாதவர்களுக்குப் பகிர்ந்தளியுங்கள்'' எனக் கூறியுள்ளார்கள். பரவலாகப் பகிர்ந்தளிக்கும் ஒரு முறை மூலம் வறுமையை நீக்க திருமறையில் விதிகள் கூறப்பட்டுள்ளன ''செல்வம் செல்வந்தர்கள் மத்தியில் மாத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழன்று கொண்டிருக்க அனுமதிக்க முடியாது'' (திருமறை அத். 59.வச. 7) செல்வந்தர்களிடம் மட்டும் செல்வம் சுழன்று கொண்டிருக்கும் முறைக்கு இஸ்லாமியப் பொருளாதாரதிட்டத்தில் இடமில்லை.

திருமறை கூற்றும் எம் பெருமானார் (ஸல்) அவர்களின் போதனையும் செல்வம் சமமாகவும் பரவலாகவும் பகிர்ந்தளிக்கப்பட்டு செயல்படுத்தக்கூடிய முறையைச் சுட்டிக்காட்டுகிறது.

### சமூக சேவை :

''அல்லாஹ்வின் குடும்பத்திற்கு அதாவது மனித இனத்திற்கு சிறந்தவனாக உள்ளவனே மனிதருள் உயர்ந்தவனாவான்'' என்பது பெருமானார் (ஸல்) அவர்களின் வாக்காகும். சமூக சேவைக்குள்ள உச்ச மதிப்பை இது தெளிவாக விளக்குகிறது. மறைகூறும் பெரிய அறம் இதுவேயாகும்.

### ஸக்காத் (ஏழைவரி)

ஸக்காத் அல்லது ஏழைவரி இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்று. இது கடமையாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் தம்மிடமுள்ள செல்வத்திற்கு 2½ சதவிகிதம் ஏழைவரி செலுத்த வேண்டும். வருடா வருடம் கிடைக்கும் லாபத்திற்கோ, வருமானத்திற்கோ கொடுக்கக்கூடிய வரியாக இது அமையமாட்டாது. வருமானம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் வருட இறுதியிலுள்ள முழுச் செல்வத்துக்கும் இவ்விகிதப்படி வரிசெலுத்தியாக வேண்டும் என்பதை இங்கு நன்கு கவனிக்கற்பாலது. இதைச் ''சமுதாய நலவரி'' என்றும் அழைக்கலாம்.

எல்லா விதிகளிலும் இஸ்லாமிய பாகப்பிரிவினை விதிமுதலாளித்துவ முறைக்கு முற்றும் எதிரானது. இம்முறைப்படி இறந்தவரின் செல்வம் பரவலாக உறவினர்கள் மத்தியில் தாராளமாகப் பகிர்ந்து வழங்கப்படுகிறது.

### அரசின் கடமை :

இஸ்லாம் தனிமனிதனின் நலனைவிட சமுதாய நலனையே பெரிதும் மதிக்கிறது. வாழ்க்கைக்கு அத்தியாவசியதேவைகளான சுகாதார சேவை, இலவசக்கல்வி என்பவற்றை நாட்டின் ஒவ்வொரு பிரஜைக்கும் கிடைக்க வழிசெய்யவேண்டுமென எல்லா இஸ்லாமிய அரசுகளுக்கும் இஸ்லாம் கட்டளையிடுகிறது. தங்கள் தேவைக்கதிகமாக வைத்திருக்கும் செல்வந்தர்கள் மீது இஸ்லாம் ''சமூக காப்புறுதி'' வரி விதித்துள்ளது. இஸ்லாம் சுதந்திர வர்த்தக முறையையே அனுமதிக்கிறது. 'ஊழியர்களின் கூட்டுறவுமன்றம்'' அமைப்பதையே நன்று எனக்கருதும் இஸ்லாம் இவ்வித மன்றங்கள் மூலம் எல்லா விதமான முதலாளித்துவக் கொள்கைகளும் அமைதியின்மையும் நாசசக்திகளும் ஒழியும் எனக் கொள்கை விளக்கம் தருகின்றது. பொருளாதாரத் துறையில் முதலாளிக்கும் தொழிலாளிக்குமிடையில் சம நிலையை உருவாக்க இஸ்லாம் விதிகள் வகுத்துள்ளது. நியாய பூர்வமான வருமானம், நியாய மற்ற வருமானம் இவ்விரண்டையும் கோடிட்டுக் காட்டும் இஸ்லாம் நியாய பூர்வமான செலவினத்துக்கும் வரையறை வகுத்துள்ளது.

பொருளாதாரத்துறையில பாரதூரமான ஏற்றத்தாழ்வுகளின்றி மக்களின் வாழ்க்கை இருந்து வந்ததை இஸ்லாமிய பொற்காலத்தில் காணக்கூடியதாக இருந்தது. பிரபுத்துவ சமுதாய மக்களிடையே உபயோகத்தில் இருந்துவந்த தங்கம், வெள்ளியிலான வீட்டுப்பாத்திரங்களை முஸ்லிம்கள் உபயோகிப்பதை இஸ்லாம் தடை செய்துள்ளது. மேலும் ஆண்கள் சில வகை ஆடம்பர ஆடைகள் அணிவதற்கும் இஸ்லாம் தடைவிதித்துள்ளது. அதற்கு ஒரு விதியும் வகுத்துள்ளது. அவ்விதியின்படி ஒருவனிடம் தம் செலவு போக மேலதிகமுள்ள செல்வம் அல்லாஹ்வின் பாதுகாப்புச் செல்வம் என்றும் இது சமுதாய நலனுக்கு உபயோகிக்கப்பட வேண்டுமென்றும் பணிக்கப்பட்டுள்ளது. இஸ்லாமியப் போதனை எழுத்திலும் கருத்திலும் பேணப்படுமானால் எவ்வகையான சமுதாய பிரச்சினைகளும் தலைதூக்காது.

### வழிகாட்டி :

திருக்குர்ஆன் முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி உலகமக்கள் அனைவருக்குமே ஒரு வழிகாட்டி ''மனிதவர்க்கம் ஒரே இனம்'' என்று திருமறை கூறுகின்றது. ''மனிதவர்க்கம் அனைத்துக்கும் (முஹம்மதே !) உம்மை நாம் கருணையாகவே அனுப்பியுள்ளோம்'' இதுவும் இறைமறை கூறும் அறவுரையாகும். திருமறையை கிளிகள் போன்று ஓதுவதால் என்னபலன்? இறைமறையின் ஒவ்வொரு வசனத்தையும் ஆழ ஆராயும்படி இறைவன் கட்டளையிட்டுள்ளான்.

கதிரவன், அம்புலி, பூமி, வேட்டையாடுதல், மீன்பிடித்தல் கால் நடை வளர்த்தல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல் விவசாயம், காடு பராமரித்தல், தோட்டச் செய்கை செய்தல், சுரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம் தோண்டல், முத்துக்குளித்தல், கப்பல் கட்டுதல், கண்ணாடிப் பொருள்கள் செய்தல், ஜவுளி, பட்டாடை, நகை, தோல், மரச்சாமான்கள் விளையாட்டுப் பொருள்கள் இப்படியான பல பொருள்கள், தொழில்கள் பற்றிய விளக்கங்களும் திருக்குர் ஆனில் தரப்பட்டுள்ளன.

**அரசும் குடிகளும் :**

''மனிதவர்க்கம் அனைத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டாக விளங்க உயர்ந்த நிலைக்கு ஆக்கப்பட்ட ஒரு கூட்டம் முஸ்லிம்கள்'' என்பதை இஸ்லாம், இனம் பிரித்து, வகைபடுத்திக்கூறுகிறது முஸ்லிம் அல்லாதவர்களுடன் நட்புறவு கொள்ள வேண்டுமென திருக்குர் ஆனில் அற உறைகள் கூறப்பட்டுள்ளன. அரசு கட்டளைகளுக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று முஸ்லிம்களையும் எல்லாப் பொது விவகாரங்களிலும் அரசு மக்களைக் கலந்து ஆட்சி செய்ய வேண்டுமென்று அரசையும் வலியுறுத்துகிறது திருக்குர் ஆன். நாட்டில் அமைதியின்மையை உண்டாக்குவது மக்களைக் கொலை செய்வதைவிட படுமோசமானது'' என் திருமறை கூறுகிறது.

**பெண் உரிமை :**

இஸ்லாம் சகல துறைகளிலும் பெண் இனத்தின் தரத்தையும் அந்தஸ்தையும் உயர்த்தியுள்ளது. ஆண்கள் பெண்களுக்கு சீதனம் (மஹர்) கொடுக்கவேண்டுமென இஸ்லாம் கட்டளையிட்டிருக்க அதற்கு நேர் முரணாக பெண்கள் ஆண்களுக்கு சீதனம் (கைக்கூலி) கொடுக்கிறார்கள். இது சமுதாயத்தின் சாபக்கேடும், மா பெரும் இழிவுமாகும். இது இஸ்லாமிய தத்துவங்களுக்கே நேர்மாற்றமான முறையாகவும் இருக்கிறது.

**ஒழுக்க முறைகள் :**

ஒழுக்க வாழ்வுகள் பற்றி திருமறையில் அநேக வசனங்களில் வலியுறுத்தப் பட்டுள்ளன. அறம், வீரம், மன்னிப்பு, சகிப்பு, பொறுமை, விடாமுயற்சி, பரிசுத்தம், சுயக்கட்டுப்பாடு, உண்மை நன்றி, விசுவாசம், சுயநலமின்மை, அன்பு இப்படியான பல பொருள்கள் பற்றி திருமறையில் கூறப்பட்டுள்ளன.

தொழில் பிரச்சினைகள், செல்வம், விநியோகம், செலவாணி, செல்வ உபயோகம் இப்படியான பல திட்டங்களுக்கும் 14 நூற்றாண்டுகட்கு முன்பே இஸ்லாம் தீர்வுகள் கண்டுள்ளது. சுருங்கக் கூறின் இஸ்லாம் ஒழுக்க முறை தழுவிய ஜன நாயக சோஷலிஸத்தையே வரவேற்கிறது.

**விட்டுச் சென்றவை**

பாரசீக ஏகாதிபத்திய பேரரசைத் தகர்த்த மாவீரர் காலித் (ரலி) அவர்கள்:—

ஓர் அடிமை, ஒரு குதிரை, ஒரு வாள்.

பாரசீக ரோம் ஏகாதிபத்தியங்களை பணியவைத்து அவற்றை இஸ்லாமிய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்த கலீபா ஹஸரத் உமர் (ரலி) அவர்கள்:—

ஒரு கிழிந்த ஆடை, 5 தினார்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்:—

ஓர் ஒட்டுப் போட்ட ஆடை, பேரீச்ச ஓலையால் நிரப்பப்பட்ட தோற் படுக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மா மறையே

எம். எச். ஏ. எம். இஸ்மாயில்
(புகுவருடம் — விவசாயம்)

பேரருளான் பெருங்கொடையே ! பெருமானாரால்
பெற்றளிக்கப்பட்ட பெரும் அறிவே ! செல்வம்
புரளுகிற மாமறையே ! மனித வாழ்வின்
பண்புகளை விண்டுரைக்கும் ஞான ஊற்றே !
சீரழிந்த மனிதகுலச் சிறப்புக்கென்று
செயற்படுத்த இறையழித்த குர்ஆனே ! நின்
நேரறிவைப் பெற்றறியோம்; இழந்து நின்று
நெட்டுருவி நிற்கின்றோம் ; மூறையிட்டாவோம் !

மேடையிலே பிரசங்கம் நிகழ்த்துகின்ற
மேலோட்டக் கருத்துடைய பேச்சாளர்கள்
ஓடிவரும் உன்பொருளில் இரண்டு மூன்றை
எடுத்தவரின் புதுக்கருத்துக் கேற்றாற்போல
சோடித்து விடுகின்றார் ; உன்னை முற்றாய்ச்
சார்ந்தறியார் ; இப்பொருளைக் கூறலாலே
முடிவான பொருளின்றி பிரச்சினைக்குள்
மூழ்கிப்போய் பாமரரும் வாடுகின்றார் !

''கந்தூரிச்'' சோற்றுக்கும் இறந்து விட்டோர்
கபுறுடைய வேதனையைக் இறைப்பதற்கும்
முந்தியவர் ''ஹத்தத்தை'' ஓதுதற்கும்
முல்லாக்கள் உன்னைத்தன் கையிலேந்தி
சந்திகளில் வலம் வந்து காசுசேர்த்து
சரித்திரத்தைப் படைக்கின்றார்; இதனை எண்ணில்
விந்தைதான் ; என்செய்வேன் ; உன்னைவைத்து
வயிற்றூட்டம் பெறுகின்றார் ; வாழுகின்றார்

உள்ளத்தில் எழுகின்ற உணர்விலெல்லாம்
உலகத்து வாழ்வுடைய பண்பிலெல்லாம்
அள்ளுண்டு வருகின்ற பிரச்சினைக்கு
அறிவூட்டி அடக்குகிற ஞான ஊற்றே
துள்ளுகிற வெல்லரிய உனது கொள்கைத்
திறன்பூண இறையருளை வேண்டி நிற்போர்
உள்ளத்தில் உணர்வூட்டு ; உலகமக்கள்
உணர்வுகளில் உன்னொளியைப் பதியச் செய்வாய் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்லாமிய தத்துவம் கூறும் மனிதனின் யதார்த்த நிலை

* எம். ஏ. ஷம்சுதீன் B. Sc., Dip-in-Ed.
( விரிவுரையாளர் )

இஸ்லாமிய தத்துவம் குர்ஆனையும், ஹதீசையும் அடிப்படையாகக் கொண்டு இயங்கும் அதே நேரத்தில் மற்றத்தத்துவங்களின் சேர்க்கையாகவும் திகழ்கின்றது. இஸ்லாமிய தத்துவம் இஸ்லாத்தின் சமூகக் கொள்கைகளுக்கும் அரிஸ்தோட்டல், பிளேட்டோ போன்ற கிரேக்க தத்துவ ஞானிகளின் கொள்கைகளுக்குமிடையே பொருத்தங்காணும் நோக்கத்திலேயே வளர்ந்து வந்தது. இந்த முயற்சியில் ஈடுபட்ட இஸ்லாமிய சிந்தனை காலப்போக்கில் வளர்ச்சியடைந்து தத்துவங்கள் (Philosophy) தர்க்க நடைகள் (Dialectics) ஆத்மீக ஞானம் (Mysticism) ஆகிய உருவங்களில் வெளிப்படலாயிற்று.

இஸ்லாமிய தத்துவ ஞானத்தை ஆராயப்புகுமுன் கிரேக்க தத்துவ ஞானமும், பின்னல் உதயமாகிய இயற்கை வாதமும் மனிதனின் யாதார்த்த நிலையினைப்பற்றிக் கூறும் விளக்கங்களை இங்கு கவனித்தல் பொருத்தமாகவே இருக்கும்.

கிரேக்க தேசத்தில் சிந்தனையாளர்கள் தோன்றி உண்மைப் பொருள்பற்றிய அறிவைத் தேடுவதில் ஈடுபட்டனர். இது ஆரம்பத்தில் தர்க்க நடைகளாகவிருந்து பின்பு சோபிஸ்டுக்கள் என்னும் தத்துவ ஞானிகளின் காலத்தில், இப்பிரபஞ்சத்தின் அமைப்பு, இறைவனின் யதார்த்த நிலை, மனிதனின் தன்மை என்பனபற்றிய விடயங்களை அறிவதில் ஒரு கட்டுக்கோப்பான நிலையில் சிந்தனை சென்றபோது பல்வேறு பிரிவுடைய தத்துவங்கள் உருவாகின. இக்காலத்தில் தோன்றியதுதான் கருத்துவாதமும். இது ஆத்மாவுககு முக்கிய இடத்தைக் கொடுக்கின்றது. ஆத்மா அழியாத தன்மையுடையதென்றும், ஆத்ம விருத்தியைப் பெறுவதே மனிதவாழ்க்கையின் இலட்சியமாக அமைய வேண்டுமென்றும் அவ்விலட்சியத்தைப் பெறுவதற்கு ஒழுக்கநெறிகளை மனிதன் பின்பற்றவேண்டுமென்றும் கருத்துவாதம் கூறுகின்றது. கருத்துவாதிகளின் இச்சித்தாந்தம் இஸ்லாமிய சித்தாந்தத்தோடு இரண்டறக் கலந்து காணப்படுகின்றது. எனினும் பெரியடெடிக்ஸ் (Peripetetics) என்ற தத்துவ ஞானிகளின் குழுவைச் சேர்ந்த இக்கிரேக்க தத்துவ ஞானிகள் ''இப்பிரபஞ்சத்தின் சகல மர்மங்களையும் அறிவதற்கு மனித அறிவும் சிந்தனையும் போதுமானது'' என்று கூறுவது இஸ்லாமிய தத்துவ ஞானத்திற்கு முரணானவையாக இருக்கின்றது. இஸ்லாமிய தத்துவஞானிகளில் முடித்தன்மையிடத்தை வகிக்கும் விதர்க்க சித்தாந்தவாதி (Scholastic-dialection) யான இமாம் கஸ்ஸாலி ''சிந்தனையின் மூலம் உலக அறிவைப்பெற முடியுமே தவிர, யதார்த்தமான அறிவையோ, பிரபஞ்சத்தின் மர்மங்களைத் தெரிந்துகொள்ளும் அறிவையோ பெறமுடியாது'' என்று எதிர்ப்புத் தெரிவிக்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றூர். இமாம் கஸ்ஸாலி எழுதிய ''அல்முன் இது மின்ளலால்'' என்ற நூலில் ''இறை ஞானமே அறிவின் மூலம்; சிந்தனையினு லும் பகுத்தறிவினுலும் யதார்த்தமான அறிவைப்பெறமுடியாது'' என்று மிகத் தெளிவாக விளக்கி இருப்பதுடன் கிரேக்க தத்துவங்களிலுள்ள முரண்பாடுகளேயும் தோல்விகளையும் சுட்டிக் காட்டத் தவற வில்லை.

இனி கிரேக்க தேசத்தில் பிறந்து, ஐரோப்பாவில் வளர்ச்சியுற்று 18ம் 19ம் நூற்றுண்டுகளில் பிரபல்யம் அடைந்த சடவாதம் மனிதனின் யதார்த்த நிலைபற் றிக் கொடுக்கும் விளக்கத்தினை இங்கு கவனிப்போம். சடப்பொருளுக்கு முக்கியத் துவம் அளிக்கும் சடவாதம் மனிதனில் உடல், ஆத்மா ஆகிய இரு வெவ்வேறு அம்சங்கள் இருப்பதை மறுக்கின்றது. சடவாதத்தில் ''ஆத்மா'' என்ற சொல் லுக்கு இடமில்லை. உடலில் பொருத்தி இருப்பது உளமாகும். உளம் என்பது மூளையின் செயற்பாடாகும். உடல் இறக் கும்போது உளமும் இறந்துவிடுகின்றது. ஒருவனது இறப்போடு எல்லாமே முடிந்து விடுகின்றது என்கின்றனர் சடவாதிகள்.

சடவாதிகளின் ஒரு பிரிவினரான உயி ரியல் இயற்கை வாதத்தினர் (Biological naturalists) மனிதனுக்குக் கொடுக்கும் அந்தஸ்து பரிதாபத்துக்குரியது. பரிணும வளர்ச்சிப்படியில் தாழ்ந்த ரக உயிரிகளி லிருந்து படிப்படியாக மாற்றமடைந்து உயர்ந்த அந்தஸ்தைப்பெற்ற விலங்கே மனிதன் என்று கூறுகின்றது இயற்கை வாதம். அதாவது, விலங்குகளைவிட சற்று உயர்ந்த இடத்தையே மனிதனுக்கு இயற் கைவாதம் அளிக்கின்றது.

மனிதன் விலங்குகளிலிருந்து வேறுபட் டவன் என்பதை உணரத் தவறிவிட்டது இயற்கைவாதம். மனிதன் விலங்கைவிட அறிவு சக்தி ஆகியவைகளில் எவ்வளவோ மேன்மையுடையவன். உயர்ந்த ரகத் தைச் சேர்ந்த விலங்குகளில் ஓரளவு அறிவு காணப்படுகின்றது. அறிவை அனுபவவாயி லாகப்பெறலாம். விலங்குகளும் ஓரளவுக்கு அறிவை அனுபவவாயிலாகவே பெறுகின் றன. ஆனுல் அமரத்தன்மை வாய்ந்த சக் தியை (குத்ரத்) மனிதன் பெற்றிருக்கின் றுனே? ஆத்ம விருத்தியைப்பெற்ற இறை தூதர்களான அவுலியாக்களும் குத்புமார் களும் எவ்வளவோ அற்புதங்களைச் செய்து காட்டுகின்றனரே? இறைதூதர்களும் மனி தர்கள்தான்என்பதை மறந்துவிடலாகாது. விலங்குகளிலில்லாத சக்தியை மனிதன் பெற்றிருப்பதால் அவன்விலங்குகளிலிருந்து முற்றும் வேறுபட்டவன் என்பதை நாம் அறியவேண்டும்.

சடவாதம் ''மனிதன் எங்கிருந்து வந்தான்?'' என்பதற்கு விளக்கம்கொடுக்க முயன்றுலும் ''எங்கே செல்கின்றுன்?'' என்பதற்குரிய விளக்கத்தைக் கொடுக்கத் தவறிவிட்டது. ஆகவே ''மனிதன் எங்கி ருந்து வந்தான்? எங்கே செல்கின்றுன்?'' என்னும் கேள்விகளுக்குரிய விடைகளை இஸ்லாமிய தத்துவம் எவ்வாறு விளக்கு கின்றது என்பதைப் பார்ப்போம்.

இறைவன் தன்னிலிருந்தே சகலரு டைய ஆத்மாக்களையும் (இனிமேல் பிறக் கவிருக்கின்றவர்களுடைய ஆத்மாக்கள் உட்பட) பல கோடானு கோடி வருடங் களுக்குமுன் படைத்தான். பின்னர் இறை வன் ஆத்மாக்களிடை வாக்கெடுத்த தினத் தில் (மீதாத்நாளில்) அவ்வாத்மாக்களுக்கு அறிவும், உணர்வும் உண்டாகக் கூடிய சூக் கும உருவம் வழங்கப்பட்டது. இறைவன் அவைகளை நோக்கி ''நீங்கள் யாவரும் கீழே செல்லுங்கள், என்னிடமிருந்து உங் களுக்கு வழிகாட்டுதல் வரும். அதன்படி நடப்பவர்கள் அஞ்சவோ துயரப்படவோ மாட்டார்கள் (அல்குர்ஆன் அத் 2—ஆ38) என்று கூறுகின்றுன். ஆகவே இவ்வாத் மாக்கள் இவ்வுலகுக்கு அனுப்பப்படுகின் றன. இவ்வுலகிற்கு வரும்வரை (ஆலம் அர்வாஹ்) ஆவியுலகில் இருக்கின்றன. இவ்வுலகில் அவை தங்கும் காலத்தில் தூலசரீரம் வழங்கப்படுகின்றன.

தாயின்வயிற்றில் சிசு வளரும்போது ஆத்மா உடலை வந்து சேர்கின்றது. உடல் ஆத்மா சவாரிசெய்யும் பிராணியாகவே இருக்கின்றது. இவ்வுலகில் மனிதன் உடல், உயிர் என்பவைகளினுல் ஆக்கப்பட்டிருக் கின்றுன். மண், தண்ணீர், காற்று, நெருப்பு ஆகிய பூதங்களின் கலவையினுல் ஆனது உடல். அது அழியும் தன்மை வாய்ந்தது. உடல் அழிந்ததும் இப்பூதப் பொருட்க ளோடு இரண்டறக் கலந்துவிடுகின்றது. உயிர் உடலிலிருந்து பிரிந்துவிட்ட பிறகு உடலுக்கு எவ்வித பெறுமதியும் இருப்ப தில்லை. எனினும் உடல் உயிரின் உறை விடமாய் அமைந்திருப்பதால் உடலை விடுத்து உயிரை தனிப்பொருளாக அறிய முடியாது. உடல் உயிரின் கருவியாகக் கவனிக்கப்பட வேண்டியது. இனி உயி ரின் தன்மையைப் பற்றிக் கவனிப் போம். மனிதரில் இருவித ஜீவன்கள் (ரூஹுகள்) உண்டு. இவற்றுள் இன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய ஜீவராசிகளுடைய ஜீவனைப் போன்றது. இதற்கு ''ரூஹு ஹைறவானி'' என்று சொல்லப்படும். மற்றையது தெய்வீக இயல்புடைய சூட்சும ஆத்மாவாகும். இதை ''ரூஹு இன் சானி'' என்று சொல்லப்படும். முந்திய ஜீவனின் இருப்பிடம் இதயம் ஆகும். அதிலிருந்து ஆவியைப் போல அது வெளிக்கிளம்பி உடலின் சகல அவயவங்களிலும் ஊடுருவி நிற்கின்றது. கண்ணுக்குப் பார்வையையும், காதுக்குக் கேள்வியையும், உடலிலுள்ள அவயவங்கள் யாவற்றுக்கும் சக்தியையும் கொடுப்பது இந்த ஜீவன்தான். இந்தப் பிராணி ஜீவனை ஒரு குடிசைக்குள் எடுத்துச் செல்லப்படும் விளக்குக்கு ஒப்பிடலாம். விளக்கு எரியும் திரிதான் இந்த விளக்கின் இதயமாகும். ஏதாவது காரணத்தால் இந்தத் திரிக்கு எண்ணெய் வராதுநின்றுபோனால் விளக்கு அணைந்துவிடுகின்றது. பிராணி ஜீவனின் மரணமும் இத்தகையதே. ஆனால் சூட்சும ஆத்மாவோ அத்தகையதல்ல. அது அமரத்தன்மையுடைய சக்தியைப் பெற்றுள்ளது. ஆகையினாற்றான் பல்வேறு விதமான சிந்துக்களையும் அற்புதங்களையும் அதுசெய்யவல்லது. அது பிராணிஜீவன் மீது சவாரி செய்வதாக இருக்கின்றது. அந்தப் பிராணி ஜீவன் மாண்டபின்னரும் கூட இதுஜீவித்திருக்கின்றது. இதற்கு இறப்பேயில்லை இதை ஆத்மா (Soul) வென்றும் பிராணி ஜீவனை உயிர் (Life) என்றும் கூறலாம். இதனால் உயிர்வேறு, ஆத்மா வேறு என்பதை அறியலாம். உயிர் (ரூஹு ஹைறவானி) இறக்கும் தன்மையது என்றும், ஆத்மா இறவாத தன்மையுடையதென்றும் உணரலாம். இதுவே ஆத்மா பற்றிய இஸ்லாமிய தத்துவமாகும். கிறிஸ்தவ மதமும் இதே சித்தாந்தத்தைக் கொண்டிருப்பதையும் நாம் இவ்விடத்தில் நாம் நினைவு கூர்வது பொருத்தமானதாகும்.

அமரத்தன்மையுடைய இந்த ஆத்மா இந்தக் கீழான உடலுக்குட்புகவேண்டியது காரணம் அது ஞானமும் அனுபவமும் பெற்று பூரணத்துவம் பெறவேண்டும் என்பதே. இறைவன் போதித்த வழிகளில் செயலாற்றி பூரணத்துவத்தை அடைவதற்கு உடல் தேவையாயிருக்கின்றது. எனவேதான் உடலையும், உடலைக்கொண்டு உலகையும் ஆத்மாவுக்குக் கொழுகொம்பாக்கி உலகில் மனிதனை இறைவன் தன் பிரதிநிதியாக அனுப்பினான். ஆத்மா உடலுட் தரித்திருக்கும் காலம் மிகக் குறுகியதே. அதற்குள் அது அமரர்களின் இயல்பு பெற்று பரிசுத்தமும் ஒளியும் உள்ளதாய்ப் பிரியவுங்கூடும். அல்லது தான் உடலுக்குட் புகுந்த நோக்கத்தை மறந்து உடலிச்சைகளிலும், இம்மையின் ஆசைகளிலும் மூழ்கி சைத்தானின் தன்மையிலாகி இந்த உடலைவிட்டுப் பிரியவுங்கூடும்.

மரணம் ஏற்பட்டவுடன் ஆத்மா உடலைவிட்டும் பிரிந்து விடுகின்றன. எனினும் அதன் தன்மையில் எந்தக் குறையும் ஏற்படுவதில்லை. குதிரைமீது அமர்ந்து சவாரி செய்தவன் குதிரையைவிட்டு இறங்கியதுபோலவே உடலைவிட்டும் ஆத்மா இறங்கியதாயிருக்கும் ஆத்மா உடலைவிட்டுப் பிரிந்ததும் அதற்கு வேறோர் உருவம் உண்டாகும். இந்த உருவம் சடப்பொருளாலான உடலைப்போன்றதல்ல. தனது எண்ணங்களுக்கேற்ப பல்வேறு தன்மையுள்ள சூக்கும உருவைப் பெறவல்லது. இதற்கு உருவம் இருப்பதால் உணர்வும் அறிவும் இருக்கும். அது இம்மையில் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ப இன்ப துன்பங்களை அனுபவித்துக் கொண்டு இறுதிநாள்வரை திரையுலகில் (ஆலம் பர்சகில்) பல்வேறு மண்டலங்களில் சஞ்சரித்துக்கொண்டிருக்கும்.

இறுதிநாளில் (நீதித்தீர்ப்புநாளில்) இஸ்ராபீல் (அலை) சூர் ஊதியதும் ஆத்மாக்கள் யாவும் இம்மையில் தாம் தேடிக்கொண்ட பாவ புண்ணியங்களுக்கேற்ப உருவத்தைப் பெறுகின்றன. அதாவது இம்மையில் மிருக இச்சைக்குரிய குணம் அதிகமாயிருந்தால் மிருகங்களைப் போன்ற உருவம் கிடைக்கும். பின்பு ஆத்மாக்கள் அனைத்தும் மஹ்ஷர் என்னும் வெளியில் நிறுத்தப்படும். மஹ்ஷர்மைதானம் மிகவும் உஷ்ணம் உடையதாய் இருக்கும். நபிமார்கள் உட்பட அனைவரும் இந்த உஷ்ணம் தாங்கமுடியாமல் அவதிப்படுவர். இந்த மஹ்ஷரின் அவதியைவிட்டும் எப்படியாவது தப்புவதற்கு ஆத்மாக்கள் அனைத்தும் உலக இரட்சகர் முஹம்மதிநபி (ஸல்) அவர்களிடம் ஓடுவார்கள். நபியவர்கள் இறைவனைப் பிரார்த்திப்பார்கள். இறைவனும் நபியவர்களின் சிபாரிசுக்கு இணங்கி ஆத்மாக்களின் கஸ்டத்தைக் குறைப்பான். பின்பு கேள்விகணக்குக் கேட்கப்படும். அப்பொழுதுமக்களின் வாய்கள்முத்திரையிடப்படகால், கரங்கள் சாட்சி கூறும். ஒவ்வொருவரினதும் செய்கைகள் பதியப்பட்ட பட்டோலைகள் பறந்து வந்து அவரவர்கையில் நிற்கும். பின்பு ஒவ்வொருவரினதும் நன்மை தீமைகள் நிறுக்கப்படும். நன்மைத்தட்டுப் பாரமாயின் சுவர்க்க பதியாவான். தீமைத்தட்டு பாரமாயின் நரகவாதியாவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு நரகத்தின் முதுகிற் போடப்பட்டிருக்கும் ''ஸிருத்தல் முஸ்தகீன்'' என்னும் பாலத்தைக் கடந்து சுவர்க்க லோகத்திற்குப் போகும்படி வேண்டப்படுவர். நன்மை செய்த ஆத்மாக்களே சுவர்க்கத்திற்கு செல்வர். ஏனையோர் பாலத்தைக் கடக்க முடியாமல் நரகத்தில் விழுவர்.

எட்டு சுவர்க்கங்கள் இருக்கின்றன. அவரவர் இம்மையிற் தேடிக்கொண்ட புண்ணியங்களுக்கேற்ப சுவர்க்கத்தில் அனுபவித்துக் கொண்டிருந்தபின்பு இறைவனின் தரிசனம் கிடைக்கும். இதனால் ஒருவர் அடையும் பேரானந்தத்திற்கு எல்லையே கிடையாது. இதையே இறைவனோடு இரண்டறக் கலத்தல் என்று சொல்லப்படும். ஆத்மாவின் ஆரம்பமும், முடிவும் இறைவனாயிருக்கின்றன. இந்து தத்துவ ஞானமும், ஆத்மாவின் ஆரம்பமும் முடிவும் இறைவனே என்று வலியுறுத்துவதை நாம் இங்கு நினைவு கூற வேண்டும்.

இதுவரை ஆத்மா செய்ய வேண்டிய நீண்டபயணத்தின் தன்மையைக் கவனித்தோம். இப்பிரயாணத்தின்போது ஆத்மா இவ்வுலகில் தங்கும் காலம் மிகக் குறைவானதே. இந்தக் குறுகிய காலத்தில் ஆத்மா விருத்தியடைந்து பூரணத்துவம் பெறுவதற்குரிய கிரியைகளில் ஈடுபடவேண்டும். ஏனெனில் மரணத்தின் பிறகு ஆத்மாக்கள் எந்தவொரு புண்ணியத்தையும் செய்துகொள்ளும் ஆற்றலை இழந்துவிடுகின்றன. ஒருவன் மரணிக்கும்போது ஆத்மா எந்த நிலையில் இருக்கின்றதோ அதற்கேற்ற பலாபலனை மறுமையிலும் கிடைக்கும்.

இவ்வுலகில் ஆத்மா, தான் செய்யும் கிரியைகளுக்கேற்ப பல நிலைகளைக் கடந்து பூரணத்துவம் அடைகின்றது. பூரணத்துவம் அடைவதே ஆத்மாவின் குறிக்கோளாயிருத்தல் வேண்டும். ஆத்மா விருத்தியடைந்து செல்வதற்கேற்ப அதுபல நிலைகளையடைகின்றது. அவை பின்வருமாறு:
ஆத்மாவின் முதற்படி—நப்ஸ் அம்மாரா

இரண்டவதுபடி—நப்ஸ் லவ்வாமா
மூன்றாவதுபடி —நப்ஸுல் முல்ஹிமா
நான்காவதுபடி—நப்ஸ்முத்மயின்னா
ஐந்தாவதுபடி —நப்ஸ்ராலியா
ஆறாவதுபடி —நப்ஸ் மரலிய்யா
ஏழாவதுபடி —நப்ஸ் காமிலா

இப்படி ஆத்மாவை ஏழுவகையினதாகப் பிரித்தாலும், உண்மையில் ஆத்மா ஒன்றுதான். அதுவுண்டாகக்கூடிய பண்புகளுக்கேற்ப இந்தப் பெயர்களிலொன்றை அது அடைகின்றது. ஒருபடியிலுள்ள ஆத்மாவுக்கு அதற்கு மேலேயுள்ளபடி திரையாக அமைந்து விடுகின்றது. நப்ஸ் அம்மாராவில் இருக்கும்போது அது, அதற்குமேலேயுள்ள நப்ஸ் லவ்வாமாவுக்குத் திரையாக இருக்கிறது. இந்த நிலைகளுள் ஒன்றிலிருந்து மற்றொன்றைச் சென்றடைந்தும் மெய் நேயர்கள் தாம் இறைவனை நெருங்கிவிட்டோம் என்று எண்ணுவதுண்டு. ஆனால் ஒவ்வொரு நிலையின் தன்மையையும் அறிந்த குருநாதர்கள் அந்தந்த நிலைகளுக்கான (அமல்களை) கிரியைகளைச் செய்துகொண்டு முன்னேறிச் செல்வர்.

நப்ஸ் அம்மாரா நிலையிலுள்ள ஆத்மாவின் பண்புகளைக் கவனிப்போம். உடலிச்சைகளுக்கும் கீழான மனத்தின் சுபாவசேஷ்டைகளுக்குக் கீழ்ப்பட்டு, மிருகங்களைப்போல் வாழ்பவர்களும், பெருமை, குரோதம் வஞ்சகம் முதலிய தீய குணங்களால் உந்தப்பட்டு மிருகங்களை விடவும் மோசமாகவும் நடப்பவர்களும் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களாவார்கள். இவர்கள் எவ்வித பாவங்களுக்கும் அஞ்சாதவர்களாகவும் மரணத்தைப் பற்றிய நினைவே இல்லாதவர்களாகவும் இருப்பர் இவர்கள் இருள்என்னும் கிடங்கில் வீழ்ந்துவிட்டவர்களாவர். இந்த இருட்கிடங்கிலிருந்து மீட்சி பெறவேண்டும். இறைவனால் ஏவப்பட்டவை யாவை, விலக்கப்பட்டவை யாவை என்பதையறிந்து ஏவப்பட்டவற்றை ஏற்றும் விலக்கப்பட்டவற்றை விலக்கியும் ஒழுகவேண்டும். தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, சக்காத்து ஆகிய வணக்கங்களை பரிசுத்தமான மனத்துடன் நிறைவேற்றி பாவமன்னிப்புத் தேடவேண்டும். அப்பொழுது நப்ஸ் அம்மாராவின் ஆவேசம் குறைந்து அப்ஸ் லவ்வாமா நிலைக்கு அந்தஸ்து உயர்த்தப்படும்

நப்ஸ் லவ்வாமா:- இந்த இயல்புடைய ஆத்மாவின் தன்மையானது, சன்மார்க்க நெறிமுறைக்கான (அமல்களை) கிரிகைகளை எடுத்து நடத்துவதில் விருப்பமும், தொழுகை, நோன்பு, சக்காத்து முதலிய வணக்கங்களைத் தவறாது செய்தலுமாகிய இயல்பு இருப்பினும் இதில் நப்ஸ் அம்மாராவின் குணங்களிற் சிலவும் தங்கியே இருக்கும். தன்னை வணக்கவாளி என்று பிறர் மெச்சுவது மகிழ்வைத்தரும். பெருமையை வெளியாக்காமல் மறைத்தாலும் அது மனதில் குடிகொண்டேயிருக்கும். உடலிச்சைகள் பூரணமாக அகலமாட்டா இவை இறைவனுக்கு வெறுப்பளிப்பவை என்று தெரிந்தாலும், இவற்றைக் கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடத்தக்க மனத்திட்பமும் இருக்காது. எனினும் தான் தவறு செய்துவிட்டதை மனச்சாட்சி சுட்டிக்காட்டிக் கொண்டிருக்கும். இத்தகைய நிலையிலிள்ளவன் தன் ஆத்மா ''நப்ஸ் லவ்வாமா'' நிலையிலுள்ளது என்பதை உறுதிசெய்து கொள்ளலாம். இந்தப் படித் தரத்தில் நிற்பவனுக்கு ஆபத்துக்களும் இடையூறுகளும் அதிகம் உண்டு. சற்று வழுக்கினாலும் மீண்டும் நப்ஸ் அம்மாராவின் நிலையில் போய் வீழ்ந்து விடுவான். இந்தநிலையிலிருந்து மேலே செல்வதற்கு ''ஷரீஅத் ' தில் கூறப்பட்டுள்ள புறவணக்கங்களுடன் இம்மையின் ஆசைகளையும் குறைத்துக்கொள்ள வேண்டும்.

இந்த நிலையிலிருந்து முல்ஹிமா நிலைக்கு உயர்த்தப்பட்டவனின் இருதயக் கண் திறக்கின்றது. மறைபொருளான சில விடயங்களையறிந்து, மேலும் வளர்ச்சியடைந்து சாந்தி நிலையை அடைகின்றது. இந்த நிலையை அடைந்த ஆத்மாவை ''நப்ஸ்முத்மாயின்னா'' என்று அழைக்கப்படுகின்றது. ''சாந்தி நிலையை அடைந்த ஆத்மாவே சுவர்க்கத்தை நோக்கிவிரைந்து செல்வாயாக'' என்று இறைவன் தனது திருமறையில் கூறுவதால் லவ்வாமா நிலைக்கோ, அம்மாரா நிலைக்கோ பின் தள்ளப்படுவதில்லை. மலையுச்சியிலிருந்து விழும் நீர்வீழ்ச்சி போன்று, தங்குதடையின்றி இறைவனைநோக்கி விரைந்து செல்கின்றது. இதற்கு மேலுள்ள நிலைகளையடைய குருநாதர் ஒருவரைப் பின்பற்றிச் செல்லவேண்டும். அப்பொழுதுதான் வழி தவறாது நேரான பாதையிற் சென்று (காமிலான தன்மை)பரிபூரணத்துவத்தை அடையலாம். அவுலியாக்களும், குத்புமார்களும் பரிபூரண நிலையை அடைந்தவர்களாவர்.

ஆத்மாவினுடைய குறிக்கோள் பூரணத்துவத்தையடைவதேயாகும். இந்தக் குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகவே ஆத்மா இவ்வுலகில் உடலையடைகின்றது மரணம் ஏற்படும்போது ஆத்மா உடலிலிருந்து எந்த நிலையில் பிரிகின்றதோ, அதே நிலையிலேதான் இறுதிநாள்வரைக்கும் இருந்து அந்த நிலைக்குரிய பலனையடைகின்றது. ஆகவே ஆத்மாவின் விமோசனத்திற்காக அயராது உழைப்பதுவே மனிதனின் குறிக்கோளாய் இருத்தல்வேண்டும். இதையுணர்ந்த தத்துவஞானி பிளேட்டோவும் இந்தக் குறிக்கோளை மனிதன் அடைவதற்கு கல்வி உதவ வேண்டுமென்று ஆணித்தரமாக வலியுறுத்தி யிருப்பதை நாம் வியந்துபாராட்டாமலிருக்கமுடியாது.

---

## கத்னா-ஸுன்னத்-விருத்த சேதனம்

'கத்னா' செய்யும் சம்பிரதாயம் பெருமானார் முகம்மது (ஸல்) அவர்களுக்கு முன் தோன்றிய நபிமார்களின் காலத்திலேயே ஆரம்பமாகியது.

முதன் முதலில் விருத்த சேதனம் செய்து கொண்டவர்கள் நபி இபுராகிம் (அலை) அவர்களாவார். பெண்களில் முதலில் செய்தவர்கள் இபுராகிம் நபியின் இரண்டாவது மனைவியான ஹாஜரு அலைகிஸ்ஸலாம் அவர்களாவார். இபுராகிம் (அலை) அவர்களுக்கு தெய்வீகக் கட்டளை பிறப்பிக்கப்பட்டபோது அவர்களுக்கு 120 வயது என்றும், பிறிதொரு நியாயத்தின்படி எண்பது வயதென்றும் கூறப்படுகிறது. அதன் பின்னரே அவர்கள் 'கத்னா' செய்து கொண்டார்கள்.

— மௌலவி பி. கே. எம். அப்துல்காதர் ஆலிம்
அவர்களின் கட்டுரையிலிருந்து

314527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதனின் மன நிலைகள்

செல்வி சு. அபூசாலிஹ்
( ஏகு வருடம்—விஞ்ஞானம் )

''திண்ணமாக தீயதையே அதிகமாக ஏவும் என்மனம், தனது அறிவீனத்தால் நரை, விருத்தாப்பியம் ஆகிய (இரு) அச்சுறுத்துவோரின் மூலம் உபதேசம் பெறவில்லை.''

நரையின் உபதேசத்தை மதியாது தான் சந்தேகிப்பதற்குரிய காரணத்தை இச்செய்யுளில் கூறுகிறார் இமாம் ஷர்புத்தீன் முஹம்மது ''அல்பூஸீரீ'' (ரஹ்) அவர்கள். ''அதனது நரையும், வயோதிகமும் எதனை முன்னெச்சரிக்கை செய்கின்றனவென்பதை எனது 'நப்ஸே அம்மாரா' (தீயதையே ஏவும் மனோ இச்சை) அறியாது போயிற்று. ஆகையால் தான் அது நரை, வயோதிகம், ஆகியவற்றின் உபதேசத்தைச் சந்தேகிக்கிறது.

'நப்ஸு' என்ற பதத்திற்குப் பல பொருட்கள் உள. எனினும் இங்கு 'மன நிலை' என்ற பொருளே பொருந்துமென நினைக்கிறேன்.

மனிதனின் அகத்தில் இதயமானது தசைக் கட்டியாகச் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. எனவே, அவனுக்கு ஏற்படும் நினைவு சிந்தனை முதலியவற்றிற்கு இதயமே முக்கிய கருவியாக இருக்கிறது. இவ்விதயம் எச்சமயத்திலும் அசைந்துகொண்டேயிருத்தல் வேண்டும். அப்படியசையாது நின்றுவிடுமாயின், மனிதன் உயிர் வாழமுடியாது மரணித்து விடுகிறான். ஆகவே இதயமானது ஒரு கணநேரமும் நிற்காது ஓடிக்கொண்டேயிருப்பது போன்றே அவனது எண்ணமும், சிந்தனையும் ஒரே இஸ்திரமாக இல்லாமல் மாறிக்கொண்டே போகின்றன. இம்மாருட்டங்களைத் துருவியாராய்ந்த பெரியார்கள் இதனை பலவாறு கப் பிரித்து, ஒவ்வொரு நிலைக்கும் தனித்தனிப் பெயர்களைக் குறிப்பிடுகின்றனர். அவையாவன:

1. அந்தப்ஸுல் அம்மாரா
2. அந்நப்ஸுல் லவ்வாமா
3. அந்நப்ஸுல் முத்மயின்னா
4. அந்நப்ஸுல் ராலிய்யா
5. அந்நப்ஸுல் மர்லிய்யா
6. அந்நப்ஸுல் காமிலா
7. அந்நப்ஸுல் முகம்மிலா

இவ்வேழு வகைகளும் மனிதனின் மனத்தே தோன்றும் ஏழு நிலைகளாகும்.

மனிதன் மிருகக் குணங்களைக் கொண்டும், மலக்குகளான அமரர்களின் குணங்களைக் கொண்டும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளான். அவன் பிறக்கும் பொழுது களங்கமற்ற மனத்தினனாகப் பிறந்து, பின்னர் மற்றையோர் செய்வதைப் பார்த்துத் தானும் செய்ய முயலுகின்றான். ஆனால், நன்மை, தீமை ஆகிய இருவகைச் செய்கைகளில் தீமையான செய்கைகளிலேயே அவனது இதயம் அதிகமாகவும், முதன்மையாகவும் ஈடுபடுகிறது. இதே நிலையில் பாலப் பருவம் முடிந்து வாலிபப் பருவம் ஏற்படுகையில் தேகத்திலுள்ள வலிமையாலும், அவனில் மறைந்துள்ள மிருக உணர்ச்சியாலும் அவன் தீயவழியில் ஈடுபட ஆரம்பிக்கின்றான். இதைக் குறித்துத் தான் நபிகள்பிரான் (ஸல்) அவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பிறக்கும் குழந்தைகள் யாவும் இஸ்லாமிய (பித்ரத்தில்)
இயற்கையில் (அதாவது: களங்கமற்ற நல்ல மனத்துடனேயே)
பிறக்கின்றன. எனினும், அவற்றின் பெற்றோர்கள் அவர்களை
(செயற்கையின் வாயிலாக) யூதர்களாகவோ, கிறிஸ்தவர்களாகவோ
நெருப்பைப் பூஜிக்கும்) மஜூஸிகளாகவோ ஆக்கிவிடுகின்றனர்.''

(அல்ஹதீது)

எனக் கூறியுள்ளார். இதற்கிணங்க முதலில் மனிதன் துற்குணத்தவனாக மாறி பற்பல தீய காரியங்களைச் செய்ய ஆரம்பிக்கின்றான். இந்த நிலைதான் ''அந்நப்ஸுல் அம்மாரு'' என்பதாகும்.

ஆனால் இத்தகைய நிலையையடைந்த மனிதன் சிலசமயம் தனது துற்கிரியைகளைத் தவறென உணர்ந்து அவற்றால் தனக்குத் தீங்குதான் நேரிடுமெனத் தெரிந்து, வருந்தி தன்னைத்தானே நொந்து கொள்கின்றான். இந்நிலையில் அவனது மனத்திற்கு ''அந்நப்ஸுல் லவ்வாமா'' எனக் கூறப்படுகிறது.

அதிலும் தேர்ச்சியடைந்து நற்பணிகளையே புரியவேண்டும்; சற்குணத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்ற திடசித்தத்தையடையும் மனிதன் ஓரளவு சாந்தி பெறுகிறான். இந்நிலையில் அவனது மனம் ''அந்நப்ஸுல் முத்மஇன்னா'' எனப்படுகிறது.

இதற்குமேல் நற்காரியங்களைச் செய்வதில் எத்தனை இடையூறுகளும், ஆபத்துக்களும் நேரிடினும் பொருட்படுத்தாமல் அவற்றை எதிர்த்து அவதிகளைச் சகித்துக்கொண்டு துன்பங்களை இன்பங்களாக மனிதன் மதிக்கின்றான். இந்நிலையில் அவனது மனத்திற்கு ''அந்நப்ஸுல்ராலிய்யா'' என்ற பெயர் வழங்கப்படுகிறது.

இதிலும் பண்பட்டு அல்லாஹ்வின் திருப்திக்கும், உகப்பிற்கும் மனிதன் உள்ளாகிறான், இந்நிலையில் அவனின் மனம் ''அந்நப்ஸுல் மர்லிய்யா'' எனப்படுகிறது.

இதற்குமேல் மானுசீகத் தன்மைக்குரிய சகல இலட்சணங்களையும் உடையவனாய்த் திகழும்போது அவனது மனம் ''அந்நப்ஸுல் காமிலா'' என அழைக்கப்படுகிறது. பின்னர் தான் கண்ட மெய்ஞானக் கருத்தை உலக மாந்தரும் உணர வேண்டும். எல்லோரும் நற்காரியங்களைச் செய்யவேண்டும். பிரபஞ்சமே அருள்மயமாக மாறவேண்டும் என்ற உதிப்பு அவனுக்கு ஏற்படுகிறது. ஆகவே அவன் பொதுமக்களை மேம்படுத்தவும், அவர்களுக்கு ஊழியம் செய்யவும் உண்மை வழியை உணர்த்திக் காட்டவும் முற்படுகிறான். இந்நிலையில் அவனது மனத்திற்கு ''அந்நப்ஸுல் முகம்மிலா'' என்று கூறப்படுகிறது.

இவ்வேழு நிலைகளிலும் ஆரம்ப நிலையான ''அந்நப்ஸுல் அம்மாரு' தான் மிகக்கெட்ட குணம் படைத்த நிலையாகும் இந்நிலையில் தான் மனிதர்கள் பாபகாரியங்களைத் துணிந்து செய்கின்றனர். இந்நிகழ்ச்சியே முதற்கவிதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

''மெய்யாக (குணங்கெட்ட நிலையிலுள்ள) ஆத்மா,
தீமையையே மிகவும் தூண்டக் கூடியது.'' (அல்குர் ஆன் 12:5;3)

''அ(ந்த நப்ஸானது)து நற்கிரியை (களென்னும் மேய்ச்சலிடங்)களில் மேய்ந்து கொண்டிருக்குங்கால் அதைக் கண்காணித்துக் கொள். ஆனால், அது ஒரே மேய்ச்சலிடத்தை இன்பமாகக் கருதுமாயின் (அதில்) மேயவிட்டுவிடாதே.''

(பாட்டு 20)

மனமானது தீய காரியத்தில் செல்ல விரும்பினால், அதைத் தடுத்து பலவந்தமாக நற் கிரியைகளில் அதனை ஈடுபடுத்தல் வேண்டும் என்றாலும் அது நற்காரியங்களில் ஈடுபட்டிருக்கும்போது அதை ஜாக்கிரதையாகக் கண்காணித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் நற்காரியங்களில் ஈடுபட்டுள்ளபோதும் அதன்மூலம் தீமையின் பக்கமே இழுத்துச்செல்ல முனையும், எப்படியென்றால், ''நற்காரியத்தையே அதிகமாகச் செய்கிறோம்'' என்ற அகந்தை அதற்கு ஏற்பட்டு, புரியப்பட்ட சொற்ப நற்செய்கைகளும் அழிந்துபோய்விடும். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலிகள்

**'ஜமாலி' — ஹஸன் அலி மௌலானு**

(புகுவருடம் — உடற்கல்வி)

வெள்ளைத் தொப்பி, குறுந்தாடி யனைத்தும்
வெளி வேஷத் தூண்களாம்
கள்ள மனத்தினரின் காவிகளாம்
கயமைத் தலைகளின் போர்வைகளாம் !

வேத மோதி ஐவேளைத் துதிசெய்து
வேதமதற் கர்ப்பணிக்கும் துறவி போன்று
மேதக வுடையோராய்க் காட்டிக் கொள்ளும்
போலிகள் இன்று எத்தனை... எத்தனை...?

புனித மக்கா நகர் சென்று
பெயரோடு 'ஹாஜி' பட்டம் சேர்த்தபின்னும்
பண்பிலாச் செயலி லீடுபட்டு
புனிதத்தில் களங்கமதைச் சேர்த்திடுவாரின் றெத்தனை...?

உளத் தூய்மை யிலாக் கருமிகள்
உதட்டினில் தேன் வைத்து
பிளவுத் தீயினை மூட்டிவிட்டுப்
பக்க மொதுங்கிடும் வஞ்சகரின் றெத்தனை...?

பேச்சினி லாயிரம் பேரைக் கவர்ந்து
பேதையராக்கி யவர்களை மடக்கி
உச்சி தடவி மயிர் பிடுங்கும்
உதவாக் கூட்டத்தினரின் றெத்தனை...?

உறவா லொட்டி யுயிரா லிணைந்து
உற்ற இனத்தவரா யுரைந்து
நயவஞ்சகச் சூதியல் புரியும்
நாணயமிலா நச்சுப் பேர்வழிகளின் றெத்தனை...!

பதவியா லுயர்ந்து அத்தஸ்தினைக் காட்டி
பணத்தால் மக்களைக் கவர்ந்து
புகழினை விரும்பி பொறுப்பின்றி
பேருக்கென வாழும் சுயநலப் புலிகளின் றெத்தனை...!

அனாதையர் சொத்தினைச் சுரண்டி
அவர்தம் உரிமைதனைப் பறித்து
நம்பிக்கை மோசடி செய்திடும்
இரத்த முறிஞ்சு(ம்) கருநாகங்களின் றெத்தனை...!

குலப் பெருமை பேசி யுயர்ந்திடவும்
குறைதனை மறைத்து உரைத்திடவும்
குடிப் பெருமை பேசிடும்
குற்றுயிர்க் குறையுடம் பினரின் றெத்தனை...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ★ ★

> கல்விக்காக உயிர் தந்தோர்
> மரணிப்பதேயில்லை



## ஆசிரியத் தந்தை

# ஐ. எல். எம். மஸ்ஹூர்

**1905ம்** ஆண்டு செப்டம்பர் மாதம் 6ம் திகதி அழுத்கம வாசியும் பிரபல வர்த்தகருமான ஜனாப் யூசுப் லெப்பை இஸ்மாயில் லெப்பைக்கும் ஜனாபா அப்துர் ரஹ்மான் மரைக்கார் சாலிஹா உம்மாவுக்கும் அருந்தவப் புதல்வராகப் பிறந்தார் அல்ஹாஜ் ஐ. எல். எம். மஸ்ஹூர். மஸ்ஹூர் என்ற அறபிப்பதத்திற்குரிய விளக்கம் பிரபல்யம் வாய்ந்த வராகும்.

அதிபர் திலகம் மஷ்ஹூர் அவர்கள் தம் பெயருக்கேற்ப பிரபல்யம் வாய்ந்தவராகவும், இலங்கைவாழ் முஸ்லீம்களின் அன்பிற்குரியவராகவும், ஆசிரியத் தந்தையாயாகவும் போற்றப்படுகின்றார். முயற்சியை ஊன்றுகோலாக்கி முன்னேற்றப்பாதையில் குதித்தவர் மஷ்ஹூர். சலியாத உழைப்பினால் சமுதாய சிற்பியாக மாறியவர் இவர்.

1923 ம் ஆண்டில் மஷ்ஹூர் E.S.L.C. பரீட்சையில் சித்தியடைந்தார். ஆங்கிலத்தில் எழுதினாலும் சிங்களத்திலும், தமிழிலும் விஷேட சித்தி பெற்றார். E. S. L. C. பரீட்சையில் சித்தியடைந்ததும் கொழும்பு ஸகிராக் கல்லூரியில் சேர்ந்து கேம்பிறீட்ஜ் சீனியர் பரீட்சைக்கு தோற்றினார் அப்போது ஜனாப் T. B. ஜயா கல்லூரி அதிபராக விளங்கினார். அப்போது மஷ்ஹூர் மாணவத் தலைவனாக விளங்கினார், என்பது குறிப்பிடத் தக்கது

கேம்பிறீட்ஜ் பரீட்சையில் ஒரே முறையில் சித்தியெய்திய அதிபர் மஷ்ஹூர் இலண்டன் இண்டர் மீடியட் பரீட்சைக்கு ஆயத்தம் செய்து கொண்டிருக்கையில் 1930 ம் ஆண்டு கொழும்பு ஹமீதியா ஆங்கிலப் பாடசாலையின் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். ஏற்கனவே இவருக்கிருந்த நாடக ஆர்வம் இங்கு பூரணமாக ஒளிவிடத் தொடங்கியது. பல நாடகங்களை உருவாக்கி மாணவர்களைக் கொண்டு நடிக்கச்செய்தார். இவற்றுள் ''கெட்ட குமரன்'' ''சகுந்தலம்'' என்பவை புகழ்பெற்றவையாகும். இந்நாடக வருமானத்தைக் கொண்டு பாடசாலைக்குரிய நூல்நிலையம் விளையாட்டிடம். கட்டடங்கள் முதலியவற்றை அமைத்தார். மஷ்ஹூர்.

1938 செப்டம்பர் 11 இல் அளுத்கமயில் பிரபல குடும்பமான அல்ஹாஜ் ஸீ. எம் ஹமீத் மரைக்காரர் அவர்களின்

**பொலன்னறுவை யூ. எல். எம். சாலிஹ்**

( புகுவருடம் — விவசாய விஞ்ஞானம் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதல்வி உம்மு ஹபீபா அவர்களை துணை வியாக ஏற்றுக் கொண்டார். இதன்பின் மஷ்ஹூர் பொதுநல சேவையில் ஈடுபட்டார். இவரும் இவரது நண்பர்களும் முயன்று ''முஸ்லிம் கல்விப் பொது நல ஊழியர் சங்கம்'' என்ற பெயரில் ஒரு சங்கத்தை உருவாக்கினர். அதிபர் மஷ்ஹூரே அதன் செயலாளராகவும் கடமையாற்றினார். இச்சங்கத்தின் முயற்சியால் 1941ம் ஆண்டில் அளுத்தகமையில் ஒரு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நிறுவப்பட்டது. அதற்கு ஜனுப் மஷ்ஹூர் அவர்களே அதிபராக நியமிக்கப்பட்டார். அதிபர் காலத்திலே படித்து B. A. பட்டம் பெற்றார்.

1941ம் ஆண்டு இவர் அளுத்தகம ஆசியர் கல்லூரியின் அதிபராகக் கடமையேற்ற பொழுது இக்கடமையைச் செய்யக்கூடிய தகுதி இவருக்கு இல்லையென சிலர் எடுத்தோதினர்கள். ஆனால் கருமமே கண் என்பதற்கிணங்க தன் கடமைகளில் கண்ணயிருந்ததனால் கலாசாலை சிறந்த முறையில் சிறந்த ஆசிரியர்களை வருடா வருடம் பயிற்றுவித்து அனுப்பியது. சோல்பரிப் பிரபு இக்கலாசாலைக்கு விஜயம் செய்தபோது இக்கலாசாலையின் ஒழுங்கு முறைகளையும் நிர்வாகத்தையும் மெச்சினர் அவ்வளவுக்கு இதன் தரத்தை உயர்த்தியிருந்தார் அதிபர் மஷ்ஹூர்.

இச்சமயத்தில் அதிபர் மஷ்ஹூர் அட்டாளைச் சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அதிபராக மாற்றம் செய்யப்பட்டார். ஆனால் அளுத்தகமையில் கல்வி மங்கிய நிலையில் இருந்தமையினால் ஊர்வாசிகள் இவரை இழக்கவிரும்பவில்லை. ஆனால் விதியோ இவரை அட்டாளைச் சேனைக்கு கொண்டு வந்து விட்டது இன்று இலங்கையில் முஸ்லிம் களின் கல்வி வளர்ச்சிக்காக உழைத்த பெரியார்களுள் மஷ்ஹூரும் ஒருவர் என்பதில் சந்தேகமில்லை. அதிபர் மஷ்ஹூர் முஸ்லிம் ஆசிரிய சமூகம் ''எங்கள் ஆத்ம ஆசிரியத்தந்தை'' என்று அழைக்கு அளவுக்கு அவர் முஸ்லிம் ஆசிரியர்களின் நன்மதிப்பபை பெற்று விட்டார்.

இவரிடம் காணப்பட்ட சமூகப்பற்று அயராதா உழைப்பும், சேவைக்கு முதலிடம் கொடுக்கும் தன்மையும், எவருடைய மனதையும் கவரக்கூடிய எளிய போக்குமே இவர் இத்தகைய மதிப்புப் பெறக் காரணமாயிருந்தன. இலங்கை முஸ்லிம்களுள் கல்வி விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர்களுள் இவரும் ஒருவர் என்றால் அது மிகையாகாது.

1960ம் ஆண்டு மீண்டும் அளுத்கம ஆசிரிய கல்லூரியில் அதிபர் திலகம் புதிய அதிபராக கடமையேற்றார். ஆண்களின் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஒரு சிறந்த அதிபராக சேவைபுரிவது இலேசான காரியமாயிருந்தாலும் ஆண்களாலும் பெண்களின் பயிற்சிக்கலாசாலையில் ஓர் முன்மாதிரியான அதிபராக திகழ முடியும் என்று நிரூபித்து எல்லோரினதும் புகழையும் பெற்றுக் கொண்டார். இதற்குரிய காரணம் அதிபருடைய சிறந்த குணங்களும் சேவையும் என்றே கூறலாம்.

அன்பாலன்றி அதிகாரத்தால் எதையும் சாதித்துவிட முடியாது என்பதை அன்றட வாழ்க்கையில் எடுத்துக்காட்டிய வீர புருசர் இவர். மற்றவர்களின் மரியாதையையும் மதிப்பையும் பெறவேண்டின் அதே மரியாதையையும் மதிப்பையும் மற்றவர்களுக்கு நாங்கள் செலுத்த வேண்டும் என்ற கோட்பாட்டுடன் ஒரு சிறந்த ஆசிரியராக வாழ்ந்து நாட்டின் பல முஸ்லிம் ஆசிரியர்களை தோற்றுவித்த மகான் இவர்.

உளவியல் ஆராச்சியில் வெற்றிகண்ட அதிபர் மஷ்ஹூர் அதை புத்தக ரூபமாய்த் தந்துதவினர் அதிபர் மஷ்ஹூர் அவர்களின் உளமும் கல்வியும் என்னும் உள நூல் ஆசிரிய மாணவர்களுக்கு மிகவும் பயன் பெறத்தக்க வகையில் அமைந்துள்ளது. அத்துடன் அன்னார் எழுதிய

''முஸ்லிம் ஆசிரியர் முன்னேற்றம்''

''முஸ்லிம் சமூகத்துக்கு இஸ்லாமிய ஆசிரியர் பணி''

''மாணவர் மணம்''

''இயலறிவும் இறையருளும்''

''கற்றுய்ந் தொழுகு''

''தமிழ் வளர்ச்சியில் இஸ்லாமிய ஆசிரியர் பணி''

''திருக்குர் ஆனின் தனிச்சிறப்பு''

''எமது எதிர்காலம்''

''நற்சிந்தனை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற கட்டுரை மலர்கள் தத்துவங்கள் நிறைந்துள்ளதோடு எல்லோரும் பயன் பெறத்தக்க வகையில் அமைந்துள்ளன.

17–12–1961 வரை இவர் ஆசிரியத் தொழிலிலும் அதிபர் பதவியிலும் பெற்ற 32 வருட கால அனுபவம் ஆற்றிய சேவை இலங்கை முஸ்லிம் கல்விச் சரித்திரத்தில் அழியாத இடத்தையே பெற்றுள்ளது. நாட்டிலுள்ள பல்லாயிரக் கணக்கான முஸ்லிம் ஆசிரியர்கள் மர்ஹூம் மஷ்ஹூரின் ஒளியில் வளர்ந்த நறுமலர்களாகும் நாட்டிலுள்ள கல்விமான்களில் பலர் அன்னாரின் தூய சேவையின் அஸ்திவாரத்திலே நிலையான இடத்தைப் பெற்றவர்களாகும். இலங்கை முஸ்லிம் கல்வி வரலாறு எழுதப்படும் போதெல்லாம் இலங்கை முஸ்லிம்களின் கல்வி வளர்ச்சி நினைவு கூறப்படும் போதெல்லாம் மர்ஹூம் மஷ்ஹூரின் நாமம் நிச்சயமாக உச்சரிக்கப்படும்.

இவ்விடயதானத்துக்குதவிய நூல்கள்

1. அதிபர் திலகம் மஷ்ஹூர்(A. U. M. A. கரீம்
2. மஷ்ஹூர் பாராட்டுமலர்

(அகில இலங்கை முஸ்லிம் ஆசிரியர் பழைய மாணவர் மன்றம்)

## அவரன்றோ மனிதர்?............

சகாபி (நாயகத் தோழர்) ஒருவர் தனது மனைவியை விவாகாரத்து செய்வதற்காக வழக்கு மன்றத்திற்குச் சென்று கொண்டிருந்தார். வழியில் சந்தித்த அவரது நண்பர் கேட்டார்:

''நண்பரே உமது மனைவியை விவாகரத்து செய்யச் செல்கிறீர்களே அவளது குறைகளைக் கொஞ்சம் சொல்லுங்களேன்''

சகாபி உடனே பதில் கூறினார் ''இப்போதும் அவள் என் மனைவிதான் அவள் குறைகளை நான் எப்படி வெளியிட முடியும்?''

விவாகரத்து முடிந்து திரும்பிக் கொண்டிருந்த சகாபியை, மீண்டும் நண்பர் வினவினார்: ''விவாகரத்து முடிந்து விட்டது. இனி அவள் உங்கள் மனைவி இல்லை. இப்போதாவது அவளது குறைகளைக் கூறக்கூடாதா?''

சகாபி சிரித்து விட்டுச்சொன்னார்! ''நண்பரே, அவள் இப்பொழுது விவாகரத்து பெற்றுவிட்டாள். அவள் இப்பொழுது ஓர் அன்னியப்பெண். ஓர் அந்நியப்பெண்ணுடைய அந்தரங்கங்களை நான் எப்படி வெளியிட முடியும்''

நண்பர் மௌனமாக அகன்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீக்கிடுவாய் உன் வாழ்வில்

ஓ எந்தன் சோதரியே, சோதரனே! விழித்தெழுவாய்!
சோதனைகள் செய்துவிட்ட சோகக்கதை கேட்டிடுவாய்
பொறாமையெனும் மூன்றெழுத்துக் காட்டிவிட்ட அற்புதத்தை
அநியாய சேதிகளை அறிந்திடுவாய் கூறுகிறேன்

பொறாமையினால் புரண்ட பெரும் பேரரசர் பற்பலராம்
நிலையிழந்து உருக்குலைந்து போனவர்கள் மெத்தவராம்
வலியிழந்து நலிவடைந்து நடைதளர்ந்தோர் ஆயிரமாம்
அறிவு கொள்வீர் அற்புதந்தான் காட்டிவிட்ட பொறாமையது

சாந்தியுடன் சம்மதமாய் எவருடனும் வாழ்ந்திடவே
ஏந்தல் நபி வழியதனை என்றென்றும் பேணிடுவாய்
பாந்தமுடன் யாருடனும் பண்புடனே பழகிடவே
பொறாமையெனும் பேய்க்குணத்தை உன்னை விட்டும் போக்கிடுவாய்

நன்மைதனை அழித்துவிடும் நன்றிதனைக் கொன்று விடும்
புன்மையினைத் தேங்கிவிடும் புண்ணியங்கள் போக்கிவிடும்
நன்னிலையில் வாழ்ந்திடவே நானிலமும் புகழ்ந்திடவே
முன்னிலையில் வந்திடவே பொறாமைதனை அழித்திடுவாய்

எல்லையில்லா அன்பினையே உள்ளமதில் கொண்டிடுவாய்
தொல்லை தரும் உதட்டுறவைத் தூரவே நீ தள்ளிடுவாய்
வல்லவனும் அல்லாஹவின் வான் மறையின் போதனைபோல்
நல்லவனாய் வாழ்ந்திடவே பொறாமைதனை ஒழித்திடுவாய்

அறிந்தவர்கள் பொறாமையினால் இழந்தார்கள் நல்வாழ்க்கை
உணர்ந்திடுவீர் என்னருமைச் சோதரனே! சோதரியே!
மலர்ந்தோங்கப் புது வாழ்வு தெளிந்தோங்க நற்பண்பு
பொறாமை யெனும் பேதமையை உன் வாழ்வில் நீக்கிடுவாய்

**ஜனுபா ஜமீலா இஸ்ஸடீன்**
(ஏகு வருடம் — விவசாய விஞ்ஞானம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1976 23

சிறுகதை

# பட்டதாரி

சிறுகதை

ஏ. எஸ். இபுராகிம்

**தா**ழ்வாரத்திலே வாலைச் சுருட்டிய படி படுத்திருந்த நாய், திடீரென்று எழுந்து இருமுறை குரைத்து அடங்கியது. குசினியிலே கஞ்சி காய்ச்சிக் கொண்டிருந்த அலிமா நாச்சி பாடசாலைக்குப்போன தனது மகன் நஸார் வருகிறான் என எண்ணினாள். காலையிலே ஒரு கோப்பைச் சாயத் தண்ணீரும் ஒரு துண்டுச் சீனிக் கட்டியும்தான் அவன் வயிற்றை நிரப்பியிருந்தன. பசியோடு வருகின்ற தன் மகனுக்கு ஏதாவது காய்ச்சி வைக்கவேண்டுமே என்று துடித்தது தாய்உள்ளம். முகத்திலே துளிர்த்த வியர்வையை முந்தானையால் துடைத்துவிட்டு அடுப்புக்கு நெருப்பைக் கூட்டினாள் அலிமா நாச்சி.

''ஆதம்கண்டு, ஏய் ஆதம்கண்டு'' — நாயின் உறுமலைத் தொடர்ந்து ஒரு தடித்த குரல் ஒலித்தது.

''ஆரது'' என்று குரல் கொடுத்தவாறே வந்து படலையைத் திறந்தாள் அலிமா நாச்சி.

ஈசாலெவ்வை ஹாஜியார் அங்கே நின்றுகொண்டிருந்தார், அலிமா நாச்சிக்குக் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை.

''வாங்க மாமா, வாங்க நாய் குலைத்த சத்தத்திலே நீங்க கூப்பிட்டது கேக்கலை. வெகு நேரமா நிண்டுக்கிட்டிருந்தீர்களா'' நெஞ்சம் நடுங்க வரவேற்றாள் அலிமா நாச்சி.

''அப்பாடா, இது என்ன வெயில், நெருப்பாய் எரிகிறதே'' என்று கூறிக்கொண்டு திண்ணையில் போட்ட பாயை விரித்துக்கொண்டு உட்கார்ந்தார் ஹாஜியார்.

அடுப்பிலிருந்த கஞ்சியை இறக்கி ஆற வைத்துவிட்டு வந்த அலிமாநாச்சியின் முகம் வெளிறிப் போயிருந்தது.

ஒளவாலோடையில், ஹாஜியாருக்குச் சொந்தமான காணியிலுள்ள ஒரு குடிசையில்தான் ஆதம்கண்டும், அலிமா நாச்சியும் தமது ஒரே மகன் நஸார் உடன் வசித்து வந்தனர். இருந்தாலும், ஹாஜியார், அந்தப்பக்கம் வருவது அருமை.

ஆதம்கண்டு, ஹாஜியாரிடம் ''செய்கைக்காரனாக'' சேர்ந்ததிலிருந்து ஹாஜியார் இரண்டே இரண்டு தடவைதான் அங்கு சென்றிருக்கிறார். கடைசியாக அவர் வந்து சென்றபோது பெரிய பிரளயமே ஏற்பட்டுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய வயலில் செய்கைக்காரனாக இருப்பவன், வீட்டில் தன் மனைவிக்கும் கொள்ளி கொத்திக் கொடுக்க வேண்டும் என்பது ஹாஜியாரின் கட்டளை. ஆனால், ஆதங்கண்டு உரிய காலத்தில் கொள்ளி கொத்திக் கொடுக்க வரவில்லை என்று ஆத்திரத்தோடு அன்று வந்த ஹாஜியார் வாயில் வந்தவாறெல்லாம் பேசிவிட்டார். அன்று அவர் கூறிய வார்த்தைகள் இன்றும் அலிமாநாச்சியின் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது.

''ஒழுங்காகத் தொழில் செய்து பிழைக்கத் தெரியாத காலிப் பயலுக்கு ஊடும் கொடுத்து, சோறும் கொடுக்கிறேன் பார். வெளியேறுடா மூதேவி இவ்விடத்தைவிட்டு'' என்று ஹாஜியார் அன்று கர்ச்சித்தார்.

''மூன்று நாளா காய்ச்சல் வந்து படுத்த படுக்கையாய் படுத்துட்டனுங்க, என்ன மன்னிச்சிக்கிங்க'' என்று ஆதங்கண்டு எவ்வளவு கெஞ்சியும் அவர் கேட்கவில்லை. ''அநாதையான எங்களை இப்படி விரட்டிட்டா நாங்க எங்கேபோய் பிழைப்போம் மாமா, இனி அவர் அப்படி நடக்க விடமாட்டேன், எங்களுக்கு இரக்கம் காட்டுங்க' என்று அலிமாநாச்சி கண்ணீரும் கம்பலையுமாய் ஹாஜியாரின் காலில் விழுந்த பின்புதான், ''சரி இதுமுதல் குற்றம்'' என்று பொருமிக்கொண்டு போனார்.

அன்று போனவர் இன்று வந்திருக்கிறார். இன்றும் அப்படி ஏதாவது நடந்துவிடக் கூடாது என்று ஓராயிரம் தடவை அவள் மனம் ஆண்டவனை வேண்டிக்கொண்டது.

''புள்ள எங்க ஆதங்கண்டுட ஊசாட்டத்தைக் காணல்ல'' ஹாஜியார் கேட்ட போதுதான் அலிமாநாச்சிக்குச் சுயநினைவு வந்தது.

''அவர் இப்போதுதான் பள்ளிக்குப் போனார், சுணங்காமல் வந்துடுவார்'' என்ற அலிமாநாச்சி, தொடர்ந்து ''பள்ளியிருந்துவந்து சாப்பிட்டுட்டு பள்ள வயலுக்கு தண்ணி மறிக்கப் போகணுமிண்டு சொன்னார்'' என்று கூறினாள்.

அப்போதுதான் அன்று வெள்ளிக்கிழமை என்பது ஹாஜியாருக்கு ஞாபகம் வந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் தன்னுடைய தடித்த தொண்டையைச் சிறிது கனைத்துக்கொண்டு ஹாஜியார் பேச்சைத் தொடர்ந்தார். ''புள்ள உண்ட மகன் எச். எஸ் ஸி. சோதனையிலே எடுபட்டு இருக்கானும் எண்டு கதைக்குதுகள், மெய்தானா?''

''ஆமாம் மாமா. அல்லாஹ்தான் இருக்கான் அந்தப் புள்ளட தலையெழுத்து எப்படி இருக்கோ, அப்படி இருக்கும்.''

''புள்ள, நான் அப்போதே சொன்னேன், உண்ட மகன் படிச்சது போதும், நிறுத்திட்டு ஒரு தொழிலைக் காட்டிக் கொடு என்று, நீதான் கேக்கல்ல இப்ப பாரு எவ்வளவு செலவு, படிச்சதுகளெல்லாம் சும்மாரோடு சுத்தித் திரியுதுகள். நீயும் உண்ட மகனைப் படிக்க வைச்சிக் கெடுத்துப் போட்டாய்'' ஹாஜியார் சொல்லிக்கொண்டே அலிமாநாச்சியை நோட்டம் விட்டார்

அப்போது ''உம்மா, உம்மா'' என்று கூவிக்கொண்டு குடிசைக்குள் நுழைந்தான் நஸார். ''நான் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறேன் உம்மா'' என்று மகிழ்ச்சி ததும்பக் கூறினான். அல்ஹமீது—லில்லாஹ், எதற்கும் ஆண்டவனே போதுமானவன்'' அலிமாநாச்சியின் உதடுகள் முணுமுணுத்தன.

இதைக் கவனித்துக் கொண்டிருந்த ஹாஜியாருக்கு எரிச்சலை அடக்க முடியவில்லை. பத்தாம் வகுப்பில் பத்துத்தரம் ''குண்டு'' வாங்கிய தன்மகன் ஜெமீலின் ஞாபகம் வந்தது ஹாஜியாருக்கு. எப்படியாவது ஜெமீலைப் படிப்பித்துப் பட்டதாரியாக்கிவிட வேண்டும் என்று அவர் படாதபாடுபட்டார்.

கொழும்பிற்கு அனுப்பிப் பணத்தை வாரி இறைத்தார். ஆனால், ஹாஜியாரின் கனவு பலிக்கவில்லை. ஜெமீல் வெறுந்தலையனாகவே வீடு திரும்பினான். இருந்தும் என்ன ஊரில் அவன் குட்டிராசாவாக இருக்கிறான் என்ற திருப்தி ஹாஜியாருக்கு உண்டு. யூனியன் தலைவர் ஏ. பி. ஸி. சேர்மன், ஏன் தந்தைக்குப்பின் ஊர்த் தலைமைப் பதவியே அவனுக்கு;

ஆனால், தன்னிடம் கூலித்தொழில் செய்யும் ஆதங்கண்டின் மகன் பட்டதாரியாவதா? இதை எப்படியாவது தடுத்தேயாகவேண்டும். ஹாஜியார்தான் நினைத்து வந்த காரியத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த முனைந்தார்.

''அலிமா, நான் சொல்லுறத்த நீ பிழையா நினைச்சுக்காத, இப்ப படிச்சவனெல்லாம் ஒரு தொழிலும் செய்யத்தெரியாம ஊருசுத்துறானுகள். படிக்கிறத்த உட்டுப்போட்டு நீ உண்டமகனை எனக்கிட்டை ஒப்படைச்சுப்போடு. எண்ட மாடு, கண்டெல்லாம் கவனிக்க ஆளில்லாமல் கிடக்கு'' என்றவாறு பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்ற நஸாரைக் கூர்ந்து நோக்கினர் ஹாஜியார்.

நஸாரின் முகத்தில் வெறுப்பின் கீறல் விழுந்திருந்தது. அவன் ஒன்றும் பேசாது நின்றான். அலிமா நாச்சிக்கு ஹாஜியாரின் வார்த்தைகள் உள்ளத்தில் முள்தைப்பது போல் இருந்தன. அவள் சலன மற்று ஹாஜியாரைப் பார்த்தவாறு ஸ்தம்பித்து நின்றாள். ஹாஜியார் தாயையும் மகனையும் மாறி, மாறிப்பார்த்தார்.

''தம்பி'' என்று நஸாரை வாஞ்சை யோடு அழைத்த ஹாஜியார் ''நீதொடர்ந்தும் படிக்கப் போறியா?; பல்கலைக் கழகத்திற்குப் போய்ப் படிச்சு முடிக்கிற தெண்டால் சின்னவேலையா? பணஞ் சாக்கிலே கட்டி வைச்சிருக்கணும், என்னால் கூட ஆகாது எண்டுதானே, மகண்ட படிப்பை இடையிலே நிறுத்திட்டேன், உண்ட வாப்பா உம்மாபடுகிறபாடு உனக்குத்தெரியாதா? பல்கலைக்கழகத்துக்குப் போற எண்ணத்தை உட்டிடு'' என்று உபதேசம் செய்தார்.

அருகில் நின்ற அலிமா நாச்சியிடம் ஹாஜியார் தொடர்ந்து சொன்னர் ''புள்ள, பல்கலைக்கழகம் இப்ப காடைத்தனம் மலிந்த இடமாய்ப் போச்சு, பேப்பரில போட்டிருக்காங்க, நம்மகலாச்சாரம் கெட்டுப்போயிடும்'',

ஹாஜியார் கடைசியாகச் சொன்ன வார்த்தைகள் அலிமாநாச்சிக்குச் சிந்தனையைத் தூண்டிவிட்டன ''கலாச்சாரம் அழிந்துவிடும்'', ''காடைத்தனம் மலிந்த இடம்'' ஹாஜியார் சொல்வதிலும் உண்மை இருக்கிறது. என்று எண்ணத் தொடங்கினாள். தன்மகன் கெட்டழிந்து விடுவானோ என்ற சபலம் அவள்மனதில் குடிகொள்ளத் தொடங்கியது.

''மாமா, நீங்க சொல்லுறதும் சரி தான், அவரும் அடிக்கடி வருத்தமாகப் பாயிலே விழுகிறார். எனக்கும் உதவியில்ல நீங்க நஸாருக்கு நல்ல தொழிலாப் பார்த்துக் கொடுங்க எண்டயும் ஒரே புள்ள'' என்றாள் தீர்மானமாக.

ஹாஜியாருக்கு மகிழ்ச்சி தாளவில்லை. தன்திட்டம் நிறைவேறுவதை நினைத்துப் புளகாங்கிதமடைந்தார்.

ஹாஜியாரின் பேச்சை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த நஸார், அவரை நெஞ்சுக்குள் திட்டிக்கொண்டிருந்தான். ''சீ, இப்படியும் ஒரு மனுசனு, ஊரில பெரிய மனுஷன் வேசம், உள்ளத்தில் நயவஞ்சகம், இவர்களின் முகமூடியைக் கிழித்தெறிய ஒருவரும் முன்வருகிறார்களே இல்லையே'' என்று மனம் பொருமினான்.

''மக்கள் அறியாமையில் உழலும் போதுதான் இப்படிப்பட்ட சமூக விரோதிகளுக்கு இடம் கிடைக்கிறது. அவர்களை ஒழித்துக்கட்ட வேண்டுமானால் சமூகம் கல்வி அறிவுபெற வேண்டும்'' கல்விக் கருத்தரங்கொன்றில் ஒருவர் கூறிய இக் கருத்துக்கள் நஸாருக்கு ஞாபகம் வந்தன.

''உம்மா நான் பிச்சை எடுத்தாவது தொடர்ந்து படிக்கத்தான் போகிறேன்'' தாயை நோக்கி மிக நிதானமாகக் கூறினான் நஸார்.

ஹாஜியாரின் இருண்ட முகம் மேலும் கறுத்தது, அப்போது ஜாம்ஆப் பள்ளிக்குப் போய்வந்த ஆதங்கண்டு குடிசைக்குள் நுழைந்தார். அவரது கையில் நோட்டீஸ் ஒன்று இருந்தது. அதைப் படித்துக் காட்டுமாறு நஸாரிடம் கொடுத்துவிட்டுத் திரும்பிய அவருக்கு, அங்கு அமைதியாகப் பாயில் அமர்ந்திருந்த போடியாரின் தோற்றம் பயங்கரமாகத் தோன்றியது. தன் உள்ளப் பதட்டத்தைக காட்டிக் கொள்ளாமல், தன் போடியாருக்குப் பக்கத்தில் கூனிக்குறுகி நின்றார்.

''இப்போதுதான் பள்ளியால் வருகிறாயா?'' ஹாஜியார் கேட்டார்.

''ஓம் ஹாஜியார், ஹதீது சொன்னாங்க அதைக் கேட்டுக்கிட்டு இருந்ததால் சுணங்கிவிட்டது. வெளியே வரும்போது இந்த நோட்டீஸ் பகிர்ந்தார்கள்'' என்று நிறுத்தினார்.

''என்ன நோட்டீஸ் அது, படிதம்பி கேட்போம்'' ஹாஜியாரின் குரலில் ஆவல் தொனித்தது.

''வறிய பிள்ளைகளும் உயர்கல்வி பெற வாய்ப்பு, முஸ்லிம் கல்விச்சபை வழங்கும் புலமைப் பரிசில்''

நோட்டீசை நஸார் வாசிக்க, வாசிக்க ஹாஜியாருக்கு இருப்புக் கொள்ளவில்லை. அடிபட்ட புலிபோல தவித்தார்.

''முஸ்லிம் கல்விச்சபை வாழ்க' தன்னை அறியாமலே கூவினான் நஸார். தன் பிரார்த்தனை நிறைவேறிவிட்ட பெருமிதம் அவனுக்கு.

அப்போது ஹாஜியார் தாம் அமர்ந்திருந்த பாயைக் காலிபண்ணிக் கொண்டிருந்தார். அவர் மனம், வேலைக்காரனின் மகன் பட்டதாரி(யா) எனக் குமைந்து கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழுதிடுவீர்

தோப்பூர் ஸஹீட்
(புகுவருடம்—உடற் பயிற்சி நெறி)

மறைதனில் விதித்த ஐம்பெருங் கடமை
கலிமா, தொழுகை, நோன்புடன் ஸகாத்து
இறை இல் ஏகிச் செய்திடும் ஹஜ்ஜு
என்றவை இருப்பினும் இவைக்கெலாம் மேலா
சிறைபட நேரினும் உயிர்விடும் போதிலும்
தொழுகையை என்றும் தொழுதிடு என்றான்

புனித மிஃறாஜின் பெருங்கொடையாக
ஏக நாயன் எமக்கென் றளித்து
மனித இனமே! மாண்புடன் வாழ்ந்து;
மறுவுல கேகியும் மாண்புற வேண்டின்
இனிய இக்கடமை, இடைவிடா தென்றும்
எனக்கென எண்ணித் தொழுதிடு என்றான்

தினம் எனை நினைந்து ஐம்முறை தொழுதால்
வாழ்வுடன் இணைந்து வழிவரும் வினைகள்
மனம் நிறைந்துள்ள மலை நிகர் கவலை
யாவையும் நீங்கி நிறைவுடன் வாழ
இனம் உனை அறிந்து இன்னருள் புரிவேன்
எனத்தம் மறையில் எடுத்தோதிட்டான்.

பிறந்தது முதலாய் இறப்பது வரையில்
பேணுதலாக நோன்பதை நோற்றும்
சிறந்த முறைதனில் சகாத்தைக் கொடுத்தும்
பல முறை ஹஜ்ஜைப் பாங்குடன் முடித்தும்
பேறும் தொழுகையைப் பேணிட மறந்தால்
நாடிடும் நன்மை கிடைத்தலே அரிது.

சிறப்புடன் வந்த மதிப்புறு தொழுகையை
முதலோன் சொற்படி முறையெனத் தொழுது
பிறப்பினிலிருந்து இறந்திடும் வரையும்
சீருடன் வாழ்ந்து; சிறந்தவனாக
மறுவுல கேகி மாண்புடன் வாழ
ஏகனின் ஆணையைச் சிரமேற் கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டாக்டர் பதியுதீன் காலத்தில் கல்வியில் ஏற்பட்ட மறுமலர்ச்சி

எம். எம். றஹீம்

( ஏகுவருடம் — விஞ்ஞானம் )

இந்நூற்றுண்டில் கல்வியில் பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன. இம்மாற்றங்களில் சி. டப்ளியூ. டப்ளியூ. கன்னங்கராவினதும், கலாநிதி பதியுதீனினதும் கல்வி மாற்றங்களாகும். இருள்சூழ்ந்த 1933ல் தனது கல்விச் சிந்தனைகளை CEYLON MUSLIM STANDARD என்னும் சஞ்சிகையில் எழுதிவந்தார். அன்று ஒவ்வொரு சமுகமும் சமுகப் பிரச்சினையில் ஈடுபட்டிருந்ததைக் கண்டித்த அவர் எல்லாச் சமூகங்களினதும் கவனத்தை ஒரு முகப்படுத்தி கல்வியில் அதனைச் செலுத்துமாறு தூண்டினார். அவரது கருத்துக்களும், கொள்கைகளும் காலத்தால் அழியாததாக இருந்ததனுல் தனக்குக்கிடைத்த சந்தர்ப்பத்தை 1956ம் ஆண்டு தொடக்கம் 1959ம் ஆண்டு வரை மறை முகமாகவும் பின்னர் நேரடியாகவும் செய்தார். இவ்வாறுன துணிச்சல் மிக்க செயல் வீரரினது கல்விச் சேவையினை இந்நாடு மறக்க முடியாது.

இலங்கையின் கல்வித்துறையில் அன்றிலிருந்து பலமாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அதி முக்கிய மாற்றங்களாக இலவசக் கல்விமுறை புகுத்தப்பட்டமை, தாய் மொழிகளான சிங்களமும் தமிழும் முக்கிய இடம் பெற்றமை, தனியார் பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப் பட்டமை, 1972ல் பாடவிதானத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியன எனலாம். இம்மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு கன்னங்கராவும், கலாநிதி பதியுதீன் மஹ்மூத் அவர்களுமே காரணமாவார்கள். தனியார் பாடசாலைகளிலே தனவந்தர்கள் தங்களது பிள்ளைகளைச் சேர்த்து அதன் பெறுபேருக நல்ல பட்டங்களையும், பதவிகளையும் பெற்றதோடு பிற்காலத்தில் நல்ல ஊதிபத்தையும் பெற்றனர். இது ஒரு குறிப்பிட்ட வர்க்கத்திலர் தனக்குச் சாதகமானவைகளை சாதித்த காலம். இவற்றிற் கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்குமுகமாகவே பதியுதீன் அவர்கள் அன்று தொடக்கம் தனது கருத்துக்களைப் பத்திரிகையின்மூலமாகவும், சஞ்சிகைகளின் மூலமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டார். அதனூடே தனது கல்வி சம்பந்தமான கருத்துக்களையும் கூறத் தவறவில்லை.

இலங்கைக்கு எவவிதமான கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்று அன்று அவர் கண்ட கனவு, 1960ம் ஆண்டு ஓரளவு நிறைவேற வழிவகுத்தது. 1960ல் கல்வி மந்திரியாக வந்ததும் பல மாற்றங்களைச் செய்ததோடு, 1962ல் தனியார் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்ற கொள்கையினை வகுத்து அதன் மூலம் பொறுப்பேற்கச் செய்தார். இதனால் ஒருதலைப்பட்சமான கல்வி வழங்கல் முறைக்கு சாவுமணி அடிக்கபட்டது. இதன் காரணமாக இவரைப் பல விதமாகச் சாடினார்கள். ஆனால் மந்திரி அவர்கள் இஞ்சித்தேனும் அஞ்சவில்லை. தான் எடுத்த முடிவை சற்றும் தளர்த்தாமல் செவ்வனே செய்து முடித்தார். அவர் அன்று கிறிஸ்த்தவப் பாடசாலைகளை மாத்திரமல்ல, தனது சமுதாயத்திற்குச் சொந்தமான ஒரு பிரபல பாடசாலையொன்றினையும் பொறுப்பேற்கச் செய்தார். இதன் காரணமாக சமுக விரோதி என அவரை, அவரது அரசியல் எதிரிகள் குற்றஞ்சாட்டினார்கள். கல்வி எல்லோருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டும் என்ற தனது கருத்துக்கிணங்க ஒரு சிலரின் ஆதிக்கத்திலிருந்த பிடியை நீக்கினார். அதுமட்டுமல்ல, முஸ்லிம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை யொன்றினை மூடவும் விரும்பினார். எங்கு பாரபட்சமான முறையில் அதிகரிக்கின்றதோ அவைகளைக் குறைக்கும் நோக்குடனேயே அவர் அவ்வாறு நடந்து கொண்டார். தரமான கல்வியைப் பெறமுடியாதிருந்த நிலையில், தரமான கல்விபெறும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த பெருமை இப் பெருமகனையே சாரும்.

ஜனாப் பதியுதீன் ஆங்கிலேயரால் உருவாக்கப்பட்ட 'கிரிக்கட்' விளையாட்டை விரும்பி ரசிப்பவராக இருந்தபோதிலும், அந்த விளையாட்டிலுள்ள திட்டமிடப்பட்ட ஏகாதிபத்தந்திரோபாயங்களை கவனமாக அவதானித்து அது பற்றிய விமர்சன மொன்றினை எழுதியபோது இந்தியாவின் பல பத்திரிகைகளிலும் அது வெளியாயிற்று. அப்போதே அவர் ஆங்கிலேயர் நம்மீது திணிக்கும் கல்விமுறை இடைநிலை உத்தியோகத்தர்களான எழுதுவினைஞர்களையும், காரியாலய சேவகர்களையும் உற்பத்தி செய்யும் யந்திரம் என்பதை உணர்ந்தார். எங்களது நாட்டுக்கல்வி அதற்கேற்ப அமைய வேண்டுமென்பதனை நோக்காகக் கொண்டமையினாலேயே அவர் காலத்தில் இலவசக்கல்வி உறுதிப் படுத்தப்பட்டது.

சமுகத்தின் பால் அன்பு கொண்டிருப்பது மிக்க அவசியமென்பதனை ஒவ்வொருவரும் நன்குணர்வர். அதுவும் அரசியல் வாதிகள் தேசிய ரீதியாக இருந்தாலும் சமுகத்தின் மீது பற்றுக்கொண்டிருப்பது இயற்கை. அதே தோரணையில்த்தான் முஸ்லிம்கள்பால் பற்றும், பாசமும் கொண்டிருந்தார். அதற்காக அவர் ஓர் பெரிய பாடசாலை யொன்றினை ஸ்தாபித்தார். ''அது ஈழத்தின் மத்திய பிரதேசத்தில் அமைந்திருக்கும் கம்பளை நகரிலிருந்தே இலங்கையெங்கிலும் கல்வி யென்னும் ஒளியைப் பரப்பவேண்டும். அது இலங்கையிலும் வாழும் இஸ்லாமியருக்காக கம்பளை சாகிராவை ஓர் உன்னதமான கலைக்கூடமாகவும், கலைக்களஞ்சியமாகவும் நிலை பெறச் செய்தல் வேண்டும். கல்வியும் கலாச்சாரமும், சன்மார்க்கமும் ஒன்றித்து பற்றிப் பிணைந்து கலப்பதோடு மட்டுமல்ல அவசி ஆராயப்பட்டு தத்துவார்த்த உண்மைகள் புலப்படுத்தலுக்குரிய மத்தியஸ்தானமாக விளங்கவேண்டும், கல்வியறிஞர்களையும், மேதைகளையும், விஞ்ஞானிகளையும் உற்பத்தியாக்கும் ஒரு ஸ்தாபனமாகத் திகழ வேண்டும், இது ஆன்ம ரீதியில் மட்டுமல்ல அறநெறியிலும் சிறந்து விளங்குதல் வேண்டும்.'' என்ற வாஞ்சையினால் சாகிராவின் வளர்ச்சியில் ஈடுபட்டார். கொழும்பு சாகிராக் கல்லூரி தலைப்பட்டினத்தில் இருந்த காரணத்தினாலும், உயர் திரு T. B. ஜாயா அவர்கள் பால் கொண்ட பெரு விருப்பினாலும் அரசாங்கம் பொறுப்பேற்று அதிஉன்னதை ஸ்தானத்திற்குக் கொண்டு வரமுனைந்தார். ஆனால் ஒரு சிலர் அதனை மூர்க்கத்தனமாக எதிர்த்து வழக்காடி மீண்டும் தனியார் குழு நடாத்தும் பழைய நிலைக்கு ஆக்கினர். கொழும்பு சகிராக் கல்லூரி அரசாங்கத்தின் கட்டுப் பாட்டினுள் வந்திருந்தால் அது இன்றைய நிலையைவிடப் பன் மடங்கு உயர்ந்திருக்கு மென எதிர்பார்க்கலாம். இருந்த பொழுதிலும் ஜனாப் பதியுதீன் அவர்களின் ஆதரவும், நல்லாசியும் என்றென்றும் அக்கல்லூரிக்கு இருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது பதவிக் காலத்தில் கல்வித் துறையில் பல் புரட்சிகரமான மாற்றங்களைச் செய்துள்ளார். பல இனத்தவர்களினுடைய கல்விக் குறைபாட்டினைதாமே முன்னின்று நிவர்த்தி செய்தார். கிராமப்புறங்களில் பாடசாலைகள் இல்லாதிருந்த குறையை நீக்கிப் பல பாடசாலைகளை நிறுவ வழி வகுத்தார். தேவையான அளவு ஆசிரியர்களையும், தெரிவு செய்து பலருக்கு வேலைவாய்ப்பளித்ததோடு பிரச்சனையற்ற கல்வியையும் கொடுத்தார். கல்வியில் பின்தங்கியிருந்ததன் காரணமாக பின்தங்கியவர்களினுடைய சமூகத்திற்கான ஆசிரியர்களையும், உயர் அதிகாரிகளையும், தொழில் நுட்பக் கல்வித் துறையில் விசேட பயிற்சி பெற்றவர்களையும் நியமித்தார். மௌலவி நியமனங்களையும் வழங்கியதோடு நில்லாது மத்ரசாக் கல்வி முறையிலும் பல புரட்சிகரமான மாற்றங்களைச் செய்து 'அல் ஆலிம்' பரீட்சையையும் ஆரம்பித்தார். கலாசார அடிப்படையில் பாடப்புத்தகங்களையும் உருவாக்கும் பொருட்டு புத்தகக் குழு வொன்றினையும் ஏற்படுத்தினர். இவைகளெல்லாம் பொதுவாக எல்லாச் சமூகத்தினருக்கும், குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினருக்கும் அவர் ஆற்றிய சேவையின் ஒரு பகுதியெனில் மிகையாகாது.

இன்று மாணவ சமுதாயம் மதத்தினின்றும் விலகி, மதத்தைப் பற்றி நன்குணராது நாஸ்திகப் புயலில் சிக்குண்டு அல்லலுறுகின்றது. இதனைக் களைந்து தார்மீக ரீதியிலானவைகளை எதிர்காலத்தின் மனிதர்களான மாணவர்கள் பெற வேண்டுமென்ற அவாவினல் மதக்கல்வியின் அவசியத்தையுணர்ந்த மந்திரியவர்கள் அக்கல்விக்குப் போதிய ஊக்கமளிக்க ஆவன செய்தார், ஒரு நாட்டின் சட்டமும், ஒழுங்கும் அந்நாட்டின் இளம் சிறுர்களுக்குப் புகட்டப்படும் அறநெறிக் கல்வியிலேயே தங்கியுள்ளது.

கலாநிதி பதியுதீன் தான் பதவி வகித்த ஆரம்பக் குறுகிய காலத்தில் போதிய அவகாசமில்லையால் பல சீர்திருத்தங்களைச் செய்ய முனைந்தும் காலம் போதவில்லை. இருந்த பொழுதிலும் மீண்டும் **1970**ல் கல்வியமைச்சரானதும் தனது சீர்திருத்தங்களைச் செய்வதற்கு வேண்டிய ஆக்க வேலைகளைச் செய்தார். ஆங்கிலக் கல்வி முறையின் வாடையே வீசாமல் செய்ய எண்ணியதோடு தற்போது நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் காரணமாயுள்ள கல்வி முறையினையும் எண்ணி புதிய சீர்திருத்தத்தை மக்கள் முன் வைத்தார். முன்பிருந்த கல்வி முறை மாணவ சமுதாயத்திற்கு அமைதியின்மையும், கட்டுப்பாடற்ற தன்மையயும் கொடுத்தபோதிலும் இக்கல்விச் சீர்திருத்தங்களையும் எனக் கருதியே அமுலுக்குக் கொண்டு வந்தார்.

ஏறத்தாழ ஐந்து வருடங்களுக்கு முன்னர் இலங்கைக்கு விஜயம் செய்த டட்லி சீயர்ஸ் ''அரசாங்க உத்தியோகங்களில் கவர்ச்சி குறைதல் வேண்டும். செய்கை முறை வேலைகளுக்கும், உளச்சார்புச் சோதனைகளுக்கும் தேசிய இளைஞர் சேவைகளுக்கும் முக்கிய இடமளிக்கப்பட வேண்டும். இவை நிறைவேற வேண்டுமானல் கல்வி முறையிலும் பாட விதானத்திலும் கற்பிக்கும் முறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட வேண்டியது அவசியமகும்' என்ருர். அது மட்டுமல்ல வெளிநாட்டறிஞர்களும் நமது தற்போதைய புரட்சிகரமான கல்வித்திட்டத்தை நன்கு விளங்கிக் கொண்டு பாராட்டியுமுள்ளனர்.

முன்பிருந்த ஏட்டுக்கல்வி முறையினை நீக்கி நாட்டின். சமூக பொருளாதாரச் சூழல்களுக் கேற்ப நாட்டின் தொழில் வளங்களைப் பெருக்கும் வகையில் 'மனித சக்தி' திட்டமிடப்பட்டு ஒவ்வொரு இளைஞனும் நாட்டிற்கு உபயோகமுள்ளவனுகவும், தனக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் வாழக் கூடியவனுகவும் இன்றைய அமைப்பை மாற்றியமைப்பதன் ஒரு முக்கிய அம்சமே **1972**ல் அமுல் செய்யப்பட்ட புதிய கல்வி முறையாகும். பாட விதானத்தில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றம் இளைஞர் மத்தியில் புதிய எழுச்சியினை இன்று ஏற்படுத்தியுள்ளது. இதில் நாட்டின் உயர்ச்சிக்கு முக்கியத்துவமளிக்கப்பட்டு, நாட்டுப் பற்றினை ஊக்கும் வகையிலும் அமைந்துள்ளது. இக்கல்வி முறை ஒருவனை சூழலோடு ஒன்றிணைக்கும் சாதனமாக ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

புதிய கல்வித் திட்டத்தின் பிரகாரம் ஒரு மாணவனினது பாடசாலைக் கல்வி மூன்று பிரதான பகுதிகளைக் கொண்டது. **1**ம் வகுப்பிலிருந்து **5**ம் வகுப்புவரை ஆரம்பக்கல்வியும் **6**ம் வகுப்பிலிருந்து **9**ம் வகுப்புவரை கனிஷ்ட இடைநிலைக்கல்வியும், **10**ம் வகுப்பிலிருந்து **11**ம்

வகுப்பு வரை சிரேஷ்ட இடை நிலைக்கல்வியும் அளிக்கப்படும் கனிஷ்ட இடை நிலைக் கல்வியில் மொத்தமாக இடம் பெறும் பத்துப் பாடங்களும் கட்டாய பாடமாகும். இங்கு தொழில் முன்னிலைப்பாட நெறி I, II எனவும் உள்ளது. கனிஷ்ட இடை நிலைக்கல்வி பெற்ற மாணவர்கள் 9ம் வகுப்பின் இறுதியில் தேசிய பொதுக்கல்வித் தராதரப் பத்திரப் பரீட்சைக்குத் தோற்றுவர். இது முதன் முதலாக இவ்வாண்டு **(1975ல்)** நடைபெறும். எல்லாப் பாடங்களும் கட்டாயபாடமாகையால் ஆசிரியரின் சிரத்தையோடு மாணவர்களும் அதிசிரத்தையுடன் கற்க வேண்டும்.

இப்பாடத்திட்டம் தொழில் முன்னிலைப் பாடத்திற்கு அதிவிசேட முக்கியத்துவம் கொடுக்கின்றது. வருடா வருடம் கல்விக்காக வரவு செலவுத்திட்டத்தில் அதிகளவு தொகைப்பணம் செலவு செய்யப் படுவதால் அக்கல்வி நாம் வாழும் சமுகத்திற்கு தொடர்புள்ளதாக மட்டுமல்ல நாட்டினை வளப்படுத்தவும் உதவ வேண்டும்.

கல்வியமைப்பு வேலையில்லாத் திண்டாட்டத்தையும், விரக்தி மனப்பான்மையையும் ஏற்படுத்தினால் அதனால் நாட்டின் எதிர்காலம் வெகுவாகப் பாதிக்கப்படும். கல்வித்திட்டம் நாட்டிற்குகந்த நற்பிரஜைகளை—நாட்டுப் பற்றுள்ளவர்களை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடும் முதற் கட்டமாக தேசிய சேவையில் ஈடுபடுத்துகின்றது. ''தான் பிறந்த நாட்டுக்குச் சேவை செய்வது கற்றறிஞர்களின் கட்டாயக் கடமையாகும்'' என்பது தத்துவ ஞானி பிளாட்டோவின் கருத்தாகும். இங்கு மூன்று பருவங்களாக இத்தேசிய சேவை பிரிக்கப்படுகின்றது. அவையாவன:

i. கனிஷ்ட இடை நிலைக் கல்வியின் பின்னரும், சிரேஷ்ட இடை நிலைக் கல்வியையும், தொழில் நுட்பக் கல்வியையும் தொடராதோர் அந்நிலையிலும்,

ii. சிரேஷ்ட இடை நிலைக் கல்வி, கனிஷ்ட தொழில் நுட்பக்கல்வி ஆகிய வற்றின் பின்னர் உயர்கல்விக்குத் தெரிவு செய்யப்படாதோர் மேற்கொண்டு தொழிலில் ஈடுபடு முன்னரும்,

iii. பல்கலைக்கழக, தொழில் நுட்பக் கல்வியை முடித்தபின் தொழிலில் ஈடுபடுவோருக்கு தேசிய சேவையில் இந்நிலையில் இடம் பெறுவர்.

ஆனால் மூன்று பருவங்களிலும் தேசிய சேவையின் தன்மையில் மாறுபடும் தேசிய சேவை முகாம்கள், கல்வி நிலையங்கள் போன்றே அமைக்கப்படும். மேற்குறிப்பிட்டவாறு கல்வித்திட்டம் மாணவர்களினது மனப்பக்குவத்தையும், உளத்திறனையும், அனுபவத்தையும், நன்கு வளர்க்கும் வகையிலும் வளப்படுத்தும் ரீதியிலும் ஆக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும், பல்கலைக் கழகங்களை இவர் காலத்திலேயே புனரமைக்கப்பட்டது. முன்பு பல பல்கலைக் கழகங்கள் என வழங்கப்பட்டவை அனைத்தும் பின்னர் ஒருமுகப் படுத்தப்பட்டு அவையனைத்தும் ஒரே பல்கலைக்கழகமாக—இலங்கைப் பல்கலைக்கழகமாக ஆக்கினார். இதன் அடிப்படையில் இலங்கையில் ஏற்கனவே ஆறு வளாகங்கள் இயங்கிவந்தன. இருப்பினும் தகுதி பெறுவோர் அனைவருக்கும் உயர்கல்வி புகட்டப்பட வேண்டுமென்ற தனது கொள்கையினால், யாழ்ப்பாணத்திலும் சென்ற அக்டோபர் மாதம் ஒரு வளாகத்தினையும் திறந்து வைத்தது பெருமைக்குரிய விடயமாகும்.

எனவே, கலாநிதி பதியுதீன் அவர்கள் இவ்விருபதாம் நூற்றாண்டில் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் கல்விக்குச் சேவை செய்தோருள் முன்னிடம் வகுக்கின்றூர். இவரது காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் சரித்திரப் பிரசித்தி பெற்றவை மட்டுமல்ல எதிர்காலத்தில் பெரும் தாக்கத்தினையும் ஏற்படுத்த வல்லது. புதிய கல்வித்திட்டம் இந்நாட்டிற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும். இலங்கையின் எதிர்காலச் சந்ததியினரின் நல்வாழ்வும், இந்நாட்டின் பொருளாதாரமும் இதில் தங்கியுள்ளது, எனில் மிகையாகாது. இவ்வாறுன ஒரு சிறந்த கல்விச் சிந்தனையாளரை கல்வி அமைச்சராக இந்நாடு பெற்றமை பெரும் பேருகும். கலாநிதி பதியுதீன் காலத்தில் இலங்கையின் கல்வித்துறையில் புதுத்திருப்பமும் உருப்படியான மாற்றங்களும், மறுமலர்ச்சியும் ஏற்பட்டன. இம்மாற்றங்கள் நவீன இலங்கையை சிருஷ்டிப்பதில் பெரும் அத்திவாரமாகத் திகழுமென எதிர்பார்க்கின்றேம். இக்கல்வித்திட்டம் குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு கலாநிதி பதியுதீன் கல்வியமைச்சராக தொடர்ந்திருக்க வேண்டியது தவிர்க்க முடியாததொன்றுகும். இந்நிலைக்காக நாடும், நாமும் பிரார்த்திப்போமாக.

### ஈழத்து முஸ்லிம் நாவலாசிரியர்கள்

*1891* முதல் *1962* வரையிலான கால கட்டத்துக்குள் இளங்கீரன் 21 நாவல்களும் எம். ஏ. அப்மாஸ் 6 நாவல்களும். டி. எம். பீ. முகமது 2 நாவல்களும் எழுதியுள்ளனர். இவர்களோடு எம். செயினுல் ஆப்தீன், காயல் தாசிர், ஹசேன். எம். பீ. எம், முகம்மது காசீம், பாதிமா மொகிதீன் ஆகியோர் தலா ஒவ்வொரு நாவலும் எழுதி உள்ளனர்.

### இஸ்லாமிய உலக வங்கி

இருபத்து நாலு உலக நாடுகள் சேர்ந்து உலக இஸ்லாமிய வங்கி ஒன்றைத் துவக்கியுள்ளன. இவ்வங்கி உலக வங்கிக்கு நிகராக இருக்கும். இவ்வாண்டு அக்டோபர் முதல் இயங்க ஆரம்பிக்கும்.

சவூதி அரேபியாவைச் சேர்ந்த டாக்டர் அகமத் அலி இந்த வங்கியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதன் ஆரம்ப முதலீடு 8 கோடி 10 இலட்சம் டாலர்களாகும்.

### சோவியத் இஸ்லாமிய நினைவுச் சின்னங்கள்

25 ஆயிரம் நூல்களைக்கொண்ட தாஷ்கந்த் முஸ்லிம் சமய நிர்வாகசபையின் நூல் நிலையத்தில், திமுர் காலத்தையும், திமுர் வம்சத்தினரின் காலத்தையும் சேர்ந்த ஒளிவிடும் தங்கக் குஆனும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய பல அரிய கையெழுத்துப் பிரதிகளும் உள்ளன.

பெயர் தெரியாத எத்தனையோ அறிஞர்களின் திறமிக்க கரங்கள் இந்தக் குர்ஆனின் முதல் பக்கத்திலிருந்து கடைசி எழுத்துவரை ஒவ்வொரு பக்கத்தையும், அழகுற தீட்டி, அற்புத வேலைப்பாடுகளினுல் சிங்காரித்துள்ளன. இந்தச் சின்னங்கள்விலை மதிப்பிடற்கரியவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நிகழ்ச்சி

செல்வி. எம். எஸ். எஸ். யு. பதுரியா
புகுவருடம்—கணிதம்

இற்றைக்கு 1400 வருடங்களுக்கு முன்! ஒரு சிறுமி ஓர் அராபியின் வீட்டினுள் நுழைகின்றாள்...

அவளது காந்தக் கண்கள் கண்டவர் மனத்தைக் கவர்ந்தன. அவள் தன் கூந்தலில் சூடியிருந்த அழகிய வண்ண மலர்கள் அவளைச்சூழ நாலாபக்கங்களிலும் நறுமணத்தை அள்ளி வீசின. அவளோ பூரண சந்திரனைப்போல் பொலிவுற்று விளங்கினாள். அச்சிறுமியின் முக அழகால் பெரிதும் கவரப்பட்டார் அவ்வரபி. அவர் தன் மனைவியைப் பார்த்து ''இது யாருடைய குழந்தை'' என வினவினார். இதற்கு என்ன மறுமொழி கூறலாம் எனத் தினறினார் அவரது மனைவி. திடீரென அவளுடைய முகம் வெளிறியது. உடல் வியர்வையால் நனைந்தது. மூக்கிலிருந்து சூடான பெருமூச்சு வெளிவந்தது. கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வழிந்தோடியது.

''ஏன் அழுகின்றாய் யாது நிகழ்ந்தது?'' என அவளிடம் ஏக்கத்துடன் வினவினார் அவ்வரபி. அவளோ ஒன்றுமே பேசாது தேம்பித் தேம்பி அழுதாள். ''என்ன நிகழ்ந்தது? யார் உனக்கு என்ன தீங்கு செய்தார்கள்?'' மனைவிக்கு ஆறுதல் மொழிகூறி மீண்டும் ஏக்கத்துடன் வினவும் அரபியின் குரல் அது! ''யாரும் எனக்கு எதுவும் செய்யவில்லை. அது நமக்குப் பிறந்த குழந்தைதான்'' என்று கண்ணீருக்கிடையே கூறினாள் அவள். அவ்வளவுதான் சில கணங்களுக்கு முன்பு அன்பே உருவாய் எதை நோக்கிக் கொண்டிருந்தாரோ அங்கே அவ்வரபியின் கொடூரமான பார்வை பதிந்தது அவனுடைய முகம் சினத்தால் சிவந்தது. இரத்தம் கொதித்தது. கொடிய வனவிலங்கு போன்று மாறினார்.

பெண் குழந்தையென்றால் அது பிறந்தவுடன் குழி தோண்டிப் புதைக்க வேண்டுமென்ற காலமது. தனக்குப் பிறந்த இப்பெண் குழந்தையைத் தனக்கே தெரியாமல் தன்மனைவி இவ்வளவு காலமும் வளர்த்து வருகின்றாளே என்ற ஆத்திரம் தான் அவ்வரபிக்கு ஆவேச வெறியைக் கிளம்பச் செய்தது. தான் பிரயாணத்திலிருக்கும்போது தன்மனைவி ஈன்றெடுத்த அக்குழந்தையை அவள் உயிருடன் உடனே புதைத்து விடவில்லையே என்ற கோப வெறி அவருக்கு......

சில நாட்கள் சென்றன ஒருநாள் அவருடைய மனைவி உறங்கிக் கொண்டிருக்கின்றாள். அவர் அப்பெண்குழந்தையை வெளியே அழைத்துச் செல்கின்றார். எங்கே? புதைகுழியை நோக்கி அங்கு சென்று அவசரம் அவசரமாக குழியைப் பறிக்கின்றார். அக்குழந்தையைக் குழியிலே நிறுத்தி மண்ணைத் தள்ளுகிறார். இதைக்கண்டதும் அக்குழந்தை தன் வாயைத் திறந்து யாழினும் இனிய மழலை மொழியில் ''தந்தையே! என்னை என்ன செய்கின்றீர்கள்?'' என்று வினவியது. அக்குழந்தையின் இன்னமுதமொழி அந்த அரபியின் கல்மனதை இறுகச் செய்ததே யொழிய இளகச் செய்யவில்லை. யாதொரு மறுமொழியும் கூறாது மீண்டும் மீண்டும் மண்ணைத் தள்ளினார் அவ்வரபி. கள்ளங்கபடறியா அக்குழந்தை மீண்டும் கதறுகிறது. ''தந்தையே! ஏன் இவ்வாறு செய்கிறீர்கள்?'' இது குழந்தையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியமொழி. தந்தையின் வாயிலிருந்து எவ்வித மறுமொழியும் வரவில்லை. அவரது கைகளும் கால்களும் மண்ணைத் தள்ளுவதிலே மும்முரமாக ஈடுபட்டன.

குழந்தையின் குரல்வளைக்கு நெருக்கமாக மண் குவிக்கப்பட்டுவிட்டது. மீண்டும் அக்குழந்தை ''அப்பா! அப்பா! என்னை ஏன் இவ்வாறு செய்கின்றீர்கள்? வெளிச்சமும் காற்றும் உணவுமில்லாது எவ்வாறு நான் இங்கு வாழ்வேன்?'' என்று கல்மனத்தையும் கரையச் செய்யும் வண்ணம் கதறியது, மண்ணை நிறைப்பதிலே அவருடைய முழுக்கவனமும் இலயித்திருந்தது. ''அப்பா! அப்பா!'' என்ற அழுத மொழி அடங்கி குழந்தையின் உடல் மறையும்வரை அவர் மண்ணைத் தள்ளினார். அவருடைய கைகள் ஓயும் வரை மண்ணைத் தள்ளினார். கால்கள் தள்ளாடும்வரை அப்புதை குழியின் மேல் நின்று மிதித்தார். கல் மனத்தையும் கரையச் செய்யும் இந்நிகழ்ச்சி வெறும் கற்பனைத் திரட்டல்ல. ''அய்யாமுல் ஜாகிலிய்யா'' எனப்படும் அறிவிலிகளின் காலத்திலே நிகழ்ந்த உண்மைச் சம்பவம் இது. அந்த அரபி பிரயாணத்திலிருந்த போது அவரது மனைவிக்குப் பிறந்தது தான் அவரால் புதைக்கப்பட்ட அப்பெண் குழந்தை. என் செய்ய? பெண் குழந்தை என்றால் குழி தோண்டிப் புதைக்க வேண்டிய காலமல்லவா அது. பாசம் நிறைந்த அன்னைதான் என் செய்வாள்? தன் கணவன் பிரயாணத்திலிருந்து திரும்பியதும் அப்பச்சிளங் குழந்தையைக் குழி தோண்டிப் புதைத்து விடுவாரே என்றெண்ணி அஞ்சிக் கொண்டிருந்தாள் அம்மங்கை. தனக்குப் பிறந்த குழந்தை பிறக்கும் போதே இறந்து விட்டதாகவும் உண்மையை மறைத்துக் கூறினாள். கணவனுக்கு மறைவாகவே குழந்தையை வளர்த்தாள்.

மறைவாகவே வளர்க்கப்பட்ட அக்குழந்தையைக் கண்ட அவ்வரபி உடனே குழி தோண்டி தன் கைகளாலே புதைத்து விட்டார். பெண் குழந்தையை அவ்வரபி மட்டும் உயிரோடு புதைக்கவில்லை. அக்கால அரபுநாடு முழுவதும் இவ்வழக்கம் இருந்து வந்தது. தனக்குப் பெண் குழந்தை பிறந்த செய்தியை ஓர் அரபி கேள்விப்படின் அவருடைய முகம் திடீரெனக் கறுத்துவிடும். சொல்லொணு அவமானத்தால் மனிதரின் கண்களிலிருந்து மறைந்து திரிவான். அக்குழந்தையைக் கொன்றொழிக்கும் வரை அவன் மனம் அமைதி பெறுவதில்லை. இதனுல்தான் அந்த அரபியும் தனக்குப் பிறந்த பெண் குழந்தையை உயிரோடு புதைத்து விட்டார்.

இந்நிகழ்ச்சியை அவ்வரபி முஸ்லிமானபின் ஒருநாள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கூறி (இந் நிகழ்சியானது) இன்றைக்கும் தன் உள்ளத்தைத் துளைத்துக் கொண்டிருக்கின்றது என்று கூறினார். இதனைக் கேட்ட நாயகம் (ஸல்) அவர்களின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஓடியது. ''இவ்வளவு கொடியதாகவும் இதயம் இருக்கின்றதா?'' எனக்கூறி பெருமூச்சு விட்டார்கள். ★

## மனநோய் வைத்தியசாலை

1304ம் ஆண்டளவில் மனநோய்க்காரர்களுக்கான ஒரு வைத்தியசாலை முஸ்லிங்களால் கட்டி முடிக்கப்பட்டது. அதுவே, உலகில் முதன்முதலில்நிறுவப்பட்டது மனநோய் ஆஸ்பத்திரியாகும். இங்கு பைத்தியக் காரர்களுக்கு மனேதத்துவ முறையில் தகுந்த மருத்துவ நிபுணர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டது. இதனைப் பின்பற்றியே 18ம் நூற்றுண்டில் இங்கிலாந்து மாநகரில் இத்தகைய சிகிச்சை நிலையம் ஒன்று நிறுவப்பட்டது.

ஏ. எம். அபூபக்கர்
(அறிவுத் துறையில் முஸ்லிங்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேட்டிக் கட்டுரை

# முஸ்லிம் தொழில் நிறுவனங்கள்

சந்திப்பு : ஏ. எல். அப்துல் மஜீது (பிரதியமைச்சர்)

தகவல் ஒலிபரப்பு பிரதியமைச்சர் ஜனாப். ஏ. எல். அப்துல் மஜீது அவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ''முஸ்லீம் தொழில் நிறுவனங்கள்'' என்பது பற்றிப் பிரஸ்தாபித்து வருகின்றார்.

அகில இலங்கை ரீதியாக இஸ்லாமியக் கலை விழாக்களைப் பலமுறை நடாத்திய அவர், அந்தக் கலை விழாக்களிலெல்லாம் இந்நிறுவனம் பற்றி குறிப்பிட்டு வந்திருக்கிறார்.

இன்றைய இலங்கை இஸ்லாமியர்களின் பொருளாதார நிலையையும் வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் மனதிற் கொண்டு பார்க்கையில் ஜனாப். மஜீது அவர்கள் குறிப்பிடும் 'முஸ்லீம் தொழில் நிறுவனம்' அவற்றிற்குப் பரிகாரம் தருமா எனச் சிந்திக்கத் தூண்டிற்று.

முஸ்லீம் தொழில் நிறுவனங்களின் அமைப்பு, நோக்கு, நடைமுறை முதலியவற்றைத் தெரிந்துகொள்ளும் நோக்குடன் அவரை பேட்டிகாண விழைந்தோம்.

எங்கள் கேள்விகளையும் அவரது பதில்களையும் கீழே தொகுத்து தந்திருக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'முஸ்லீம் தொழில் நிறுவனங்கள்' பற்றி அடிக்கடி பேசி வருகின்றீர்கள். இப்படி ஒரு நிறுவனம் அவசியம் என நீங்கள் ஏன் கருதுகிறீர்கள்?**

இஸ்லாமிய சகோதரர்களின் இன்றைய பொருளாதார சீர்கேடு, ஏழ்மைநிலை இவற்றை நான் நீண்ட காலமாக அவதானித்து வந்திருக்கிறேன். இவற்றை நீக்குவதற்கான உபாயங்கள் என்ன என நான் அடிக்கடி சிந்திப்பதுண்டு.

வியாபார நோக்கமாக இலங்கைக்கு வந்த முஸ்லீம்கள் அந்தக் காலத்தில் சிங்கள மக்களுடன் இணைந்து வெளிநாட்டவரை எதிர்த்துப் போரிடும் பணியில் எவ்வளவு அக்கறையோடு உழைத்தார்கள் என்பதைச் சரித்திரம் கூறுகிறது. அப்போதெல்லாம் முஸ்லீம்கள் இலங்கையில் எவ்வளவு தூரம் செல்வாக்குடனும் பொருளாதார சுபிட்சத்துடனும் வாழ்ந்தார்கள் என்பதை, இன்றைய இஸ்லாமிய சகோதரர்களின் பொருளாதார நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகுந்த வேதனையாக இருக்கிறது.

நமது ஏனைய சகோதரர்களின் வாழ்க்கைத் தரத்தை ஒப்பிட்டு நோக்கும்போது நாம் எவ்வளவு பின்தங்கிய நிலையில் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

எனவே இந்தச் சீர்கேட்டை நீக்குவதற்கான பலவழிகளில் முஸ்லீம் தொழில் நிறுவனங்கள் பெரும் பங்கு கொண்டு உழைக்கலாம் என நான் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

**இந்த நிறுவனங்களின் அமைப்பு எப்படி இருக்கவேண்டும்?**

இலங்கையிலுள்ள ஒன்பது மாகாணங்களிலுள்ள 22 மாவட்டங்களிலும் முஸ்லீம்கள் பரவலாக வாழ்கின்றார்கள். இவர்கள் அனைவரது பொருளாதார நிலையையும் மனதிற்கொண்டு இந்நிறுவனங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

நமது நாட்டில் பணபலமுள்ள பல முஸ்லீம்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்கள் அனைவரும் சமூகத்தின்பால் உள்ளன்போடு தங்களால் இயன்ற பெருந் தொகைகளை இனமாகத் தந்துதவ முன்வரவேண்டும். இவர்கள் இடுகின்ற நிதியின் அளவைப் பொறுத்துத்தான் இந் நிறுவனங்களின் எதிர்காலமே தங்கி இருக்கின்றது. நமது மத்தியிலுள்ள அறிஞர்களிலும் ஆலோசனை, திட்டமிடல், நிர்வாகம் போன்ற துறைகளில் இலவசமாக உழைக்க முன்வரவேண்டும். இவை இரண்டும்தான் இந் நிறுவனங்களின் ஆரம்ப முதலீடாகும்.

மத்தியில் தலைமை நிலையத்தையும், முஸ்லீம்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதிகளில் கிளை நிறுவனங்களையும் அமைத்து இது இயங்க வேண்டும்.

அந்தந்தப் பகுதியில் என்னென்ன அமைப்புகளில் இந்நிறுவனங்களை அமைக்கலாம் என நுணுக்கமாகச் சிந்தித்து செயலாற்றவேண்டும். வேலையற்ற பாமர மக்களும் படித்த வாலிபர்களும் பயன்பெறும் வகையில் செயல் திட்டங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

இஸ்லாமிய சகோதரர்களின் வறுமையினை நோக்குவதே இதன் முக்கிய நோக்கமாகும். எனவே இலங்கையில் பரவலாக இயங்கி வருகின்ற இஸ்லாமிய இயக்கங்கள் சகலதும் முஸ்லீம் தொழில் நிறுவனங்கள் தொடர்பாக எல்லா ஒத்துழைப்புக்களையும் அளிக்க முன்வரவேண்டும்.

செங்கற் தொழிற்சாலைகள், ஓட்டுத் தொழிற்சாலைகள் மீன்பிடி விவசாயக் கூட்டுப்பண்ணைகள், பீடி உற்பத்தி, விவசாயம் போன்ற தொழில் துறைகளையும் மற்றும் அந்தந்தப் பிரதேசங்களுக்குப் பொருந்தக் கூடிய தொழில் வாய்ப்புக்களையும் ஆராய்ந்து அமைக்கலாம்,

இலங்கையிலுள்ள மற்ற சமூகங்களுக்கு நிகராக இஸ்லாமியர்களும் பொருளாதார வளர்ச்சிபெற உதவுவதும், வறுமையிலிருந்து மீட்சிபெறுவதுமே இதன் அடிப்படை நோக்கமாகும்.

**இலங்கை முஸ்லீம் தனவந்தர்கள் அளிக்கின்ற பணவுதவிகள் போதுமானதாக இருக்குமா?**

அந்த அளவுக்கு பணவுதவிகள் கிடைக்க வேண்டியது அவசியமாகும். இஸ்லாமிய சமூக மறுமலர்ச்சிக்காக செலவிடுகின்ற தொகையாக அவர்கள் இதனை எண்ணிக் கொண்டு உதவ முன்வரவேண்டும்.

நோன்பு மாதத்தில் 'லைலத்துல் கதர்' இரவன்று முஸ்லீம் கிராமங்களில் கூட்டம் கூட்டமாகத் திரிகின்ற முஸ்லீம் ஏழைச் சனங்களின் தொகையையும் அதன் வறுமையையும் மிகவும் அனுதாபத்துடன் எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்களது வாழ்வின் சுபீட்சம் பற்றி நாம் சிந்திக்காமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்க முடியாது. அவர்களுக்காக நாம் உடனடியாக ஏதாவது செய்தாகவேண்டும்.

நபிகள் நாயகம் அவர்கள் இரண்டரை வீத கட்டாய தர்மவரியினை ஏற்படுத்தி னூர்கள். அதன் தாத்பரியத்தினை நாம் பெருந்தன்மையுடன் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இலங்கையிலுள்ள முஸ்லீம் தனவந்தர் கள் அனைவரும் தங்கள் சகோதரர்களின் நல்வாழ்விற்கு அத்திவாரமிடுகிறோம் என்ற ஆழமான நம்பிக்கையுடன் பொரு ளுதவி அளிக்க முன்வரவேண்டும்.

சிலர் மட்டும் சுகபோகமாக வாழவும், பல சகோதரர்கள் உண்ண உணவின்றி வாடவும் நாம் பார்த்து மகிழ்ச்சி அடைய முடியாது. இந்த நிலை மாற முஸ்லீம் தொழில் நிறுவனங்கள் பெரும் பங்கு கொண்டு உழைக்கலாம் என்பதே எனது திடமான நம்பிக்கையாகும்.

வெளிநாட்டிலிருந்து நமக்கு உதவ விரும்புகின்ற முஸ்லீம் நாடுகளின் உதவி யையும் பெற்றுல் இந்நிறுவனத்தை நாம் மகோன்னதமாக இஸ்தாபிக்க முடியும். நமது அரசாங்கத்தின் அனுசரணையுடன் செல்வம் மிக்க முஸ்லீம் நாடுகளின் பொரு ளாதார உதவிகளைப் பெற்று முஸ்லீம் தொழில் நிறுவனத்தை நாம் பரவலான பலன்தரும் நல்லியக்கமாக மாற்றிவிட முடி யும்.

மற்றும் இந்நிறுவனத்திற்கு அரசாங்க உதவிகள் வங்கிக்கடன்கள் ஆகியன பெற்று உடனடித் தேவைகளை நாம் தீர்த்துக் கொள்ள முடியும். பணம்தான் மிக முக்கிய உடனடித் தேவையாகும்.

**முஸ்லிம் தொழில் நிறுவனங்கள் அரசியல் பின்னணியானதா?**

அரசியல் ஆதரவுடன்தான் இப்படி ஒரு பிரமாண்டமான தொழில் நிறுவ னத்தை அமைத்தல் சாத்தியமானதாகும். ஆனுல் அதே நேரத்தில், இந்நிறுவனம் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டதாக— சுயேச்சையானதாக இயங்கும்.

அரசியலில் செல்வாக்குடன் விளங்கும் முஸ்லிம் தலைவர்கள் இத்தொழில் நிறுவ னங்களில் முன்னின்று உழைத்தல் அவசி யமாகும். ஆனுல், அதே நேரத்தில், கட்சி அரசியலை இதனுள் கலந்துவிடாமல், மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

**இப்படி ஓர் அமைப்பு, இங்கு வெற்றி பெறும் என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

நிச்சயமாக! நமது மத்தியில் வறுமை யும், கஸ்டமும் நீக்கப்படாதவரை நாம் சமூக உயர்வு பற்றி சிந்திக்கவே முடியாது. எனவே, சிந்தனையில் ஒருமைப்பாடு உடை யவராக நாம் மாற வேண்டும். சிந்தனை ஒருமைப்பாடு, சமூகப்பற்று இரண்டும் இணைந்துவிட்டால், நிச்சயமாக இப்படி ஓர் அமைப்பினை வெற்றிகரமாக நடாத்த முடியும்.

**முஸ்லிம் தொழில் நிறுவனங்கள்'' வளரும் போது, அது ஒரு வகுப்புவாத இயக்கமாகும்.'' என்று குற்றம் சாட்டப்படலாமல்லவா?**

இந்த எண்ணம் தவறுனதாகும். ஏக சகோதரத்துவத்தை வலியுறுத்தி வரு கின்ற இஸ்லாம், ஒருபோதும், வகுப்பு வாத, இனவாத வெறிகளுக்கு இடம் கொ டுத்தது கிடையாது.

இலங்கையிலுள்ள மற்ற சமூகங்களின் நிலைக்கு நமது சமூகமும் வளர்ந்தாக வேண் டும். கல்வி, பொருளாதார துறைகளில் நாம் மிகவும் பின்தங்கி நிற்கின்றோம். இவற்றை நீக்குவதற்கு நாம் துரித நட வடிக்கைகளில் ஈடுபட்டாக வேண்டும்.

நமது மக்களின் நல்வாழ்வுக்காகவும், பொருளாதார உயர்வுக்காகவும், நாம் முன்னின்று, உரிய முறையில் செயற்திட் டங்களை அமைத்து, வெற்றிபெற முயற் சிப்பது எப்படி வகுப்புவாதம் ஆகும்? பின் தங்கிய ஒரு சமூகம், தனது முழு சக்திகளை யும் பிரயோகித்து உழைத்தால்மட்டுமே முன்னேற்றம் காண முடியும். அப்படி முயற் சிப்பதை யாரும், சந்தேகக் கண்கொண்டு பார்க்கவேண்டிய அவசியமில்லை.

அந்தந்த பிரதேசங்களிலுள்ள முஸ்லிம் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க இதுபோன்ற அமைப்பு பொருத்தமானதே!

**பெருந்தொகைப் பணம், பலரின் முயற்சி, அரசாங்க உதவிகள், வங்கிக்கடன், வெளி நாட்டு உதவிகள் என்றுபோகும்போது நிறை யப் பொறுப்புக்கள் ஏற்படுமே, இவற்றை எங் ஙனம் நிர்வகிக்கலாம்?**

தலைநகரில் ஒரு தலைமையகம் இருக்க வேண்டும். இதுவே, கொள்கை வகுப்பதை யும், செயற்திட்டங்களை மேற்பார்வையிடு வதையும், பணத்தைக் கையாளுவதை யும், செய்யவேண்டும். மற்றும் முஸ்லிங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பான்மையாக வாழுகின்ற இடங்களில் கிளைகள் இஸ்தாபிக்கப்படல் வேண்டும். இக்கிளைகள் அந்தந்தப் பிரதேசங்களில், முஸ்லிம்களின் தொழில் வளர்ச்சிக்கு, எந்தெந்த வகைகளில் உதவலாம், எனக் கண்டு பிடித்து செயற்படுத்த வேண்டும். இப்படி ஒரு சீரான பாணியில் நிர்வாகம் அமைக்கப்பட்டு விட்டால், சிக்கல்களே ஏற்படாது.

இங்கு, நிர்வாகத்தினை நல்ல முறையில் கொண்டு நடத்தக்கூடிய முஸ்லிம் பெருமக்களும், அறிஞர்களும் இருக்கின்றார்கள். அவர்களது உதவிகளைப்பெற்று, இதனைத்திறம்பட நிர்வகிக்கலாம்.

பணமும், செயற்திறனும், தகுந்த முறையிலும், போதிய அளவிலும் கிடைத்துவிட்டால், இந்த நிறுவனத்தினை வெற்றிகரமாக அமைத்துவிடலாம்.

**பல்துறைத்தொழில்களையும், தொகையான தொழிலாளர்களையும் கொண்டு இயக்கும் போது தோல்விகள் ஏற்படவும் இடமுண்டல்லவா?**

உண்மைதான்! ஆனால், முஸ்லிம் தொழில் நிறுவனம் நிகழ்காலப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு மட்டுமின்றி, எதிர்கால முஸ்லிம் சமூகத்தினைக் கட்டி எழுப்பவும் அமைக்கப்படுகிறது என்பதை அதனோடு சம்பந்தப்பட்டவர்கள் மனதிற்கொண்டு செயலாற்ற வேண்டும். அப்போதுதான் திட்டங்கள் வெற்றிபெற முடியும்.

விசுவாசமிக்க - பரந்த மனப்பான்மையுள்ள தொழிலாளர்கள் இணைந்து விட்டால், எப்படியான சிரமமான பணிகளையும் வெற்றிகரமாக செயற்படுத்த முடியும்.

தியாகத்தின் அடிப்படையில் வளர்ந்த வரலாற்று வாசிகள் நாம்! நமது சமூக நலனுக்காக நாம் தொடர்ந்தும் தியாகங்கள் புரிய முன்வர வேண்டும்.

''ஜாமிவு நழ்மியா''வின் அமைப்பும், அதன் வெற்றியும் எனக்கு மிகுந்த நம்பிக்கை ஊட்டுவதாக இருக்கின்றது. இலங்கை இஸ்லாமியர்களின் கல்வித்துறை வளர்ச்சியில், ஜாமிவு நழீமியாவின் பணி மகத்தானதாக அமையப்போகிறது, என நான் கருதுகின்றேன்.

இதே போன்ற ஒரு வெற்றியினை, முஸ்லிம் தொழில் நிறுவனங்கள் பெற்றுத்தர வேண்டும், என நான் விரும்புகிறேன். அப்படி ஒரு வெற்றியினை நிச்சயமாகப் பெறலாம், என்ற நம்பிக்கையும் எனக்குண்டு.

**இந்நிறுவனங்களை விவசாயத்துறையிலும் ஈடுபடுத்தலாமா?**

அரசாங்க அனுமதியுடன், தேவையான நிலங்களைப் பெற்று, விவசாயப் பண்ணைகளை அமைக்க வேண்டும். இதன் மூலம் விவசாயத்தில் ஈடுபாடுள்ள முஸ்லிம்கள் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிட்டுவதுடன், நாட்டின் உணவுத் தேவைக்கும் இதனால் நாம் உதவ முடியும்.

அத்துடன், அந்தந்தப் பிரதேசங்களில் இலகுவாக அமைக்கக்கூடிய தொழில்கள்பற்றியும் சிந்தித்து சாதகமானவற்றை செயற்படுத்தலாம்.

பெண்கள் தலைமை தாங்குகின்ற—அதாவது ஆண்களினுதவி இன்றியிருக்கின்ற குடும்பங்கள், விரும்பினால் வீட்டிலேயே செயலாற்றக்கூடிய விதத்தில், அவர்களுக்கும் தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

**இப்படி ஓர் அமைப்பை முஸ்லிம் மக்கள் வரவேற்பார்களா?**

இப்படி ஒரு அமைப்பின் மூலம் பெருந்தொகையான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளலாம், என்ற நிலை உருவாகின்றபோது சகல மக்களும் முழுமனதுடன் ஆதரவு தருவார்கள்.

இதுபற்றி நான் பலமுறை விளக்கி இருக்கிறேன். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இதனை விளக்கமாகப் பேசி வந்திருக்கிறேன். முஸ்லிம் மக்கள் மத்தியில், இதுபற்றி மேலும் எடுத்துக்கூற இருக்கிறேன்.

மற்ற சமூகங்களின் நிலைக்கு முஸ்லிம்களையும் எழுச்சிபெறச் செய்யும் விதத்தில் ஒவ்வொரு முஸ்லிம் மகனையும் சிந்திக்கத் தூண்டியாக வேண்டும். எல்லா முஸ்லிம் மக்களும் இத்தொழில் நிறுவனத்தில் பங்கு கொள்ளும் பொருட்டு, சந்தாக்கள் சேர்த்தல், இனாம்கள் பெறுதல், நட்புறவுரீதியான அன்பளிப்புகள், நன்கொடைகள் ஆகியவற்றையும் பெறக்கூடிய ஒழுங்குகளைச் செய்தல் பயன் தரும்.

தேசிய ஒருமைப்பாட்டுக்கு பங்கம் ஏற்படாத வகையில்—கட்சி அரசியலை மறந்து, எல்லா முஸ்லிம் மக்களின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொண்டாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதுகூட முஸ்லிம் கிராமங்களில் சீதன ஒழிப்பு, ஏழைச்சிறுர் கத்ஞ ஏழைக்கன்னியர் திருமணம்போன்ற நற் பணிகளில் நமது இளைஞர்கள் பலர், வெகு ஆர்வத்துடன் உழைத்து வருகின்றுர்கள். அவர்களது ஆர்வத்தை மேலும் ஆக்கபூர்வமான பணிகளில் ஒன்றுதிரட்ட இத் தொழில் நிறுவனங்கள் வழி வகுத்துக் கொடுக்கும்.

முஸ்லிம் பள்ளிவாசல்களில் இதுபற்றிய விளக்கங்களை நிகழ்த்துகின்றபோது, மக்கள் அதனை இலகுவாகப் புரிந்து கொள்வார்கள். முஸ்லிம் தொழில் நிறுவனங்களிஞல் ஏற்படப் போகின்ற நன்மைகளையும், வறுமை ஒழிப்பினையும் சிறந்த முறையில் எடுத்துக்கூறிஞல், முஸ்லிம் மக்கள் நிச்சயமாக ஆதரவு செலுத்துவார்கள்.

**வெளிநாட்டு உதவிகள் போன்றவை பெற்றுக் கொள்ளும்போது யாரும் சந்தேகப்படமாட்டார்களா?**

முஸ்லிம் தொழில் நிறுவனங்கள் அரசியல் கலப்பற்ற சுயேச்சையான வெறும் தொழில் நிறுவனமாகும். வறுமை ஒழிப்புக்காகவும், வேலை வாய்ப்புக்காகவும் ஏற்படுத்தக்கூடிய கூட்டு முயற்சியாகும். இதஞல் அரசியல் பிரச்சனைகள் ஏதும் ஏற்படவோ அரசினருக்கு தொந்தரவு ஏற்படவோ, மற்ற சமூகத்தினருக்கு சிரமங்கள் தரவோ இதில் வாய்ப்பே இல்லை.

இந்நிறுவனங்களிஞல் நாட்டின் தேசிய வளத்திற்கு நன்மை ஏற்படுமே ஒழிய வேறு தீமைகள் ஒன்றும் நிகழாது. எனவே, இதஞல் அரசாங்கத்திற்கு நன்மையே ஒழிய கஸ்டம் ஒன்றும் ஏற்படாது. எனவே, இதனை யாரும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கமாட்டார்கள்.

**நீங்கள் குறிப்பிடுவதைப் பார்க்கையில், இந் நிறுவனத்திற்கு பல லட்சக் கணக்கான ரூபாய்கள் தேவைப்படுமே, இது எப்பொழுது சாத்தியமாகும்?**

இலங்கையில் பல முஸ்லிம் தனவந்தர்கள் இருக்கிறுர்கள். முஸ்லிம் மக்களின் பால் மிகுந்த அன்பும்—இரக்க சிந்தையும் கொண்ட அவர்களை இனங்கண்டு, முஸ்லிம் தொழில் நிறுவனத்தின் நோக்கங்களைப்பற்றி விஸ்தாரமாக எடுத்துக்கூற வேண்டும். அவர்கள் அனைவரையும் ஒரு முகமாகச் சிந்திக்கச் செய்வதில் தான் இதன் பாதி வெற்றி தங்கி இருக்கின்றது. ஆரம்பத்தொழில் முயற்சிகளை வகுத்துக் கொண்டு, அதற்குத் தேவையான நிதி வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டும்.

இத்தொழில் நிறுவனம் வெற்றிகரமாகச் செயற்பட சிறந்த நிர்வாகிகளும் அவசியமாகும். நம் நாட்டிலுள்ள இஸ்லாமிய அறிஞர்கள், தொழில் நிபுணர்கள் ஆகியோரைக் கலந்து, தேவையான ஆலோசனைகளையும் மற்றும் உதவிகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

அரசாங்க அனுமதியையும் பெற்றுக் கொண்டபின் உடனடியாக நடவடிக்கைகளில் இறங்கிவிட முடியும்.

இன்றைய இஸ்லாமியர்களின் வாழ்வு நிலை உயரவும், பொருளாதார வசதிகள் பெருகவும், வறுமைகள் ஒழியவும், முஸ்லிம் தொழில் நிறுவனங்கள் பெரும் அருட்கொடையாக அமையும்.

இது தொடர்பாக என்ஞலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளவும், தேவையான உதவிகளை வழங்கவும் தயாராக இருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரார்த்தனை

எம்: எம். றபீக்
(புகுவருடம் — விவசாயம்)

''அல்லாஹு்ம்ம சல்லி அலா முகம்மது யாரப்பிசல்லி அலைஹிவசல்லம் ...டும் .. டும்...''

இரவு இரண்டு மணி. பாவா அவர்கள் சஹர் நேரத்தை அறிவிக்க றபானைத் தட்டிக்கொண்டு போகிருர். அந்த அமைதியான இரவில் பாவாலின் 'டும்.. டும்...' என்ற றபான் சத்தம் பலமாக் கேட்டது. அந்தச் சத்தத்தில் எல்லோரும் நித்திரை நீங்கி எழுந்தனர்.

ஓ... அதற்குள் 'சஹர்' நேரமாகி விட்டதா? பொருட்டுத் தூக்கம் கண்களில் வருமுன்னர்...? நீண்டு விடுகின்ற இரவுகளில் நிம்மதியற்றுப் பரவுகின்ற உணர்ச்சிகளின் வெம்மை.. இன்னும் எத்தனை நாளைக்கு இந்தக் கொடுமை...?

தான் படுத்திருந்த 'சீலம்பாயை' விட்டெழுந்தாள் பௌசியா. தலைமாட்டுக்கூடியிலிருந்த நெருப்புப் பெட்டியைத் தேடியெடுத்து கால்மாட்டிலிருந்த குப்பி விளக்கைக் கொழுத்தி விட்டாள். இருள் நிறைந்த அக்குடிசையில் ஒளி பரவியது.

தயாராக இருந்த உணவுவகைகளை எடுத்து உண்ணவாரம்பித்தாள் அவள். உண்ண முடிந்ததா அவளால்? அவள் முன்னிலிருந்தவைகள் எல்லாம் அவள் கையாலே தயாரித்த உருசியான உணவு வகைகள்தான். ஆனுல் அவைகள் அவள் தொண்டைக்குள் இறங்க மறுத்தன. அவள் நெஞ்சத்து வேதனைச்சுமைகள் அந்த உணவுகளை உட்செல்லவிடாமல் தடுக்கின்றனவோ? நீண்டதோர் பெருமூச்சு அவள் உள்ளத்திலிருந்து பிறிட்டெழுந்தது...

''மியாவ்.. மியாவ்...'' அப்போது அந்தக் கறுப்புப் பூனை விழித்துக்கொண்டது. ''பூஸ் பூஸ்'' என்று அதைக் கூப்பிட்டு அந்த உணவையெல்லாம் கொட்டினுள். உருசியான உணவல்லவா? சப்புக் கொட்டிச் சாப்பிட்டது அது.

மடக்... மடக்... என்று வயிறு நிறையத் தண்ணீரைக் குடித்தாள் பௌசியா. ''அல்ஹம்துலில்லாஹ்'' என்று சொல்லியவாறு முக்காட்டைச் சரிப்படுத்தினுள்.

அவளின் சிவந்த கரங்கள் இறையை நோக்கி நீண்டன. தூக்கமற்று, எரிச்சல் கொண்டிருந்த கண்களை அவள் இறுக மூடிக்கொண்டு மனதை ஒருமைப்படுத்துகையில் பிறிட்டெழுகின்ற வேதனைச் சுமை... இதயத்தைப் பாரம் கொண்டு அழுத்துவதுபோல .. சே ...... என்ன கொடுமை?... நித்தியப் பழக்கத்தில் உதடுகள் தாமே அசைந்து உச்சரிக்கின்றன. ''நவைத்து ஸவ்ம அதின் அன் அதாயி பர்ல றமழான் ஹிராதிஹிஸ்ஸனத்திலில்லாஹித்த ஆலா... இந்த வருஷத்து றமழான் மாதத்தின் பர்ளான நோன்பை அல்லாஹ்வுக்காகப் பிடிக்கின்றேன்'' என்று மூன்று முறை 'நிய்யத்து' வைத்துத் தன் கரங்களை முகத்தோடு தடவிக்கொண்டு நிமிர்ந்தாள். கறுப்புப் பூனை வயிறு முட்டச் சாப்பிட்டுவிட்டு அவளையே பார்த்துக் கொண்டிருந்தது.

அந்தச் சின்னஞ்சிறிய குடிசையின் படலையைச் சாத்திவிட்டு வெளியே வந்தாள் பௌசியா. தேய்பிறையின் மங்கிய ஒளி அந்த வட்டாரம் முழுவதும் வியாபித்திருந்தது. அந்தக் கடற்கரை மணலிலே கால்களை ஊன்றி மெதுவாக நடந்தாள் அவள். 'சில்' என வீசிய குளிர் காற்று அவள் பட்டுடலைத் தடவிச் சென்றது. பொங்கியெழும் அலைகளின் நீர்த்துளிகள் கூட அவள்

314527

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலை வருடின. ஆனால் எதுவும் அவளில் மாற்றத்தை உண்டாக்கவில்லை. நாட்டி வைத்த கல்லைப்போல் குமுறும் அலைகடலையே கண்ணுக்கெட்டிய தூரம் வரை நோக்கிக்கொண்டிருந்தாள்.

நிகழ்ந்துவிட்ட வேதனையின் தொடர்ச்சி இன்னும் எத்தனை நாளைக்கு ...? கடலின் தூரத்தில் தெரியும் கரும் பொட்டுக்கள் எல்லாம், தனது வாழ்வின் நம்பிக்கைச் சுடர் என்று நினைத்து ஏமாந்து... தனது நெஞ்சத்தின் வேதனைகளைத் தெரிந்துகொண்டுதான் இந்த அலைகள் இப்படிச் சீறுகின்றனவா ..?

அந்தச் சின்னஞ்சிறிய மீனவக் கிராமத்தின் கட்டழகுக் கன்னிதான் பௌசியா. கடற்காற்று அவள் உடலைக் கட்டுக்குலையாமல் கவர்ச்சியாக வைத்திருந்தது. தள்ளாத வயதுடைய அவளது பெற்றோர்கள் றஹீமுக்கு அவளை 'நிக்காஹீ' செய்து கொடுத்து ஒரு மாதத்தால் ஒருவர் பின் ஒருவராகக் கண்ணை மூடினர்.

பெற்றோர்களை இழந்த அவளுக்கு உற்ற துணையாக இருந்தான் றஹீம். அவனின் ஆறுதல் வார்த்தைகளாலும் அன்பின் அரவணைப்பாலும் பெற்றோர் மறைந்த துன்பத்தை மறந்து வாழ்ந்தாள் பௌசியா. தன கணவன் மேல் உயிரையே வைத்திருந்தாள் அவள். ஒவ்வொரு நாளும் அவனை அவள் 'மாயவலைக்கு' (இரவுநேர மீன் பிடிப்பிற்கு) அனுப்பிவிட்டு விடிந்ததும் விடியாததுமாக கடற்கரைக்கு ஓடி வந்து காத்து நிற்பாள். கொஞ்ச நேரம் றஹீம் வரப்பிந்தினால் போதும் அவள் படும்பாடு.. அப்பப்பா... றஹீமுக்கு முன்பாகக் கரையேறும் மீனவர்களிடம் ஓடிப்போய் ''அவர் வர்றாரா? ...'' என்று நாணத்துடன் அவள் கேட்பது அப்பகுதி மீனவர்களுக்குப் பழக்கப்பட்ட ஒரு செயலாகும்.

புனித நோன்பு வந்தபோது தன் மனைவி நோன்பு நோற்பதற்குத் தேவையான உணவுப் பொருட்களை வாங்கிக் கொடுத்தான் றஹீம். ஆனால் அவனுக்கு ஒரேயொரு குறை... தன்மனைவிக்கு சிவப்பு நிற 'ஸ்பாக்கிளின்' சேலையொன்றும் ஒரு நெத்லசும் வாங்கி அணிவித்து அழகு பார்க்க விரும்பினான். அதற்காக இரவு பகல் பாராமல் கடலுக்குச்சென்று மீன் பிடித்துப் பணம் சேர்க்க ஆரம்பித்தான்.

பௌசியா தன் கணவன் ஓய்வின்றி உழைப்பதைப் பார்த்து வருந்தினாள். எத்தனையோ முறை அவனிடம் மன்றாடினாள். ஆனால் அவளின் வார்த்தைகள் அவன் செவியில் விழுந்தால்தானே..

எப்படியோ... நாநூறு ரூபாய் சேர்த்து விட்டான். அவனது இலட்சியம் நிறைவேற இன்னும் கொஞ்சப்பணம்தான் பாக்கி எப்படியாவது இந்த நோன்புப் பெருநாளைக்கு எல்லாவற்றையும் வாங்கி விட அவன் மனம் பெரிதும் விரும்பியது.

விடிந்தால் நோன்பு இருபத்திநான்கு அன்றிரவு.. பெரும் புயலும் மழையும் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் தென்பட்டன. சிறிது நேரத்தில் 'பளிச்' என்ற மின்னலுடன் பெரும் மழை கொட்ட வாரம்பித்தது. காற்றின் வேகம் தாங்க முடியாமல் மரங்களெல்லாம் பேயாட்டம் ஆடின. சிறிது நேரத்தில் புயல் ஓய்ந்தது. ஆனால் மழை இடைவிடாது கொட்டிக் கொண்டேயிருந்தது.

அன்றிரவு மீன் பிடிக்கப் போவதில்லையென்று மீனவர்கள் முடிவு செய்தார்கள். ஆனால் சில இளைஞர்கள் ''புயல் ஓய்ந்து விட்டதுதானே... மழைதான் பெய்கிறது. அது பாதிக்காது'' என்று சொல்லி மீன் பிடிக்கப் புறப்பட்டனர். இதைக் கேள்விப்பட்ட றஹீமும் ஆயத்தமானான். பெருநாளைக்கு இன்னும் சில நாட்கள் தானே இருக்கின்றன... எனவே அவன் ஓரிரவைக் கூட உழைப்பின்றி வீணாக்க விரும்பவில்லை. பௌசியா தன் கணவனின் கால்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினாள். ஆனால் அவன் அவளை சாதுரியமாகச் சாந்தப்படுத்திவிட்டுப் புறப்பட்டு விட்டான். மூன்று வள்ளங்கள் அன்றிரவு கொட்டும் மழையில் பயணத்தை ஆரம்பித்தன.

அவர்கள் போய் சிறிது நேரத்தில் மீண்டும் புயல் வீச ஆரம்பித்தது. '' ஐயோ ! ஆண்டவனே ! என் கணவனை என்னிடம் சேர்த்துவிடு'' என்று இறைவனிடம் மன்றாடினாள் பௌசியா. அன்றிரவு அவள் தூங்கவேயில்லை.

......பொழுது புலர்ந்தது, அன்றிரவு வீசிய புயலுக்கும்பின் கடல் நிம்மதியாகக் காணப்பட்டது. வழமைபோல் கடற்கரைக்கு ஓடினாள் பௌசியா. ஆனால் வள்ளங்கள் மூன்றும் திரும்பவேயில்லை. மூன்று வள்ளங்களும் திரும்பாதது கண்டு ஊரே அல்லோல கல்லோலப்பட்டது. பௌசியா... அழுதாள்... புரண்டாள்... ஆனால் போன அவள் கணவன் திரும்பவேயில்லை....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றஹீம் தன்னுடன் இல்லை என்பதை நினைக்கின்றபோது உலகமே அவளுக்கு சூனியமாகப்பட்டது. உலகமே இருள் மயமாகி அந்த இருள் முழுவதும் தன் மீது கவிழ்ந்து மூடி அமிழ்த்துவது போல உணர்ந்தாள் அவள். ஒவ்வொரு சாமப் பொழுதும் அட்சரலட்சம் வருடக்கணக் கில் நீண்டுவிடுவது போல... ஓ... எவ் வளவு கொடிய வேதனை இது ? ...

றஹீம் சென்று இரண்டு நாட்களாகி விட்டன. பௌசியா ஒவ்வொரு நாளும் கடற்கரைக்குச் சென்று காத்து நிற்கிறாள், நோன்பு பிடித்துக் கொண்டு இறைவனிடம் இறைஞ்சுகிறாள்.

'லைலத்துல் கத்ர்' இரவு. இரவுகளி லெல்லாம் மகத்தான புனிதமான இரவு. இப்புனித இரவில் ஆண்டவன் தன் அடி யார்கள் கேட்பதையெல்லாம் கொடுப் பதாக அறிவித்திருக்கிறான். பௌசியா அந்த இரவில் மன்றாடுவது என்று முடிவு செய்துகொண்டாள்.

அவள் எதிர்பார்த்த அந்த இரவும் வரத்தான் செய்தது. பௌசியா அன்று இரவு தூங்கவேயில்லை. அன்றிரவு முழு வதும் ஆண்டவனைத் தியானித்தபடியே இருந்தாள். ''இறைவா... என் கணவனை என்னிடம் சேர்த்துவிடு: இந்த ஏழை யின் வாழ்வைப் பாழாக்கி விடாதே. ஆண்டவனே ! இந்த உலகில் எனக்கிருக் கும் ஒரே பற்றையும் நீக்கி விடாதே' பௌசியாவின் குரல் ஈனஸ்வரத்தில் ஒலிக்க உருகிக் கரைந்தாள்.

றஹீம் சென்று ஐந்து நாட்களாகி விட்டன... நாட்கள் ஒவ்வொன்றாக ஓடிக் கொண்டிருக்கின்றன. றஹீமைக் காணா மல் இன்றுடன் ஐந்து நாள் எவ்வளவு நீண்ட இடைவெளி? தன்கணவனைப் பிரிந்து ஐந்து நாட்களாகிவிட்டன என்ற நினைவே பெரியதொரு வேதனையாகப் பட்டது.

விடிந்தால் பெருநாள் !

''படார்... படார்' — இது என்ன சத்தம்? பௌசியாவின் இதயம் வெடித்து விட்டதா ? இல்லவே இல்லை பெருநாளைக் கொண்டாடும் சிறுவர்கள் கொழுத்தி எறியும் பட்டாசுகளின் ஓசை அது. பௌசியா... தன் கணவன் வருவானென்ற நம்பிக்கையை இழந்து விட்டாள். அந்த அழகிய பூங்கொடி வாடிக் கருகிவிட்டது. நடைப்பிணமானாள் பௌசியா.

விடிந்துவிட்டது. எங்கும் மகிழ்ச்சி யின் ஆரவாரம்: 'ஈதுல் பித்ர்' திருநா ளல்லவா ? புத்தாடை பூண்டு புளகாங் கிதம் கொண்டனர். பெரியோரும் சிறி யோரும் ''அல்லாஹு அக்பர்... அல் லாஹு அக்பர்..' என்ற புனித வாக்கு பள்ளிகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

பௌசியா... தன் குடிசையை விட்டு வெளியே வந்தாள். கடற்கரையை நோக் கித் தள்ளாடித் தள்ளாடி நடந்தாள். ''இன்றாவது தன் கணவன் வரமாட் டானா?... தன் வாழ்வு மலராதா...! எல்லோரையும் போல நானும் பெரு நாள் கொண்டாட மாட்டேனா? என்ற நப்பாசை அவளுக்கு.

கடற்கரையை அடைந்த அவளால் நிற்கக்கூட முடியவில்லை. அவள் கால்கள் நிற்கும் சக்தியைக்கூடவா இழந்து விட் டன? தரையில் அமர்ந்து விட்டாள். அவள் தன் பார்வையைக் கடலில் ஓட விட்டாள். காலையிளங் கதிரவனின் பொன் னிறக் கதிர்கள் பட்டு, விரிந்த கடலின் பரப்பு பளபளத்துக்கொண்டிருந்தது.

அதோ ... தூரத்தில் தெரிவதென்ன? மூன்று கருப்புப் புள்ளிகள் தெரிகின்ற னவே! கண்களைக் கசக்கிக்கொண்டு உற்று நோக்கினாள் பௌசியா. வரவர அப் புள்ளிகள் பெரிதாகி வள்ளங்களாகிக் காட்சியளித்தன. பௌசியா திடீரென எழுந்தாள்...? அவள் உடல் ஆடியது.

வள்ளங்கள் கரையை வந்தடைந்து விட்டன. உற்று நோக்கினாள் பௌசியா. அவர்களே தான் ! அன்றிரவு சென்ற அதே வாலிபர்கள்தான். ஓ பௌசியா வின் பிரார்த்தனை பலித்துவிட்டது. ''மச்சான்...' என்று கத்திக்கொண்டு ஓடினாள் பௌசியா. ''பௌசியா...'' என்று கத்திக்கொண்டு ஓடி வந்தான் றஹீம். புயல்போல அணைத்துக்கொண் டாள் அவனை. அவள் கண்களிலிருந்து அணைகடந்த வெள்ளம் போலக் கண்ணீர் பெருகியது. ஆனந்தக்கண்ணீர் அல்லவா அது...?

அல்லாஹ் அவளைக் கைவிடவில்லை. ''லைலத்துப் கத்ர்'' இரவில் தன் அடி யார்கள் கேட்பதைக் கொடுப்பேன்'' என்ற இறைவனின் வார்த்தைகள் உண் மையாகிவிட்டன. ஆண்டவா... உனக்கு நிகர் நீயேதான் என்று புகழ்ந்தாள் பௌசியா.

'அல்லாஹு அக்பர்' 'அல்லாஹு அக்பர்' என்ற புனித வாக்கு பள்ளியில் ஒலித்துக்கொண்டிருந்தது. அந்தப் புனித ஒலியில் றஹீமும், பௌசியாவும் பங்கு பற்றிக்கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிங்கள் கல்வியில் பின் தங்குவது ஏன்?......

எம். ஏ. லத்தீப்
(எகுவருடம்—விவசாயம்)

''எந்தவொரு சமூகமும் தன்னைத் தானே மாற்றியமைத்துக் கொள்ளாத வரை நாம் அதனை மாற்றி அமைக்கப் போவதில்லை'' இது இறைவாக்கு. எச்சமூகமாயினும் சரியே, அது தன்னைத்தானே மாற்றியமைத்துக் கொள்ளும் முயற்சியை மேற் கொள்ளாதவரை அச்சமூகம் மாற்ற மொன்றினைக் காணப்போவதில்லை. அப்படியாயின் மாற்றத்தை ஏற்படுத்துவது எது என்பது பற்றி சிறிது சிந்தித்து பார்ப்போம்.

ஒரு சமூதாயத்தின் அடிப்படை மாற்றத்தினை ஏற்படுத்திக் கொடுக்கக் கூடிய ஒரேயொரு மார்க்கம் உண்டெனில் அது கல்வியை தன்னால் முடிந்தளவு பெற்றுக் கொண்டு அக்கல்விவழங்கும் அறிவுரையைத் தன்வாழ்கையில் கடைப்பிடிப்பதேயாகும். நாயகம் அவர்கள் உம்மிநபியாக உலகத்தாருக்கு அனுப்பப்பட்டார்கள். அதே நபியவர்கள் ஏக இறைவனால் ஞானம் பெறும் வேளை ''ஓதுவீராக'' என்ற இறைவாசகத்தால் பணிக்கப்பட்டார்கள் என்றால் அதனில் அடங்கியிருக்கும் உண்மைப் பொருள் என்ன என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க தவறக் கூடாது. அதனை அறிந்தே எம்பெருமானார் அவர்களும் ''சீனு சென்றாயினும் சீர் கல்வி தேடு'' என இயம்பினார்கள். சீனு மக்காவிலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் அமைந்த நாடு. அந்நாட்டிற்கு சென்றாயினும் கல்வியைப் பெற்றுக் கொள் என எம்பெருமானார் எடுத்துக் கூறியுள்ளார்களென்றால், அதன் ஆழம் அளவிட முடியாத ஒன்றாக அமைந்திருக்கின்றதென்பதும் கண்கூடு.

இன்றைய இலங்கைச் சமுதாயத்தை எடுத்து நோக்கும் பொழுது அது தன் அமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டுவருவதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. சுதந்திரம் பெற்றது முதல் இற்றைவரை அதனது மாற்றத்தை கவனித்து பார்க்கையில் சகல துறைகளிலும், சகல முனைகளிலும் ஒரு துரித மாற்றத்தையும் குறிப்பாக கல்வி அமைப்பில் புரட்சிகர மாற்றத்தையும் அண்மைக் காலத்தில் பெற்று வருகின்றது. இவ்வாறான மாற்றம் ஏற்படக் காரணம் என்ன? இவை ஏன் ஏற்பட வேண்டும் என்பது பற்றி எம் முஸ்லிம் சமுதாயம் சற்றேனும் சிந்திக்க வேண்டும்.

இன்றைய கல்வித்திட்டத்தை சற்று நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். அது முற்றாக முன்னைய கல்வித்திட்டத்திலும் வேறுபட்ட தொன்றாகும். வெறும் ஏட்டுமுறையை மாற்றி செயன் முறைக்கு முதன்மை கொடுத்து அறிமுகம் செய்யப்பட்டிருக்கும் கல்விமுறை இதன் முடிபான விளைவை அடுத்து வரும் இரண்டு மூன்று வருடங்களில் எமது இலங்கை சமுதாயம் கண்டுகொள்ளத்தான் போகின்றது. அப்படியாயின் அந்த நல்ல முடிபைத் தாங்கி வரப்போகின்ற நல்ல நாளில் எமது சமுதாயத் தோழர்கள் கடை நிலையில் நின்று தவிக்கக் கூடாது.

அன்று முதல் இன்றுவரை எம் முஸ்லிம் சமுதாயம் கல்வியை கசப்பு மனப்பான்மையுடன் நோக்கி வந்திருக்கின்றது. அதில் எதுவித அக்கறையும் காட்டிவந்ததாகத் தெரியவில்லை. எமது நிலபுலங்களும் தமது மூதாதையினரால் நடாத்

தப்பட்டு வந்த வியாபாரமும் தொடர்ந்து கைகொடுத்துதவும் என்று வீண் மனப்பால் குடித்துவந்து கொண்டிருந்தது. அதன் விளைவு அவர்களை யறியாமலே சமுதாயத்தில் மூன்றும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள். இனிமேலும் அந்த வியாபாரமும் தலைமுறை தலைமுறையாகக் கொண்டு வரப்பட்ட சொத்துக்களும் கை கொடுக்கப் போவதில்லை யென்பதை மனதில் கொண்டு செயலாற்ற வேண்டும். கல்வி கற்பவனாக இருத்தல் வேண்டும். அல்லது கற்பவனை ஊக்குவிப்பவனாக இருத்தல் வேண்டும் அதை விடுத்து கற்றலைப் பார்த்து ஏங்கிக்கொண்டு இருப்போராக இருத்தல் கூடாது.

இன்றைய சமுதாயத்தில் முன்னைய நிலைமையைவிட முன்னேற்றம் சொற்ப அளவு காணப்படுகின்றது. என்பது உண்மையாயிருந்த போதிலும் அதை மற்றைய சமூகங்களோடு ஒப்பிடும் போது குறைந்ததுதான் என்பது யாவரும் அறிந்த உண்மை. எனவே கடந்த காலம் கடந்துவிட்டது. இனிவரப் போகும் இளஞ் சந்ததியினரின் நலன் கருதியும், பிறரால் இழிகண் கொண்டு நோக்காதிருப்பதற்காகவும் முஸ்லிம் பெற்றோரும், முஸ்லீம் இளைஞர்களும், முஸ்லீம் பிரமுகர்களும் கல்வி விடயத்தில் முழுமூச்சுடன் உழைக்கவேண்டும். பெற்றோர்கள் கடமை என்ன? தம் சிறுர்களை ஒழுங்காக பாடசாலைக்கு ஏக வைப்பதே. ஆசிரியர்கள் கடமை யென்ன? தம் நலன் கருதாது, சமுதாய நலன் புரட்சிகர சமுதாய மாற்றம் போன்றவற்றை மனதில் கொண்டு கல்வி புகட்டுதல் வேண்டும். மாணவர் பங்கு என்ன? என நோக்கில் அது பொறுப்பு வாய்ந்த ஒன்றாகும். அவர்கள் தம் கல்வியை நடைமுறையில் கொண்டு வரல் வேண்டும். அப்படி அவர்கள் நாளாந்தம் கைகொண்டுவர வேண்டுமென்பதை கருத்தில் கொண்டே இந்த கல்வித்திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. தொழிலைத் தேடி மாணவன் செல்ல வேண்டியதில்லை. தொழில் அவர்கள் கையிலிருக்கின்றது. அதைக் கைக் கொள்ளும் திறன் அவர்களிடம் அமையவேண்டும்.

ஒரு கை ஓசையை எழுப்பப் போவதில்லை. இரண்டு கையும் சேரும் பொழுது தான் ஒலி உண்டாகும் எனவே முஸ்லீம்களின் கல்வி நிலையை நோக்கும் பொழுது முஸ்லீம் சிறுர்களுக்கு அளிக்கப்படும் கல்வி ஒருகை ஆயின் அதனுடன் ஓசை எழுப்பி உதவி செய்ய வேண்டிய கை பெற்றோர் ஆகும். பெற்றோர் எக்காரணம் கொண்டும் சிரத்தையின்றி இருத்தலாகது. அவர்களின் இலட்சியம் தமது சிறுரை பிறசிறுர்களினுல் நாளைய பிரசையினுல் ஒதுக்கித் தள்ளி வைத்து நோக்க வேண்டாதிருக்க வேண்டுமாயின் கல்வியை ஒழுங்காகப் புகட்ட வேண்டும். புகட்டப்படும் கல்வியை தம் வாழ்க்கையில் கைக்கொள்ள தூண்ட வேண்டும். கல்வியே வாழ்க்கையின் முதுகெலும்பு. அதை விடுத்து என்னுல் விட்டுச் செல்லும் சொத்து, பரம்பரை கௌரவம் போன்றவை அல்ல என்பதை மனதில் கொண்டு ஒவ்வொரு பெற்றோரும் செயலாற்ற வேண்டும். அப்பொழுதுதான் சமுதாய மறுமலர்ச்சி உண்டாகும்; அப்பொழுதுதான் சமூகமாற்றம் ஏற்படும்; அவ்வேளையே பிறர் தயவில் தம் தேவையைப் பூர்த்தி செய்யும் நிலையைச் மாற்றிக்கொள்ள முடியும் என்பதை யாரும் ஏற்றுக் கொள்வர் என்பது என்முடிபு.

---

**திருக்குர் ஆனைப் பற்றி..........................**

"இஸ்லாம் உலகத்தையே ஆக்கிரமித்துக் கொண்டது. குர்—ஆனை நான் பக்திப் பரவசத்துடன் படிக்கும் போது உள்ளத்திலே ஒருவித காந்த உணர்ச்சி உண்டாவதை அனுபவத்திலே காண்கிறேன். எனது இந்து சகோதரர்கள் பரிசுத்த உள்ளத்துடன் குர்—ஆனைப் படிக்கப் புகுந்தால், இஸ்லாமிய தத்துவத்தின் இணையற்ற தன்மையும், உண்மை உபதேசமும், வெளியாவதை உணர்வார்கள்.

— மகாத்மா காந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனக் கட்டுரை

# நூற்கால ஈழத்துக் கவிதை வளர்ச்சியும் முஸ்லிம் கவிஞர்களும்

செ. யோகராசா பி. ஏ. (சிறப்பு)

ஈழத்துத் தமிழிலக்கியத்தின் ஏனைய இலக்கியத் துறைகள் போன்றே கவிதைத் துறையை எடுத்துக் கொண்டாலும் முஸ்லீம் கவிஞர்களது பங்களிப்பை முஸ்லீம் அல்லாத தமிழர் விரித்துரைக்காத ஒரு காலமிருந்தது. குறுகிய காழ்ப்பு மனப் பான்மை தவிர, முஸ்லீம் கவிஞர்பற்றி விரிவாக அறிந்திராமை, அரபுச் சொற்கள், முஸ்லீம்களது பேச்சு வழக்குச் சொற்கள் என்பவை அதிகமிடம்பெற்ற காரணத்தால் அலட்சியம் செய்தல் என்பனவும் இதற்குக் காரணங்களாகலாம். எவ்வாறாயினும் அண்மைக் காலங்களின் சமூக அரசியல் மாற்றங்களும், தேசியம், தேசிய ஒற்றுமை பற்றிய கருத்துக்களின் வளர்ச்சியும், அவசியமும், ஏற்படுத்திய சூழலும் இவற்றினூடாகப் புதியதொரு தலைமுறையின் வளர்ச்சியும் இத்தகைய போக்கில் மாற்றத்தை ஏற்படுத்திற்று. இதற்கு கடந்த வருடம் 'யாழ்பிறை'யில் இடம் பெற்றுள்ள 'முஸ்லீம் தமிழ் இலக்கியம் இன்றி தேசிய தமிழ் இலக்கியம் பூரணத்துவம் அடையாது' என்ற (எம். சிறீபதி) கட்டுரை சிறந்தவொரு எடுத்துக் காட்டாகும்.

இது ஒருபுறமிருக்க, ஈழத்துத் தமிழ்க் கவிதைத் துறையினைப் பொறுத்த வரையில் சுதந்திர காலத்துக்குப் பிற்பட்ட கவிதை வளர்ச்சியில் மூஸ்லீம் கவிஞர் பலரது பங்களிப்புமுண்டு. சுதந்திரத்திற்குப் பின்பு ஏற்பட்ட மாற்றங்களும், பாரதி, பாரதிதாசன் கவிதைகளின் தாக்கத்தின் தொடர்ச்சியும், "சுதந்திரன்" முதலிய பத்திரிகைகளின் தோற்றமும், கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில், நீலாவணன், மஹாகவி முதலிய கவிஞர்களது இலக்கியப் பாதிப்பும் 1956—60க்கு இடைப்பட்ட காலத்தில் பல முஸ்லீம் கவிஞர்களை உருவாக்கிற்று. இவர்களுள் அப்துல் காதர் லெப்பை, அண்ணல், புரட்சிக் கமால், யுவன், சுபைர் முதலியோர் குறிப்பிடத்தக்கோராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் காதர் லெப்பை (அதான்)யின் கவிதைகளுட் சில சமுதாயச் சீர்திருத்தம் பற்றியவையாளுலும் அடிப்படையில் மரபு வழிப்பட்ட, சமயச் சார்புடையனவே அதிகம். செய்னம்பு நாச்சியார் மான்மியம், இரசூல் சதகம்—முறையீடும் தோற்றமும், என்பன இதற்கு எடுத்துக்காட்டு. இக்பாலினல் கவரப்பட்ட இவரிடம் (இக்பாலின் இதயம்) இக்பாலின் கவிதைத் தாக்கமும் காணப்படுவது இயல்பே. கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை தொடக்கம் (ஈழத்தில்) ''ஜெயபாலன்'' வரையில் உமர்கய்யாமின் 'ரூபாய்த்'திற்கு அடிமைப்படாதோர் குறைவு; இதற்கு அப்துல் காதர் லெப்பையும் விதிவிலக்கன்று என்பதுபோல் மொழிபெயர்ப்பு நூலான 'ரூபாயத்' விளங்குகிறது.

அழகியற் சார்புடைய — குறிப்பாக காதல் கவிதைகள் எழுதுவதில் கைதேர்ந்தவர் 'அண்ணல்'(எம். எஸ். எம். ஸாலிஹ்) நளினமான, மென்மையான, இழைவான எளிமையான சொற்களில் கொந்தளிக்கும் காதலுணர்ச்சிகளை வெளிப்படுத்திக் கவிதை இயற்றுவதில் வல்லவரான நீலாவணனது கவிதைகட்கு இவரது கவிதைகளும் ஈடுகொடுத்து நிற்கக் கூடியன. கட்டுப்பாடுமிக்க வெண்பாவினை தம் கைப்பிடிக்குள் வைத்திருக்கும் நீலாவணன், மஹாகவி, 'கவீ' முதலியோரது அபார ஆற்றலும் அண்ணலிடம் காணப்படுகிறது. 'இனிமைக் கன'வில் இடம்பெறும் ஒரு கவிதை பின்வருமாறு:

'உத்தரவு போட்டேன் உதடும் அடங்
(கிற்று
பத்தரையாம் மாற்றுப் பசும்பொன்
(னின்—முத்துநகை
தன்னுள் எழுந்து தடுமாறிக் கைகளுக்
(குள்
மின்னி மறைந்த விதம்:

பிற்காலத்தில் பக்திக் கவிதைகளும், தத்துவக் கவிதைகளும் எழுதுவதில் அண்ணல் ஈடுபாடு காட்டினர்.

அண்ணலோடு கவிதை உலகில் நுழைந்த புரட்சிக் கமாலின் கவிதைகள் அண்ணலின் மென்மைக்கு முற்றிலும் மாருக வன்மை கொண்டவை. குறிப்பாக முஸ்லீம் சமுதாயச் சீர்திருத்தம் வேண்டிப் புரட்சிகரமான சிந்தனைகள் கொண்டவை. இஸ்லாம் வற்புறுத்தும் நம்பிக்கை, சமத்துவம், சகோதரத்துவம், தியாகம் முதலிய இலட்சியங்களை பிரச்சாரமாக்காமல் எல்லா மக்களுக்கும் பொதுமையாக்குவது இவரது சிறப்பாகும்.

' வாழ்வில்
எல்லார்க்கும் எல்லாமெனக்
கொட்டு முரசே'
' அணுக் குண்டு தனியுடைமை
பிணக்காடு செய்பகைமை
துணுக்குற்று நீறுமெனக்
கொட்டு முரசே'

'உழைப்பாரை வஞ்சித்து உயர்தாழ்வு
தாங்கிடும்
உலுத்தர்க்குப் பல்லாண்டு கீதமில்லை'
'பாழரங்கில் மூச்செறிந்து வெம்பிச்
சாகும்
பாவையர்க்குப் புத்துலகம் ஒன்று
காட்டு'

என்றெல்லாம் கவிஞர் பாடும்போது கவிஞரது மனிதாபிமானம், சமுதாயப்பற்று, பொதுமை வாழ்வு என்பன வெளிப்படுகின்றன. புரட்சிகரமான கருத்துக்களைக் கொண்ட கவிதைகள் வீறுமிக்க நடையையும், செறிவையும், பேச்சோசைப் பண்பையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கவியரங்கக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர் 'யுவன்' (எம். ஏ. கபூர்) இவரது கவிதைகளும் ஓரளவு புரட்சிக் கமாலின் கவிதைகள் போன்று சமுதாயச் சீர்திருத்தத்தைப் பொருளாகக் கொண்டவை. ஆற்றல்மிக்க இவ்விரு கவிஞர்களும் இன்று கவிதையுலகிலிருந்து ஒதுங்கியுள்ளனர்.

ஈழத்தில் குழந்தை இலக்கிய முயற்சிக்கு ஏறத்தாழ 40 வருடங்கட்கு முன்பே வித்திடப்பட்டது. (வித்தியாதரிசியாக விருந்த கே. எஸ். அருணந்தி அவர்களது முயற்சியால் 1935—ல் முதற் 'பிள்ளைப் பாட்டு' தொகுதி வெளியிடப்பட்டது). ஆயினும் இன்றும் வளர்ச்சி ஆரம்ப நிலையிலேயே காணப்படுகிறது. இவ்விதத்தில் சுபைரின் குழந்தைப் பாடல்களும், 'மல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரும் மணமும்' என்ற தொகுதியும் விதந்துரைக்கத்தக்கன.

1960—70க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க பல கவிஞர்களின் வளர்ச்சியை அவதானிக்க முடிகின்றது. எ. ஏ. நுஃமான், ஏ. இக்பால், பஸீல் காரியப்பர், எம். எச். எம். சம்ஸ், மருதூர்க்கனி, மருதூர்க்கொத்தன், அன்பு முகைதீன், பண்ணாமத்துக் கவிராயர், சாரணாகையூம், திக்குவல்லை கமால், என நீண்டவொரு பட்டியலைக் காட்டமுடியும். இவர்களுடனேயே மறுமலர்ச்சிக் குழுவினர் எழுகின்றனர் என்று கூறுவது பொருந்தும் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் கல்முனை எழுத்தாளர் சங்கம் முதலிய இலக்கியச் சங்கங்கள், நீலாவணன் முதலிய கவிஞர்களின் உந்தல்கள், முஸ்லீம் கல்லூரிகளின் இலக்கிய முயற்சிகள் (உ—ம்: அளுத்கம முஸ்லீம் மகாவித்தியாலயம்), 'கவிஞன்' முதலிய ஏடுகள், 'இன்ஸான்' முதலிய பத்திரிகைகள், வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளின் முஸ்லீம் பக்கங்கள் முதலியன ஒரு புறமும், சுயமொழிக் கல்வியின் வளர்ச்சி, முற்போக்கு இயக்கங்களின் தாக்கம் என்பன இன்னொரு புறமும் கவிதையுலகினைப் பொறுத்தவரையில் ஒரு மறுமலர்ச்சிக்குரிய சூழலை உருவாக்கின எனலாம்.

நீலாவணன், மஹாகவி முதலிய கவிதா ஆற்றல்களின் சங்கமமாகி, பின்பு முதிர்ச்சியுற்று, தனித்துவமான தன்மைகளுடனும், முற்போக்குக் கருத்துக்களுடனும் அறுவடையாகும் சிறப்பினை எமது எம். ஏ. நுஃமானின் கவிதைகள் கொண்டுள்ளன. இன்றைய நவீன ஈழத் தமிழ்க் கவிதை வளர்ச்சியினை இனங்கண்டு கொள்வதற்கு நுஃமானின் கவிதைகள் துணைநிற்கின்றன என்று கூறுவது தவறன்று இதனைச் சற்று விளக்குவது அவசியம்.

நுஃமானின் கவிதைகள் பொதுவாக நான்கு குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன. (அ) பேச்சு மொழித் தன்மை: சிறிய சிறிய வாக்கிய அமைப்புக்களும், கருத்துத் தொடர்ச்சியும், இயல்பான சொற்சேர்க்கைகளும் இத்தன்மையை அளிக்கின்றன. வார்த்தை ஜாலங்களும், அலங்காரங்களுமில்லை நவீன கவிதைக்குரிய சிறப்பம்சமாகும், ஈழத்துக் கவிதைகளின் தனித்துவப் பண்பும் இதுவாகும். (ஆ) ஒத்திசைவு: (Rhythm): சொற்களின் அளவான சேர்க்கையாலும் ஆற்றொழுக்கான பொருட் போக்காலும் ஏற்படுவது; இத்தகைய ஒத்திசைவு மூலம் கவிதையில் ஓசைநயத்தை ஏற்படுத்துவோர் அரிது. தமிழகக் கவிஞர் பலரும் இசையோடு படிப்பதையே ஓசை நயம் என்று கருதுகின்றனர்; அத்தகைய ஓசைக்காக கருத்துக்களை விட்டுக்கொடுக்கின்றனர்; சொற்களை இட்டு நிரப்புகின்றனர்; (இ) புதிய நோக்கு: சமூகக் குறைபாடுகள், குமுறல்கள், தேசிய உணர்வலைகள் என்பன புதிய பாணியில் வெளிப்படல். குழுமிநின்றும், நாடக மேடையில் நின்றும் பாத்திரங்கள் உரையாடுவது போன்ற உணர்ச்சியையும், தானும் அவர்களுள் ஒருவனாக ஆகிவிடும் உணர்வினையும் படிப்போன் பெறுதல். இவற்றுக்கு, 'நாங்கள் கோபமுற்றெழும்போது......' தாத்தாவும், பேரர்களும், குறிப்பாக மிக அண்மைக்காலக் கவியரங்கக் கவிதைகள் என்பனவற்றை எடுத்துக் காட்டலாம். கவிதை வரலாறு, இலக்கிய வரலாறு, மொழி வரலாறு என்பன பற்றிய தெளிவு நிலை நுஃமானின் மேற்குறிப்பிட்ட கவிதைச் சிறப்பியல் புகட்குக் காரணமெனலாம். மஹாகவி, முருகையன், சண்முகம் சிவலிங்கம் ஆகியோரது கவிதைகளும் இச் சிறப்பியல்புகளை உள்ளடக்கியுள்ளன.

அழகியல், சமயம், சீர்திருத்தம், தேசியம், தத்துவம் முதலிய எல்லாத் துறைகளிலும் தொடர்ந்து எழுதி வருபவர்களுள் ஏ. இக்பாலும் குறிப்பிடத்தக்கவர். ஆயினும் குறிப்பிடத்தக்கதான இவரது கவிதைகளும் குறைவே. 'மௌலானாவின் சிந்தனைகள்' என்ற தழுவல் நூலை வெளியிட்டுள்ளார். 'மறக்காத பொருள்' என்ற இவரது கவிதை தென் இந்திய வாசகர் வட்டம்' வெளியிட்டுள்ள அக்கரை இலக்கியம்' என்ற தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. உணர்ச்சியை விட அறிவுப் பண்பினையே இவரது கவிதைகள் அடிநிலையாகக் கொண்டுள்ளன.

இப்போது ஓரளவு ஒதுங்கிக்கொண்டாலும், செறிவானவையாகவும், சிறு சிறு வடிவத்திலும் தத்துவச் சாயலுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதை படைத்து வந்துள்ளார் பஸீல் காரியப்பர். அனுயாசமாக இனிமையான குரலில் பாடுகின்ற, அரசவைப் புலவரை நினைவூட்டுகின்ற, கவியரங்கக் கவிஞர்களுள் இவருமொருவராவர்.

எம். எச். எம். ஷம்ஸின் (நீள்கரை வெய்யோன்) கவிதைகள் பாலர்பாடல், அழகியல், சமயம், சமுதாயம், வர்க்க பேதம் என்ற பரிணும வளர்ச்சியைப் பெற்று வந்துள்ளன. முற்போக்குச் சஞ்சிகையான இன்ஸானில் (வல்லையூர்ச் செல்வன், இடித்திருக்கி என்ற புனைபெயர்களில்) சமுதாய மாற்றம் வேண்டும் பல கவிதைகளை எழுதியுள்ளார். 'அல்ஹஸனத்' என்ற சஞ்சிகையில் (அஷ்ஷம்ஸ்' என்ற புனைப்பெயரில்) எழுதிய வெம்பாக்கள் பலரது பாராட்டுக்களையும் பெற்றது திறமையாக வெண்பா எழுதும் ஆற்றலுமுண்டு. அண்மைக் காலப் புதுக் கவிதைத் துறையிலும் தனக்கென ஓரிடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதே இவரது 'ஊமைக் குயில்' சிறந்தவொரு படைப்பாகும். 'ஊமைக்குயி'லின் ஒரு பகுதி பின்வருமாறு:

'' வெயிலிற் காய்ந்த
மரக்கறியுடன்
அவள் மென்விரல் கூட
காய்ந்து கிடந்தன
கண்களிற்
கவரும் காந்தம் இல்லை
கவலைக் கள்வன்
குடி புகுந்திருந்தான்
வயிறும்
இடையும்
வற்றிக் கிடந்தன
அழகின் பரிசா?
வறுமையின் கொடையா?
சட்டைக் கிடையில்
மார்புக் கனிகள்
இலையாய் நீண்டு
தலை குனிந்திருந்தன
முட்டிய வறுமையின்
முத்திரையாகி
ஒட்டிய கன்னச்
சுருக்கம் தெரிந்தது ''

இத்தகைய ஊமைககுயில்கள், தென்னிந்திய புதுக் கவிதையாளர் கையில் 'சினிமாக் குயில்' களாக மாறிவிடுவதை அவதானிக்க முடிகிறது. ஷம்ஸின் 'ஊமைக் குயி'லோடு, தமிழன்பனின் 'கடப்பைக் காந்தம்மா' வை ஒப்பிடும்போது ஈழதென்னிந்திய புதுக்கவிதையின் சில போக்குகளை இனங்காணக் கூடியதாயிருக்கும்.

ஆரம்ப காலத்தில் அழகியற் கவிஞர்களாக விளங்கி, பின்னர் 'முதிர்ச்சி' பெற்ற கவிஞர் வரிசையில் மேலும் மூவர் குறிப்பிடத்தக்கவர்கள். ஒருவர் மருதூர்க் கனி; இப்போதைய கவிதைகளும், புதுக் கவிதைகளும் வர்க்க முரண்பாடு, சமுதாய மாற்றம் என்பனவற்றைப் பொருளாகக் கொண்டுள்ளன. இவ்விதத்தில் 'தர்வேஷ்' என்ற புனைபெயரில் (தினகரனில்) எழுதிய ''இளைய தலைமுறையின் இன்றைய பிரகடனம்'' குறிப்பிடத்தக்கது மற்றெருவர் அன்பு மூகைதீன். இப்போது முற்போக்கான சில கவிதைகளை எழுதி வருகிறார். நபி வாழ்வில் நடந்தது. என்ற தலைப்பில் நபி (ஸல்) அவர்கள் தொடர்பான சில சம்பவங்களைக் கவியாக்கம் செய்துள்ளார். மூன்முமவரான சாரணகையூம் பாலர் பாடல்கள் அழகியற் கவிதைகள் எழுதியவர்; சமுதாயச் சார்பான கவிதைகளைத் தற்போது எழுதுகின்றார்.

இடையிடையே எழுதிவரினும் தரமான கவிதைகளைப் படைத்து வருபவர் 'மருதூர்க் கொத்தன்' கிழக்கு மாகாண மண்வளச் சொற்கள் இவரது கவிதைகளில் இடம் பெறுகின்றமை விதந்துரைக்கத்தக்கது.

புரட்சிக் கமாலின் கவிதா வேகத்துடன் ஒப்பிடத்தக்கவர். 'பண்ணமத்துக் கவிராயர்' (எம். எம். பாறுக்). இன்ஸானில் வெளிவந்த இவரது கவிதைகள் தரம் மிக்கன. அல்லாமா இக்பால், நஸறுல், இஸ்லாம், பைஸ் அஹமத் பைஸ் போன்ற வெளிநாட்டு முஸ்லீம் முற்போக்குக் கவிஞர்களது ஆக்கங்களைத் திறம்பட மொழிபெயர்த்துள்ளார்.

மேற்குறித்த கவிஞர்களைவிட இக்காலப் பகுதியில் யு. எல். ஏ. மஜீத், யூ. எல். எம். குவைலித் ('மறையும் நிழல்') எம். எச். எம். ஹலீப்தீன, ஏறுவூர் யூசுப், யோன கபுர ஹம்ஸா, யு. எம். தாஸிம் (கம்மல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறை மறை தாசன்) ஆதம்லெப்பை முதல் வனர்) எம். எச். எம். அஷ்ரப், ஈழமேகம் பக்கீர்ததம்பி முதலிய சிலரும் அவ்வப் போது கவிதைகளை எழுதி வந்துள்ளனர்; இவர்கள் பற்றிச் சிறப்பாகக் குறிப்பிட எதுவுமில்லை. எம். எச். எம். அஷ்ரப், யோ னகபுரஹம்சா தவிர ஏனையோர் காலத் தோடு வளரமுடியாமல் பின்தங்கி விட்ட னர்.

1970 ஐ ஒட்டிய காலப்பகுதி ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க வொன்ருகும். ஈழத்துப் புனைக்கதைத் துறையைப் பொறுத்தவரையில் — குறிப் பாக நாவல்—வியாபார நோக்கில், நிறு வன அடிப்படையில், பொழுதுபோக்கு நாவல்கள் இப்போதுதான் முதன்முதலா கப் பெருவாரியாக உற்பத்தியாகின கவி தையுலகைப் பொறுத்தவரையில் புதுக் கவிதை முனைப்பாகவும், வேகமாகவும் பரந்துபட்ட ரீதியிலும் தங்குதடையின்றி வளரத் தொடங்கியது. கணந்தோறும் தோன்றிக்கொண்டிருக்கும் புதுக் கவிதை யாளருள் குறிப்பிடத்தக்கவர்கள் திக்கு வலை கமால், அன்பு ஜவகர்ஷா, செந்தீரன் (முன்னரே குறிப்பிட்ட எம். எச். எம். ஷம்ஸ், மருதூர்க்கனி) முதலிய மிகச்சிலரே.

தொடக்கத்தில் மரபுக்கவிதை எழுதி வந்த **திக்குவலைக்கமால்** அங்கு நிலையூன் றிக் கொள்ளாமல் அண்மைக் காலம் தொடக்கம் புதுக்கவிதை எழுதி வருகின் ருர். சமுதாயச் சீர்கேடுகள், வர்க்க முரண்பாடுகள், மனிதாபிமானம் முதலிய வற்றைப் பொருளாகக் கொண்ட பல புதுக்கவிதைகளை எழுதி வந்தாலுங்கூட, மென்மை உணர்ச்சிகளையும், மனிதாபிமா னத்தையும் பொருளாகக் கைக்கொள்ளும் போதே குறிப்பிடத்தக்கவராகின்ருர். விருந்து, மாட்டுவண்டி, சர்ச்சைக்குள் ளான 'எலிக்கூடு' (எலிக்கூடு வாங்கும் ஒரு மனிதாபிமான உள்ளத்தை இனங்கான முயலாமல், எலிகளின் சுரண்டலை இனங் கண்டுகொள்ளும் விமர்சகர்கள் இருந்தா லுங்கூட) என்பன இதற்குச் சிறந்த எடுத் துக்காட்டுகள் அண்மைக்கால வியட்னும் பற்றிய புதுக்கவிதை, குயில்பாட்டு முதலி யன திக்குவலை கமாலின் கவிதா வளர்ச் சியில் முதிர்ச்சியையும், பார்வையில் ஆழத் தையும் வெளிப்படுத்துகின்றன. இன்னு மொன்று: இவரது புதுக்கவிதைகள் சில வற்றுக்கு சுய அனுபவங்களே காரண மென்ருல் எழுதும்போது அவற்றை அவ் வாறே பயன்படுத்தாமல் களம், பாத்தி ரம் என்பனவற்றை மாற்றி எழுதலாம். அவ்வாறு அனுபவங்கள் காரணமல்ல வென்ருல் மயக்கமுள்ள, சிறப்பற்ற உதா ரணங்களை ஏன் எடுத்தாள வேண்டும்? இவ்விதத்தில் 'எலிக்கூடு' 'அறிமுகச்சுருள்' இரண்டும் அவதானிக்கத் தக்கன.

பெரும்பாலும் வடிவில் சிறிய, ஆனல் தரமான குறிப்பிடத்தக்க புதுக் கவிதை களை எழுதி வருபவர் **அன்பு ஜவகர்ஷா**. அனுபவங்களை புதுக்கவிதைமூலம் வெளிப் படுத்தும் மிகச்சிலருள் ஒருவர். விளம்ப ரங்கள், முன்னெச்சரிக்கைகள், புதிர்கள், வெற்றுக் கோஷங்களோ ஏற்கனவே 'புதுக் கவிதை நிகண்'டில் இடம்பெற்றுவிட்ட சொற்பிரயோகங்களோ இவரது புதுக் கவிதைகளில் காணப்படுவது குறைவு. 'காவிகளும் ஒட்டுண்ணிகளும்' தொகுதி இதற்கு எடுத்துக்காட்டாகவுள்ளது.

குறைவாகவே எழுதினுலும் **செந்தீரனும்** குறிப்பிடத்தக்கவர்: அவ்வப்போது மொ ழிப்பெயர்ப்பு முயற்சியில் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது. முஸ்லீம் பிரச்சினைக ளைக் கவிப் பொருளாகக் கொள்வதும் இவரது புதுக்கவிதைகளின் சிறப்பியல்பா கும். ஓசைநயம் மிக்க மரபுக் கவிதைகள் எழுதிவரும் **அன்பு டீன்** மிகச்சில புதுக் கவிதைகளும் எழுதியுள்ளார். எவ்வாரு யினும் கரு, பிரசவிக்கப்பட்டால் போதும் கவிதை பிரசுரிக்கப்பட்டால் போதும் என எழுதுபவர் போன்றுள்ளார் **ஈழத்துநூன்; அனல் அக்தர்** முற்போக்குச் சிந்தனைகளு டன் புதுக்கவிதை படைத்து வருகின்ருர் **நீள்கரை நம்பி, பாலமுனை பாரூக், ஜமாலி, ஜவாத் மரைக்கார்** (சோலைக்குமரன்) **ஏ. கே. எம். நியாஸ், எம். பி. சிராஜ்தீன்** முதலியோ ரும் புதுக்கவிதையாளர் பட்டியலில் இடம் பெறத்தக்கோராவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக் கவிதைகள்

## தேவையா ?

சகோதரத்துவம்
சமத்துவம்
மௌளூத் விருந்து ... முஸ்லீமிடையே
ஆனால்
எகிப்தில்
சிரியாவில்.
லெபனானில் ...
பச்சிளம் சிசு
தாய்மார்கள்
கன்னிமார்கள்
...... இரத்தக் கண்ணீர்
விழியால் வழிந்து
சுயஸ் கால்வாயாகி
செங்கடலாகும்
வேளையில்
இங்கு சகோதரத்துவம்
சமத்துவம்
மௌளூத் .. தேவையா ?

★

## பட்டம்

கடத்தல்
பதுக்கல்
வட்டி ... இதனால்
இம்பாலா,
பங்களா,
ஹாஜி ...... என்ற பட்டம்
ஒரு நாள்
முற்றுகை
சோதனை
கைது ... இதனால்
குற்றவாளி
கைதி
303 என்ற பட்டம்

— எஸ். ராசீக் பரீத்
(ஏகு வருடம்-விவசாயம்)

## தத்துவம்

கண்டவனை ... தெருவில்
நின்றவனை ...
நாலு பணத்துக்காய்
நாள் தோறும் நாடி நின்று
கால் வயிற்றைக் கழுவிடலாம்
ஆனால் ......
காலத்தின் வடுக்களினால்,
அழகழிந்து அலைக்கழிந்து,
வயதானால் ...
ஏறிட்டுப் பார்ப்பதற்கோ
எவருமில்லை ஆதலினால்
''அடி பெண்ணே''
உனக்கென்று உலகில்—என்றும்
ஒரு துணைவன் வேண்டுமடி''யென்று
தானும் வயதாகி,
தனித்திருக்கும் தாசியவள்
தத்துவத்தைச் சொன்னாளாம்

— ரஹ்மத்
(ஏகு வருடம் — விஞ்ஞானம்)

★

## உதாசீனம்

புத்தம் புதிதாய்
பூத்துக் குலுங்கி
புதுமணம் பரப்பும்
மலரினைக் கண்டு,
மயங்கி நின்றவள்
மாலையில் ...
வாடி வதங்கி
மலர் சருகாகி
சரிந்து வீழ்ந்திட
குப்பை மேட்டினில்
கூட்டித் தள்ளினாள்!

— எம். கபீர்
(புகு வருடம் — உடற் கல்வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

# நாடும் சமூகமும் எதிர்பார்க்கின்றது

அடுத்தவருடம் ஜனவரியில் நாட்டின் பல்வேறுபகுதிகளிலுள்ள 26 ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளிலிருந்து மொத்தம் 3974 ஆசிரியர்கள் பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறுகின்றனர். இவர்களில் முஸ்லிம் ஆசிரியர்களும் அடங்குவர்.

இதுவரை பயிற்றப்படாத ஆசிரியர்களாக இருந்த இவர்களுக்கு பயிற்சியைப் பூர்த்தி செய்து கொண்டமை ஒருவகையில் நிம்மதியையும் மன நிறைவையும் அளித்திருக்கும் என்பதில் ஐயம் இருக்கமுடியாது. பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறும் இவர்கள் தமது பழைய அல்லது புதிய பாடசாலைகளில் நியமனம் பெற்று தமது கடமையை புதிய உற்சாகத்துடன் மேற்கொள்வார்கள் என நம்பலாம். அதேவேளையில் இவர்களுக்கு மாத்திரமல்ல, பொதுவாக ஆசிரியர் அனைவருக்கும் எத்தகைய பொறுப்புகள் எதிர்நோக்கியுள்ளன என்பதை ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்

ஆசிரியத் தொழில் மற்றைய தொழில்களை போலல்ல. அது உன்னதமான ஒரு பணியாகும். நாட்டின் நலனோடு பின்னப்பட்டுள்ள ஒரு சேவையாகும். ஏனெனில், நாளைய சமுதாயமான இன்றைய மாணவ மாணவிகள் முழுத் தொகையினரும் இவர்களை நம்பியே ஒப்படைக்கப் பட்டுள்ளனர். இவர்களுக்குக் கல்வியளிப்பது மாத்திரமல்ல, இவர்களின் மனதை உருவாக்குவதிலுங்கூட ஆசிரியர்களுக்குப் பெரும் பங்கிருக்கிறது. நமது மாணவ–மாணவிகளை நமது தாய் நாட்டின் தகுதி வாய்ந்த எஜமானர்களாக, தேசத்தின் புனருருவாக்கத்தில் காத்திரமான பங்கை செலுத்துபவர்களாக அத்தகைய உணர்வும், உள்ளமும் உடையவர்களாக ஆக்கிவிடும் பொறுப்பு ஆசிரியர்களிடமேயுள்ளது. எனவே ஆசிரியர்களின் கடமை— அவர்களின் தொழில் தனித்துவமானது; மகத்தானது; இதற்குமேல் விபரிக்கத் தேவையில்லை.

★ எஸ். சுபைர் இளங்கீரன் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அடிப்படையிற்றான் நமது முஸ்லிம் சமூகத்தில் கல்விச் சேவையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் ஆசிரியர்களும்தமது கடமையை நோக்க வேண்டும். அதிலும் முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை நமது ஆசிரியர்களின் இந் நோக்கு மிகவும் கூர்மையாக இருத்தல் அவசியமாகிறது. முஸ்லிம் சமூகம் கல்வியில் பின்தங்கியிருப்பதுதான் இதற்குக் காரணம்.

1956க்கு முன்பு முஸ்லிம் பாடசாலைகளும், ஆசிரியர் தொகையும் விரல் விட்டெண்ணத்தக்க அளவே இருந்தன. பாடசாலைகள் 67 மட்டுமே. ஆசியர் தொகையோ ஆக 323. இந்தப்புள்ளி விபரம் 1956க்கு முன்பு நமது கல்வி நிலை எந்தஅளவுக்கு இருந்தது என்பதை எடுத்துக்காட்டப் போதுமானது. 56க்குப் பின்னரே இந்த எண்ணிக்கை 750 பாடசாலைகளாகவும் 7000 ஆசிரியர்களாகவும் அதிகரித்தது.

இந்த மாற்றம் முஸ்லிம்களின் கல்வி நிலையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை மறுப்பதற்கில்லை. இதனால் படித்தவர்களின் எண்ணிக்கை கூடியுள்ளது. பலர் உயர் கல்வி பெறுவதற்கும் அரசாங்க நியமனங்களைப் பெறுவதற்கும் சாத்தியமாயிற்று.

இருப்பினும் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ள இன்றைய நிலையிலுங்கூட மற்றைய சமூகங்களுடன் ஒப்பிடுகையில் முஸ்லிம் சமூகம் இன்னும் எவ்வளவோ பின் தங்கியுள்ளது என்ற உண்மையை நாம் ஒப்புக்கொண்டேய ஆகவேண்டும்.

இது முஸ்லிம் சமூகத்தோடு மட்டும் சம்பந்தப்பட்ட பிரச்சினையல்ல; ஒரு தேசத்தின் பிரச்சினையுங்கூட. ஒரு நாட்டினது முழு வளர்ச்சியையும் கருத்திற் கொள்ளும்போது அதன் தேசிய அங்கங்களாயுள்ள ஒவ்வொரு சமூகமும் அதற்குரிய வளர்ச்சியைப் பெற்றிருத்தல் அவசியம். ஒரு அங்கம், குன்றிய வளர்ச்சியையும், இன்னொன்று கூடிய வளர்ச்சியையும் பெற்றிருந்தால் அது தேசத்தின் ஆரோக்கியமான—முழுவளர்ச்சியாக இருக்காததோடு இன, சமூகப் பூசல்களுக்குங்கூட வித்தாக அமையும்.

அது மாத்திரமல்ல, கல்வி என்பது வெறுமனே பாமரத் தன்மையை ஒழிப்ப தொன்றாகவோ அல்லது ஓர் உத்தியோகம் தேடிக் கொள்ளத் தேவைப்படும் கருவியாகவோதான் கருதப்படுகிறது. ஆனால் கல்வியின் பயன்பாடு அதுமட்டுமல்ல; அது மனித சக்தியை அளவிட முடியாத சுரங்கப் பொக்கிசமான உழைப்பு சக்தியை உணரவும், அதை வெளிக் கொணரவும் தூண்டக் கூடிய ஒரு கருவியாகவும் இருந்தல் வேண்டும். பழைய கல்வியமைப்பு இந்த இயல்பைக் கொண்டதாயிருக்கவில்லை. எனவே தான்பழையகாலனித்துவக்கல்வியமைப்பு மாற்றப்பட்டு புதியதேசிய கல்வித்திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதில் விஞ்ஞானம், விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் ஆகியவற்றிற்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டலாம். இதனை உணர்ந்து கொள்ளாத—கல்வியில் போதிய அக்கறைகாட்டாத ஒரு சமூகம் தனது மனித சக்தியை முழுமையாக பயன்படுத்தத் தவறிவிடும். இது அச்சமூகத்திற்கும் நாட்டுக்கும் பெரும் நஷ்டமாகும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

முஸ்லிம் ஆசிரியர்கள் தமது பாடசாலைகளில் பாடங்களைக் கற்பிப்பதோடுதமது கடமையை வரையறுத்துக் கொள்ளாமல் மேற்கூறிய விஷயங்களை மாணவருக்கும்—பெற்றோருக்கும் விளக்கி உணர்த்த வேண்டியதையும் தமது கல்விச் சேவையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகக் கொள்ளுதல் வேண்டும். அதே வேளையில், கல்வியை உருப்போடும் ஒரு கலையாகக் கற்பிக்காமல் இயந்திர ரீதியில் போதிக்காமல்—உணர்வு பூர்வமாக கற்பிக்க வேண்டியதும் ஆசிரியர்களின் கடமையாக உள்ளது. அதிலும் குறிப்பாக, இன்று புதிய தேசிய கல்வித் திட்டம் அமுலுக்கு வந்துள்ளதால் இது மிகவும் அவ்சியமாகிறது.

உதாரணமாக ஜீ. ஸி. ஈ. உயர்தர பரீட்சைக்குப் பதிலாக வரும் உயர்தர தேசீய சான்றிதழ் பரீட்சையில் சோஷலிசத்துவக் கோட்பாடுகள் கட்டாயபாடமாக இருக்கிறது. சோஷலிச யுகமான இன்றைய சகாப்தத்தில் சோஷலிசத்தைப் பற்றி மாணவர் விளக்கம் பெறவேண்டியது அவசியம். இதனைக் கல்வியமைச்சரே குறிப்பிட்டுள்ளார்.

சோஷலிச தத்துவங்கள் ஏகாதிபத்தியத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் எதிரானது. ஆகையால், காலனித்துவ ஆட்சியாளர்கள் சோஷலிசத்தத்துவங்களை கற்றுக் கொள்ளும் வசதியை மாணவருக்கு அளிக்கவில்லை. மாறாக, ஏகாதிபத்தியத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் சேவை செய்யும் கல்வி முறையையே அமுல்நடத்தி வந்தனர். 1948க்குப் பிறகு கூட இதுமாற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யமைக்கப்படவில்லை. அது மாத்திரமல்ல பாடசாலைகளில் ஏகாதிபத்தியத்திற்கும், முதலாளித்துவத்திற்கும் எதிராகவோ, சோஷலிசத்தைப்பற்றியோ ஆசிரியர் ஒருவர் மாணவருக்கு எடுத்துக்கூற முடியாத நிலை இருந்தது. எனவேதான் முன்னைய கல்விமுறை தேசபக்தி, முற்போக்கான எண்ணம், சமுதாயப் பற்று முதலிய உயரிய உணர்வுகளை மாணவர் உள்ளத்தில் விதைக்கவில்லை.

இன்று நிலைமை மாறிக் கொண்டிருக்கிறது. சமுதாய வாழ்வில் எல்லாவற்றிற்கும் தலையாயது அரசியலே. அதுதான் தலைமை தாங்குகிறது; ஒரு நாட்டின் வீழ்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் கூட அரசியல் அடிப்படை என்ற உண்மை உணரப்படுகிறது. வரலாற்று விதியினூடாக தேசத்தின் தேவைக்கேற்ப ஏற்பட்டு வரும் மாற்றங்கள் இந்த உண்மையை மேலும் வலியுறுத்துகின்றன. எனவே, எதிர்காலத்தில் இந் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பைத் தமது கையில் தாங்கியுள்ள நாளைய சமுதாயத்தினரான இன்றைய மாணவர்கள் அரசியல் தத்துவங்களைப் புரிந்துகொள்வது எத்துணை அவசியம் என்பது சொல்லாமலே விளங்கும். புதிய கல்வித் திட்டத்தில் சோஷலிச தத்துவக் கோட்பாடுகளைக் கட்டாய பாடமாக்கப்பட்டுள்ளதற்கு இதுதான் காரணம். ஆகையால் சோஷலிசப் பரீட்சைக்கான ஒரு கட்டாய பாடம் என்ற முறையில் உருப்போடுவதற்குரிய தொன்றாகக் கொள்ளாமல், சோஷலிச உணர்வை மாணவர் உள்ளத்தில் ஊட்டத்தக்க வகையில் அப் பாடத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

ஆசிரியர் மத்தியில் சோஷலிசத்தை விரும்பாதவர் பலர் உள்ளனர் என்பது உண்மையே. ஆயினும் அவர்கள் தமது விருப்பு வெறுப்புக்களை இதிற் காட்டினால் அது மாணவருக்குத் தீங்காக முடியும். சோஷலிசம் தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நியதி. அது இன்று உலகம் தழுவியதாக வளர்ந்துவிட்டது. எதிர்காலம் அதனுடையதுதான். யதார்த்தமாகிவரும் இந்த உண்மையை சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கேற்ப மறுதலிப்பது அறிவுடைமையாகாது. இதனைப் புரிந்து கொண்டு சகல ஆசிரியர்களும் தமது கல்விச் சேவையை ஆற்ற வேண்டும்.

அதேபோன்று விஞ்ஞானம், கைத்தொழில், விவசாயம் ஆகிய பாடங்களின் அர்த்தமும் நோக்கமும் மாணவர் மனதில் பதியத்தக்கதாய்ச் செய்ய வேண்டியது இன்றியமையாததாகும். இவை பரீட்சைக்கான பாடங்கள் என்ற முறையில் மட்டுமேயல்லாது, நமது சமூகத்தினதும், நாட்டினதும் சுபீட்சத்துக்கு வழிகாட்டக் கூடிய பாடங்கள் என்பதைக் கருத்தில் நிலைக்கச் செய்தல் அவசியம். அப்போதுதான் கல்வியின் முழுப் பயனையும் நமது மாணவர்கள் பெறமுடியும். உணர்வு பூர்வமாகக் கற்பிப்பதன் மூலமே இதனைச்சாதிக்க இயலும்

நமது முஸ்லிம் பாடசாலைகளில் கல்வித்தரம் பாராட்டத்தக்கதாயில்லை என்பது பொதுவான புகார். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். அவற்றில் உணர்வு பூர்வமாகக் கற்பிக்காததும்ஒன்று எனக் கூறலாம், கல்வியின் தரம் உணர்வு பூர்வமாகக் கற்பித்தலிலும் அடங்கியுள்ளது.

உணர்வே செயலுக்குத் தூண்டுகோல்; உந்து சக்தி நமது சமூகம் பின்தங்கிய நிலையிலிருந்து முன்னேறிச்செல்வதற்கு இரட்டிப்பு வேகத்துடன் செயலாற்ற வேண்டியிருப்பதால், ஆசிரியர்கள் உணர்வு பூர்வமாகக் கற்பித்தலை தமது கல்விச் சேவையின் முக்கிய அம்சமாகக் கொள்ளுதல் வேண்டும்.

நாடும் சமூகமும் இதனை அவர்களிடம் எதிர்பார்க்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம்பிறையே இயம்புவாய்

✶ மூதூர் முகைதீன் ✶

நாளைவரும் நவயுகத்தில்
நமக்கொரு பாதைகாட்ட
வசந்தத்தின் கீதங்காளாய் வரும்
வழிகோலிகளின்
வரவேற்புப் பாடல்களுடன்
மேற்கிலிருந்து.
என்முயற்சி......
மீண்டும் தொடர்கிறது

இறந்து போய்விட்ட
எம் சகோதரர்களின்
இனப்பெருமையைப் பேசிக்கழிப்பதைப்போல
பூரணத்துவம் பெற்று முடிந்த
என் இறந்தகாலத்தைப்பற்றி
பெருமைப்படுத்தி
உங்களைப்போல......
என் வாழ்க்கையை
செலவு செய்ய விரும்பவில்லை,
மீண்டும்
மேற்கிலிருந்து உதயமாகிவிட்டேன்
என் முயற்சி தொடர்கிறது

கிழக்கில்தான்,
என் கருணை ஒளி
மிகையாக உள்ளது என்கிறார்கள்
பலநாள் முயற்சியின் பின்தானே
நான் பூரண நிறைவாகிறேன்
மாற்றத்தைப் பேச நான்விரும்பவில்லை
மாற்றத்தை ஏற்படுத்தவே, விரும்புகின்றேன்
இதோ............
பலநாள் ஓய்விற்குப்பின்
இளம் பிறையாகி மீண்டும்.........
என் முயற்சி தொடர்கிறது.

---

✶✶✶ இஸ்லாமிய மஜ்லிசின் முன்னைய அங்கத்தவர்களில் பலர், இன்று, தமிழ் இலக்கியத் துறையில் பிரபலம் பெற்று விளங்குகிறார்கள். அவர்களில் சிலரை ஒரே தலைப்பில் கவிதை அமைக்க வேண்டினோம். ஐந்து கவிஞர்கள் இங்கு, இளம்பிறையை இயம்பச் செய்து, இலக்கிய விருந்து படைக்கிறார்கள். ✶✶✶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்பிறையே இயம்புவாய்

முகில்வானத் திரைநீக்கி
முகம்காட்டும் இளம்பிறையே !

என்
இருட்டுக் குகைக்குள்ளே
சற்றே சுகம்பரவ......
விளக்காகக் கூடியேறி
ஒளிபரப்பு......!

முடியாதா ?

ஏக்கப் பெருமூச்சாய்
எரியும் என்இளமைச்
சோகப் புகைமூட்டம்
தொலைய என்கழுத்தில்
காதலியாய் வந்து
சங்கமிப்பாய்......!

மாட்டாயா ?

முற்றத்து மண்பிசைந்து
அப்பம் அவிப்பதிலே,
சிந்தை மயங்குகின்ற
சின்னத் தங்கையவள்
பசிவயிற்றை
அப்பத்தின் விளிம்புடைவாய்த்
தொட்டு முத்தமிடு......!

இத்தனைக்கும் பின்னும்
ஏனின்னும் அசைந்தசைந்து
மெல்ல மறைகின்றாய்......?

இப்படியாய்
ஏழ்மை மைதொட்டு,
காற்றுப் படிவத்தில்
எழுதும் விண்ணப்பம்
பலநூறாய்க் குவிகின்ற
தொல்லைதான் காரணமோ ?
இயம்பிடுவாய்...!

★ திக்குவல்லை கமால் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்பிறையே இயம்புவாய்

வளர்ந்து வரும் வாள் பிறையே, வழி நடந்த பாதையிலே
வளர்ந்து வரும் குறையெல்லாம் வாய்மூடிப் பார்க்கின்றாய்
தளர்ந்து வரும் பண்பாடு தழைத்தோங்க வேண்டுமென்றால்
இளம்பிறையே இன்றே நீ 'இயம்பிடுவாய் வழி ஒன்று'

அல்லாஉற¬ அக்பர் என்றும் ஆண்டவா இறைவா என்றும்
வல்லானின் நாமத்தை வாய் கிழிய ஓதுகின்றார்
சொல்லாலே போதனையை சுவையாகத் தேன் சேர்த்து
நல்லார் போல் வேடமிட்டு நாள் முழுதும் உரைக்கிறார்

அக்கரை நாடிருந்து அரசினரை ஏமாற்றி
இக்கரை கொண்டு வந்த இந்தியா கைக்குட்டை
சங்கடித்த சாரங்கள் சரிகைச் சால்வையிலே
தங்கம் பளபளக்க தலைவரின் பள்ளியிலே
எங்கள் இறைவா என ஏற்றிப் போற்றுகின்றார்
கங்குகரையின்றி கண்ணீரும் ஒட்டுகின்றார்

காந்தியை வள்ளுவனை கன்னி மகன் ஈசாவை
சாந்தி வழி தந்த சீலர் நபிநாயகத்தை
ஏந்தி நாவினிலே ஏறுகின்ற மேடையெல்லாம்
சீதனக் கொடுமைகளை சீராக மற்றவர் முன்
வேதனை நடிப்புடனே விம்மி விம்மிக் கூறுகின்றார்
போதனை முடிந்தவுடன் போதுமான ரொக்கமுடன்
ஆதனம் கொண்டுவரும் ஆரணங்கைத் தேடுகின்றார்
வாயிலே சோசலிசம் ''வாருங்கள் திரண்டின்று
தீயிலே பொசுக்கிடுவோம்' தீயவர் சொத்து என்பார்
கையிலே நாலிரண்டு காசு பணம் சேர்ந்து விட்டால்
நாயிலும் கேவலமாய் நடத்திடுவார் கூலிகளை
ஆதியிலே ஸ்ரீ லங்கா வேண்டியதைச் சாதிக்க
நாதியிலை என்றாலோ நள்ளிரவில் யூ. என். பீ.
பாதியிலே அதைவிட்டும் பாய்வார் ''டிரான்ஸ்பர்'' என்ற
பீதியிலே மறுபடியும் போய் நிற்பார் பழைய நிழல்

பொய்யும் புரட்டும் பொறாமைப் பூசல்களும்
பெய்யும் மாரியெனப் பாருலகில் உய்வடைய
''உள்ளம் பதைக்க வேண்டுகின்றேன்'. வழி ஒன்று
இளம்பிறையே நீ இயம்பு.

ஏறுவூர்
அஜிவத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கம் கவியரங்கம் கவியரங்கம் கவியரங்கம்

# இளம் பிறையே இயம்புவாய்

நூறு கோடி சீவன்களுக்கு ஒளிபாய்ச்சுவதாக,
வழிகாட்டி என்று சொல்லப்படுகின்ற இளம் பிறையே!
சர்வ தேசம் எங்கும்...............
பரந்து கிடக்கின்ற இந்தச் சீவன்களின்
நிலை பற்றி............. உனக்குத் தெரியுமா,
எண்ணை வளத்தால்.........
கொடி கட்டிப் பறக்கின்ற போதும்,
பழைய சாம்ராஜ்ய பெருமைகளை
பாதுகாத்துக் கொண்டு பலர்
தங்க முலாம் கார்களில்
போகின்ற நேரத்திலும்,
காய்கின்ற வயிற்றுடனே பிளாட் பாரங்களிலும்,
சாக்கடை, தொழில்களிலும்,
லட்சக் கணக்கான முஸ்லிங்கள்

இளம் பிறையே.........ஏட்டில் இருக்கின்ற
சகோதரத்துவங்கள், சமத்துவங்கள்
சிலருக்கு......மட்டும்......
ஒளி வீச்சு பாதுகாப்பு அளிக்கின்றதே?
எமது நம்பிக்கைகள்
உனது மேல் உள்ள
ஐங் கோணத்தை நோக்கி
போகின்ற காரணம்...........
''சகோதரங்கள்'' ஏட்டில் இருக்கின்றதாலோ?
மதத்தை மட்டும் முதன்மைப் படுத்தி
ஒதுங்கி நாசமாகி விட்டோம்,
தனித்துவத்துடன் கூடிய ''சமுதாயத்தை''
முதன்மைப் படுத்துவோம்
தேசியத்தோடு ஒன்றிணைவோம்,
குமர்களின் 'குமுறல்கள்'..............
விதவைகளின் கண்ணீர்கள்..............
இளைஞர்களின் விரக்திகள்..............
ஏழைகளின் ஏக்கங்கள்..............
இவையெல்லாம் தொலைவதான
வாழ்வும்..............சமத்துவமும் வேண்டும்.
அதற்கொரு மாற்றம் வேண்டும்,
அதற்காக.......உன்......ஒளி.........,
வீச்சுக்குரலை இயம்புவாய் இளம்பிறையே!

★ அன்பு ஜவகர்ஷா ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம்பிறையே இயம்புவாய்!

கற்பனை மணல்மேட்டில்
கனவு விதைகளை
தூவவில்லை நான்....
ஏனெனில்....
அவை முளைக்காது!

குருதிச் சேற்றிலே
குளிப்பவர் பலர் உளர்!
உறுதி மிக்க வோர்
உளந்தான் அவர் சொத்து
இழப்பதற்கவரிடம்
ஏதுமே இலை....இல்லை!
பறிப்பதற்குள்ளவை
அநந்தம்! அநந்தம்!

சாக்கடைப் பருக்கையில்
சாவினைத் தடுப்பவர்
பாக்களைப் புனைவதால்
பலம் பெற்று எழுவரோ?

எந்தன் ''காதலி''ன்
இளநகைப் பிறையே
உந்தன் அமைதி,
உருக்கை நிகர்த்த
எழுது கோலிடம்
இலையே! என் செய்ய?
விதியின் விலையை

விற்றுத் தொலைப்போம்!
அமைப்பை மாற்ற
அசுரப் பலமாய்
எழுகும் காலை....
எழுது கோலே
இரு....ஓர் மூலையில்....
இளமைப் பிறையே
இருளைப் பொழிவாய்!

புரட்சிக் கவிஞன் "கே!"

1976 ജൂലൈ 23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Arafat's historic speech at UN

*(This article is reproduced from AL - QALAM, a monthly Publication Jan. / February 1975)*

**AT THE UNITED NATIONS General Assembly on Nov. 13, Palestine Liberation Organisation chief Yasser Arafat made a clarion call for the establishment of a Palestine State, where Christian, Jews and Muslims could live together in peace, justice equality and fraternity.**

In a historic speech at the hushed UN General Assembly Arafat in a voice, vibrant and clear, said that the Palestinian revolution never considered the Jews as enemies. The revolution never considered religion as the basis.

In a frontal attack on Zionism, Arafat said that the Zionists seemed to have learnt nothing from the events in the past and were busy preparing for another war.

**Arafat said,"I have come to the United Nations with a freedom fighter's gun in one hand and an olive branch in the other. Don't let the olive branch fall from my hand".**

*'I plead for a Palestine where Christians, Jews and Muslims could live together peace, justice and brotherhood.'*

Dressed in the traditional Arab head dress, the Palestinian leader was given a standing ovation when he entered the Assembly hall.

He started his speech with an appeal to American poeple to understand and comprehend the heroic fight waged by the Palestinians. He called upon them to help the Palestinians get sovereignty over their homeland.

He appealed for support to his people in returning to their ancestral land from which they had been forcibly evicted by forces of Zionism.

**Arafat warned of the grave dangers of unbridled Zionist quest for more land and its inexorably moving towards annexation of lands and property belonging to others, which he said endangered peace not only in the region but the whole world.**

**He said that a new war would envelop the entire world and cause incalculable destruction because nuclear powers and nuclear weapons would be drawn into the conflict also.**

Arafat appealed to the United Nations to forestall this and give his oppressed poeple the right of self-determination so that the problem which had been hanging fire for so long could be resolved.

Arafat said that in his "formal capacity as Chaiman of the Palestine Liberation Organisation, **"I announce here that we do not wish the shedding of one drop of either Arab or Jewish blood".**

Why should the Arab Palestinians pay the price of discrimination, he asked. Why should they be responsible for the problems of Jewish immigration? Why did not "the supporters of these problems" open their countries, which could absorb and help these immigrants?

"Those who call us terrorists wish to prevent world public opinion from discovering the truth about us and from

COMPILED BY — M. S. A. SAROOR — (VICE - PATRON)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

seeing the justice on our faces", the PLO leader said.

"They seek to hide terrorism and tyranny of their acts, and our own course of self-defence", he said.

He said the small number of Palestinian Arabs who were not uprooted by the Zionists in 1948 were at present refugees in their own homeland.

**"I ask America wholeheartedly to endorse rights and justice, to recall George Washington back to mind, heroic Washington whose purpose was his nation's freedom and independence, and also Abrahan Lincoln, champion of the destitute and the wretched, and also Woodrow Wislon whose doctrine of 14 points remains subscribed to and venerated by your people.**

"I ask the American people whether the demonstrations of hostility and enmity taking place outside this great hall reflect the true intent of American will?

"What, I ask you plainly, is the crime the people of Palestine have committed against you? Why do you fight us so? Does such unwarranted belligerence really serve your interests? Does it serve your interests as a people? No, definitely not.

The PLO chief further said: "the difference between the revolutionary and the terrorist lies in the reason for which each fights.

For whoever stands by a just cause and fights for the freedom and liberation of his land from the invaders, the settlers and the colonialists cannot possibly be called terrorist; otherwise the American people in their struggle for liberation from the British colonialists would have been terrorists.

Outlining the objectives of the movement, Arafat said, since its inception, our revolution was not motivated by racial or religious factors.

**Its target was never the Jews, as a person, but racist Zionism and the undisguised aggression.**

**In this sense, ours is also a revolution for the Jew, as a human being as well.**

**We are struggling so that Jews, Christians and Muslims may live in equality, enjoying the same rights and assuming the same duties, free from racial or religious discrimination".**

He urged the people and Governments of the world to stand firm against **Zionist attempts at encouraging world Jewry to emigrate from their countries and to usurp their land.**

"We urge them as well firmly to oppose any discrimination against any human being, as to religion, race, or colour."

He said, "Palestine is crucial amongst those just causes fought for unstintingly by the masses labouring under imperialism and aggression".

"The Zionist movement allied itself directly with world colonialism".

The roots of the Palestine question, he said, "do not stem from any conflict between two religions or two nationalisms. Neither is it a border conflict between neigbouring States.

**"It is the cause of a people deprived of its homeland, dispersed and uprooted, and living mostly in exile and in refugee camps."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் கடந்த கண்ணீர்

எம். எஸ். எம். ஹாதி

(ஏறுவருடம் — வர்த்தகம்)

★

வர்க்கச் சுரண்டலும், மேன்மட்ட பழி வாங்கல்களும், எவ்வளவு வேதனையை நிகழ்த்துகின்றன?

★

★

அது ஒரு குக்கிராமம். அக்கிராமத்தின் கடைசி ஓரத்தில் அமைந்திருந்தது ஹமீதின் குடிசை. ஒதுக்குப் புறத்தில் அமைந்திருக்கும் அக்குடிசையைப் போன்றே அவனும் அக்கிராமத்திலிருந்து ஒதுங்கி வாழவும் இல்லை; ஒதுக்கப்பட்டு வாழும் ஒரு தொழிலாளி அவன்.

பள்ளியிலே பாங்கின் ஒலி அந்த அமைதியான விடியற்பொழுதினிலே ஹமீதை எழுப்ப மட்டுமே ஒலிப்பது போன்று மிகவும் தெளிவாகக் கேட்டுக்கொண்டிருந்தது, கூரையின் இடைவெளியூடாக வரும் ஒளிக்கதிர்கள் ஹமீதின் மண்வெட்டிகளில் பட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தன. ஆனால் அவனுடைய வாழ்க்கையை அந்த மண்வெட்டிகளால் பிரகாசிக்கப்பண்ண முடியவில்லை. அவன் படுக்கையை விட்டு எழவில்லை. அவன் ஏன் எழ வேண்டும்? அவனுக்குத் தான் விடிவே இல்லையே! அவன் கயிற்றுக் கட்டிலிலே திரிந்த கயிறுபோன்று முறுகிக் கிடக்கின்றான்.

குடிசையின் ஒரு மூலையில் உறங்கிக் கொண்டிருக்கின்ற அவன் மனைவி ஹமீதாவும் எழும்பவில்லை. உண்டகளையில் வந்த உறக்கம் என்றால் எழும்பலாம். இது பசிக்களையில் வந்த உறக்கம் ஆயிற்றே! அந்தத் தூக்கத்தை நிரந்தரத் தூக்கமாகாமல் தடுப்பதற்காக ஒரு மண் சட்டியில் நீரை ஊற்றி எரிக்கின்றாள். நேற்று புதிய மலர்; இன்று வாடிய மலர்; நாளை சரமாகாமல் தடுப்பதற்காக குழந்தை அஸீஸின் வாயினுள் போலிச் சூப்பியைத் திணிக்கின்றாள். அவள் வாழ்வும் போலி வாழ்க்கையாகவே இருந்தது.

ஹமீது கையை ஊன்றிக் கொண்டு மெல்ல எழும்புகின்றான். ஹமீதா அதைக் கண்டு ஓடுகின்றாள். "ஏன்! இப்ப என்ன வந்துவிட்டது. சும்மா படுங்களேன். டாக்டர் மூன்று நாளைக்காவது எழும்ப வேண்டாம் என்றார். அதற்குள் மறந்துவிட்டீர்களா?"

"ஹமீதா மூன்று நாளைக்கல்ல; முப்பது நாளைக்கும் நான் படுத்திருப்பேன். ஆனால் நான் ஒரு டாக்டர் இல்லையே! ஓயாது உழைத்தால்தான் தொழிலாளியால் வாழ்க்கை நடத்த முடியும். ஆனால் நான் ஓயாது உறங்கிக்கொண்டே இருக்கின்றேனே ஹமீதா. இனியும் நான் படுத்தால் இந்த வீடே படுத்துவிடும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நிரந்தரமாக இந்த வீடு எழும்ப வேண்டுமென்ருல், நீங்கள் இப்பொழுது படுத்துத்தாஞக வேண்டும்'' என்ருள் ஹமீதா.

''என்ஞல் படுக்க முடியவில்லையே ஹமீதா''

''வருத்ததைத் தேடாமல் சொல்வதைக் கேளுங்கள்'' என்று உரிமையுடன் கண்டித்தாள் ஹமீதா.

''நானும் வருமானத்தைத் தேடத்தான் முயல்கிறேன். ஆனல் வருத்தம் தான் நான் முயலாமலே வருகின்றது'' என்ருன் ஹமீது.

ஹமீதாவின் கண்கள் கலங்கியிருந்தன ஆனல் கண்களிலிருந்து நீர் வழியவில்லை.

''ஹமீதா: நீங்கள் படும் கஷ்டத்தைப் பார்க்கும்போது எல்லாம், நான் உங்களுக்குக் கணவஞக இருக்கத் தகுதியுடையவஞ என ஏன்னேயே கேட்டுக் கொள்வேன். என்னென்று ஹமீதா உங்களால் இந்த நிலையிலும் அன்பாக நடக்க முடிகிறது.''

''என்ன இது? வறுமை சந்தோஷத்தைத்தான் பறிக்குமே ஒழிய அன்பையுமா பறித்து விடும்? உண்மை அன்புக்கு செல்வம், வறுமை என்ற பாகுபாடு இல்லையே'' என்ற ஹமீதா, குழந்தையின் அழுகுரல் கேட்க எழுந்து செல்கின்ருள். அப்போது ஹமீதின் உள்ளம் கடந்த காலத்தை எண்ணி ஓலமிடுகிறது. அன்று தனது பிஞ்சு உள்ளத்தை நசுக்கி விட்ட, கருகச் செய்துவிட்ட துன்ப உணர்வுகள் மனதைத் திரும்பத்திரும்ப அலைக்கழித்துக் கொண்டிருந்தன. உதறித் தள்ளிய பாம்பு காலைச் சுற்றிக் கொள்வது போல, சம்பவங்கள் அவன் நெஞ்சத்தில் மோதி நின்றன.

ஹமீத் சிறுவயதிலேயே தந்தையை இழந்தவன். ஏழ்மையின் முரட்டுப்பிடியில் சிக்கித் தவித்தனர் ஹமீதும், அவன் தாயாரும். பலன் ஹமீதின் தாயாரும் நிரந்தர நோயாளியாஞள். பட்டினி கிடக்க வேண்டிய நிலை. ஹமீத் தொழில் தேடியலைந்தான், படித்தவர்களே, பட்டம் பெற்றவர்களே தொழிலில்லாமல் அலையும் போது படிப்பற்ற அவனுக்கு எங்கே தொழில் கிடைக்கப்போகிறது.

ஹமீதின் சிந்தனையில் ஓர் எண்ணம் உருவாகியது. எண்ணத்தை செயல்படுத்துவது எப்படி? அதற்கு பணம்? நிலம்? திரும்பவும் சிந்தனையில் கேள்விக் குறிகள். ஹமீத் எண்ணத்தை செயல் படுத்தும் நோக்கத்தோடு, அந்தக் கிராமத்தில் பெரும் புள்ளியாக இருந்த மஜீது முதலாளியிடம் சென்று, ''முதலாளி உங்க சும்மா இருக்கிற தோட்டத்தில் ஏதாவது விதைச்சா அது நல்ல வருமானத்தைத் தரும் இல்லையா?''

''ஓ ... தாராளமாக செய்யலாம். இப்படி நம்ம இளைஞரெல்லாம் ஊக்கம் எடுத்தால் நாட்டில் பொன் விளையுமே. எதிர்காலத்தில் ராஜா மாதிரி இருக்கலாமே'' அவருக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

ஹமீத் உழைத்தான். நெற்றிவியர்வை நிலத்தில் சிந்த ஓடாக உழைத்தான், உண்மை, நேர்மை, நம்பிக்கை இவையே அவன் உழைப்புக்கு ஊன்று கோலாக அமைந்தது. அவனின் உழைப்புக்குக் கிடைத்தது நாளாந்தச் சம்பளம் மூன்று ரூபாதான். வெறும் மண்மேடாக இருந்த தோட்டங்கள் அவனது உழைப்பால் பச்சைப் பசேலென வளங்கொழிக்கும் பணத் தோட்டமாக மாறியது. ஹமீத் நிலத்தில் சிந்திய நெற்றி வியர்வையின் பலன் அவர் இரும்புப் பெட்டியும் நிறைந்து கொண்டு வந்தது. அவர் குணத்திலும் மாற்றங்கள் தோன்றின. பணம் படைத்தவன் ஒருபடி உயர்ந்தவன் என்ற ஓர் ஆடம்பர எண்ணம். இது சிலரைப் பற்றிக் கொள்வது இயல்புதானே. இந்த வகையில் மஜீத் முதலாளிமட்டும் விதிவிலக்கா?

ஏழைகள் தம் கஷ்டங்களையும் கவனியாது தியாகங்கள் புரிவதற்காக மேலும் கஷ்டப்படுகிருர்கள். செல்வந்தர்கள் தாம் மேலும் செல்வம் படைத்தவர்களாக வேண்டுமென்று ஆசைப்படுகிருர்கள். இதில் தான் எத்தனை வேற்றுமைகள்.

அன்று காலை, தினமும் வைகறைப் பொழுதிலேயே வேலைக்கு வரும் ஹமீதை இன்னும் காணவில்லை. நேரமும் கரைந்து கொண்டிருந்தது. மஜீது முதலாளியின் முகத்தில் சிடுசிடுப்பு. கண்கள் கோவைப் பழம் போல் சிவந்திருந்தன, ''ம்...வரட்டும். இன்று அவனுக்கு ஒரு முடிவெடுக்கிறேன்' இப்படி சினத்தின் எதிரொலி.

அப்போது ஹமீது இளைக்க இளைக்க ஓடிவந்தான். முதலாளியின் முகத்தைக் கண்டதும் அவனுக்கு ஒருவித அச்சம். அவன் அதைப் பொருட்படுத்தவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்னடா உழைக்கிறவன்ட லட்சணம் தானு இது? முகத்துக்கு வெயில் விழும் வரையும் படுத்திட்டு நேரம் பிந்திப் போச்சின்னு இங்கு வந்து முழிக்கிருய். உனக்கு வேலைக்கு வர முடியுமென்னு ஒழுங்கா வா. இல்லாட்டி வேறெங்கயாவது போய்த் தொலை.'' முதலாளி பொரிந்து கொட்டினுர்.

''இல்ல முதலாளி வந்......வந்து...''

''என்னடா வந்து...... சொல்லித் தொலையேன்.''

''முதலாளி எங்க உம்மாவுக்கு நேத்து இரவிலிருந்து சொகமில்ல ரொம்ப வருத்தம் முதலாளி. அதுக்கு......அதுக்கு மருந்து வாங்கிக் கொடுக்கனும். அஞ்சு ரூபா கடனுகத் தாங்கமுதலாளி. சம்பளத்தில் கழிச்சுக்கொங்க'' ஹமீத் தட்டுத் தடுமாறிக் கூறி முடித்தான்.

என்னிடம் எங்கடா பணம்? வானத்தால் கொட்டுதா? என்னிடமில்லை போ''

''தயவு செஞ்சி கருணை காட்டுங்க முதலாளி. நோயால துடிக்கிற உம்மாவுக்காக''

''என்னிடம் இல்லையென்று திரும்ப ஏன்டா கேட்கிற''

அவனது கண்களில் கண்ணீர் முட்டி நின்றது; நாத் தழுதழுத்தது; இரத்தம் கொதித்தது. தாயைக் காப்பாற்றத் துடிக்கிருன். அவனது இதயம் வேகமாகத் துடித்தது. ''ஓ... உங்களுக்கு இவ்வளவு கல் நெஞ்சமா முதலாளி. ஏழையின் வியர்வையும் கண்ணீரும் தான் உங்கள் பணம் என்பதை மறந்து விட்டீர்களா''?

''என்னடா சொன்னே? என்னை எதிர்த்துப் பேசும் அளவுக்கு உனக்கு என்ன துணிச்சல்?'' மறுகணம் ''பளார், பளார்'' அவன் கன்னத்தில் அறைகள் விழுந்தன.

ஹமீத் கன்னத்தைத் தடவினுன்; திரும்பினுன்; வீட்டை நோக்கி ஓடினுன்; அங்கே மீளாத்துயிலில் ஆழ்ந்திருந்த தாயைக் கண்டான்; கதறினுன்; கடமையை முடித்தான்; அனுதையான தை நினைத்துக் கலங்கிப் பித்தனுனுன்; பைத்தியம் பிடித்தவன் போல் ஓடினுன். ஓடினவன் தான் இன்று இளைஞனுகி, கணவனுகி, தந்தையாகி, இறுதியில் நோயாளியாகி இருக்கிருன்.

''என்ன யோசனை'' என்று கேட்டுக் கொண்டே ஹமீதா வருகின்ருள்.

''ஒன்றுமில்லை ஹமீதா. ஏதோ உம்மாவை நினைவு வந்திச்சு நான் இப்படி நிரந்தரமா படுத்துக் கொண்டேயிருந்தால் உங்களுக்கும் பிள்ளைக்கும்...'' ஹமீத் சொல்லிமுடிக்கவில்லை; சரிந்துவிட்டான். அவனுல் எதுவுமே பேசமுடியவில்லை.

உடனே ஹமீதா கார்க்கார முதலாளி அபூசாலியின் வீட்டை நோக்கி ஓடுகின்ருள். காரைக் கண்ட ஹமீதாவுக்கு டாக்டரை கண்ட திருப்தி. வெளி விருந்தையில் நிற்கும் அபூசாலியிடம் அவசர அவசரமாக சொல்லி முடிக்கிருள். அவளை விட அவசரமாக ''பெற்ருேல் இல்லை'' என்று கொண்டு உள்ளே செல்கிருன். அப்போது ஒரு கார் இடையில் வந்தது பின் கதவைத் திறவாத குறையாகக் கேட்கின்ருள். அவனும் மறுத்துவிட்டுச் செல்கின்ருன். இவையாவும், பணமிருந்தால்தான் சாதகமாக அமையும் என்பதை அவளுக்கு உணர்த்தின. இனியும் கையில் பணமின்றிக் கார் தேடினுல் கணவன் வழியனுப்பப்பட்டு விடுவானே என்று அஞ்சி திரும்புகிருள்.

வீட்டினுள்ளே நுழைகின்ருள். அங்கே...... கண்ட காட்சி......! அரைகுறையாகப் பொலிவு பெருமல் இருக்கும் மண் வெட்டி, கத்திகள் யாவும் தன் வாழ்வையே அரைகுறையில் விட்டுச் செல்லும் ஹமீதுக்காக கண்ணீர் சிந்தின, ஆனுல் ஹமீதாவினுல் அழவும் முடியவில்லை. ஒன்றையும் சிந்திக்கவும் முடியவில்லை. அவளை, குழந்தை அனீஸ் தன் அழுகையினுல் அழைக்கின்ருன்.

இங்கே குடிசையில் இப்படி நடக்க, அங்கே மாளிகையில் அபூசாலி ஓய்வு நேரத்தில் மேசையை அலசி ஆராய்கிருர். அப்போது அவர் கண்ணில் ஒரு சிறிய புத்தகம் தட்டுப்படுகிறது. அதிலிருந்த முத்துமணிகள் ஒவ்வொன்றையும் அவர் வாய் முணு முணுக்கிறது. ''செல்வ நிலையிலும், வறுமையிலும் தானஞ் செய்து, கோபத்தைக் கொன்று மன்னிப்போர் இறைவனுக்கு உகந்தவன்.'' ''விதவைகளையும் திக்கற்ற ஏழைகளையும் பாதுகாப்போர் இறைபாதையில் இடையருது தொண்டு புரிவோருக்கு ஒப்பாவார்.''

அவ்வாக்கியங்களை அவர் திரும்பத் திரும்ப உச்சரிக்கிருர். அவர் கண்களில் கண்ணீர் முத்துக்கள் ஓ...... நான் பாவி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அமுதமொழி சிறிது நேரத்திற்கு முன்பு என் காதில் ஏறவில்லையே... பணத்தின் போதையில் அதற்கு அடிமையாகி ஓர் ஏழையின் உள்ளத்தை நசுக்கி விட்டேனே ''மனம் ஓலமிட வெளியே வருகிறார்; காரில் ஏறுகிறார்; ஹமீதின் வீட்டின் முன் வந்து நிற்கிறார்; உள்ளே நுழைகிறார். அங்கே அவர் கண்ட காட்சி; மனம்'' ஐயோ ...! என்று கதறுகிறது. ஹமீதாவை நோக்கி, ''உம்மா.! உனக்கு என்ன உதவி வேண்டும்?''

ஹமீதாவின் தலை நிமிருகிறது. ''எனக்கா......? உதவியா.. ..? அல்லாஹ் செய்வான். உதவி கேட்டநேரம் செய்திருந்தால், ஓர் உயிரைக் காப்பாற்ற உதவியாயிருந்திருக்கும். ஆனால் இப்போதய உதவி, உயிரற்ற உடலை அனுப்பி வைக்கத்தான்.'' என்று சொல்லி உயிரற்ற அருமைக் கணவனைப் பார்க்கின்றாள். அப்போது சங்கிலித் தொடர்போல ஒவ்வொரு சம்பவங்களினதும் உணர்வுகள் அவர் உள்ளத்தைக் கீறிக் காயப்படுத்துகிறது. அதன் வலி தாங்க முடியாமல் அவரின் கண்களிலிருந்து கண்ணீர் பொசிகிறது. ஆனால் அது காலங்கடந்த கண்ணீராகத் தோன்றுகிறது ஹமீதாவுக்கு.

(யாவும் கற்பனை)

# " நல்லாசிரியன் "

''என் மகன் இனிப்புப் பண்டங்களை விரும்பி உண்கிறான் நாயகமே! அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. என்து புத்திமதிகள் எதுவுமே அவன் காதில் ஏறுவதில்லை. தாங்கள் தயை கூர்ந்து என் மகனுக்குப் புத்திமதி கூறித் திருத்துதல் வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டாள் அந்தத் தாய். நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தன் மகனைத் திருத்திவிடுவார்கள் என்ற நம்பிக்கை அந்தத் தாயின் முகத்தில் இழையோடியது.

அந்தத் தாயின் வேண்டுகோளை நபீகள் நாயகம் அவர்கள் மிக்க அனுதாபத்தோடு கேட்டுக் கொண்டார்கள். கேட்டவர்கள் சிறிது நேரம் மௌனமாகவே இருந்தார்கள்.

அந்தத் தாய் மீண்டும் கெஞ்சினாள்.

நபி முஸ்தபா (ஸல்) அவர்கள் தன் மௌனத்தைக் கலைத்துச் சொன்னார்கள் ''தாயே தங்கள் மகனுக்கு நான் உபதேசம் பண்ணுவேன். ஆனால் அடுத்த வாரம் அவனை அழைத்துக் கொண்டு என்னிடம் வாருங்கள்''

அந்தத் தாய்க்கு ஆச்சரியமாக இருந்தது! ஆனால் இறை தூதுவரிடம் அவர்களுக்கிருந்த நம்பிக்கையின் காரணமாக ஏதுமே பேசவில்லை. தன் மகனை அழைத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றாள்.

ஒரு வாரம் கழிந்தது.

அந்தத் தாய் தன் மகனை அழைத்துக் கொண்டு மீண்டும் நபி பெருமானிடம் வந்தாள்.

அன்று நபிகள் நாயகம் அச்சிறுவனுக்கு இனிப்புப் பண்டங்களை அதிகம் உண்பதினால் உண்டாகும் கேடுகளைப்பற்றி நீண்ட உபதேசம் செய்தார்கள்.

சிறுவன் உபதேசத்தைக் காதுகொடுத்துக் கேட்டுக் கொண்டிருந்தான். தாய்க்கோ பெருமானாரின் செய்கை பெருவியப்பை அளித்தது.

நாயகத்தின் உபதேசம் முடிந்ததும் அந்தத் தாய் பெருமானாரிடம் கேட்டாள். ''நாயகமே இந்த உபதேச மொழிகளைச் சென்ற வாரம் அருளியிருக்கலாமே? ஒரு வாரம் கழித்து உபதேசித்ததன் காரணத்தை நான் அறியலாமா''?

இறை தூதரவர்கள் அமைதியாகச் சொன்னார்கள்.

''தாயே! தாங்கள் முதலில் கேட்டபோது நானே அதிகம் இனிப்புப் பண்டங்களை உண்பவனாக இருந்தேன் ஆகவே இனிப்புப் பண்டங்களை அதிகம் உண்ணாதே என்று உபதேசிக்கும் தகுதி என்னிடம் இருக்கவில்லை. இப்போது நான் அப்பழக்கத்தை விட்டுவிட்டேன். ஆகவே உபதேசிக்கும் தகைமை இப்போது எனக்கு வந்துவிட்டது.''

அந்தத் தாயின் கண்கள் பனித்தன.

— எம். ஐ. எம். மஸ்ஹூர்

நன்றி: ''அன்னை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாத்தில் ஆசிரியப் பணி

( எப், ஏ. ஷரிப்தீன் )
( ஏகுவருடம் — கைவினை )

" நீங்கள் கற்பவராயிருங்கள். அல்லது கற்றுக் கொடுப்பவராயிருங்கள். அல்லது கேட்பவராயிருங்கள். நான்காவது பேர்வழியாய் இருக்கவேண்டாம். " என்ற பெருமானாரின் பொன்மொழிக்கிணங்க கற்றுக் கொடுக்கும் பணியை மேற்கொண்டிருக்கும் ஆசிரியர்களாகிய நாம் நமது பணி மகத்தானது, என்பதை உணர வேண்டும். ஓதுவித்தற்பணி எல்லோர்க்கும் வாய்க்குமொன்றல்ல. பரிசுத்தமான அப்பணியைச் செய்யும் வாய்ப்பைப் பெற்றவர்கள் பாக்கியவான்களாவர். மக்களின் உடல், உளம் ஆன்மா ஆகிய முப்பெரும் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவர்கள் ஆசிரியர்கள். நமது கையில் ஒப்புவிக்கப்படும் சின்னஞ்சிறு பாலகர்களின் எதிர்கால வாழ்விற்கு வித்திடுபவர்கள் நாம், மிகப்பெரும் உத்தரவாதத்தை ஏற்றுக் கொண்டிருக்கும் நாம் எமது பணியைச் செவ்வனே செய்து இறையருளைப் பெற முயற்சிக்க வேண்டும்.

இன்று மாணவர்கள் எம்மதத்தினரோ அம்மதத்தைச் சார்ந்த ஆசிரியர்களால் அவர்கள் கற்பிக்கப்படவேண்டும் என்ற நியதி ஏற்பட்டிருக்கின்றது. காரணமுமுண்டு. பெயரளவில் ஆசிரியர்கள் அம் மதத்தைச் சார்ந்தவர் என்றிருந்தால் மட்டும் இந்நியதி நிறைவு செய்யப்படமாட்டாது. உண்மையில் சமயப்பற்றும் சமய அனுட்டானமுமுள்ள ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டால் மாத்திரமே அது நிறைவு செய்யப்படலாம். ஆசிரியர்கள் தத்தம் சமய அறிவும், சமயாச்சாரமும் உடையராயிருத்தல் அத்தியாவசியமாகும். பின்பற்றும் சுபாவம் பிள்ளைகளிடமுண்டு. " குரு எவ்வழி சிஷ்யனும் அவ்வழி " என்பது முதுமொழி. கற்பிக்கும் ஆசிரியரின் நடையுடை பாவனைகளனைத்தையும் அவர் தம் மாணவர்கள் அவதானிக்கிறார்கள் என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை. இன்று பெரும்பாலான பெற்றோர்கள் வளர்ந்துவிட்ட தங்கள் பிள்ளைகளின் நடைமுறைகளைக் கண்டு வெட்கமும், துக்கமும் ஏக்கமும் அடைந்திருக்கிறார்கள் என்பது கண்கூடு. இந்நிலைமை வளர்ந்துவரும் பிள்ளைகளிடையேயும் ஏற்படலாகாதென்று பெற்றோர் ஆசைப்படுவதில் வியப்பொன்றுமில்லை. பெற்றோரின் இந்த ஆசையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்யும் மிகப் பெரும் பொறுப்பு இன்றுள்ள ஆசிரியர்களின் தலையில் சுமத்தப்பட்டுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு ஆசிரியர்கள் தம் பணியை மேற்கொள்ளுதல் வேண்டும். எழுத்தறிவிக்கும் அளவில் தம்பணி முடிந்துவிட்டதாக ஆசிரியர்கள் எண்ணுவார்களானால் அவர்களை நாம் கடமையுணர்ச்சியுள்ள ஆசிரியர்கள் என்று கருதுவதற்கில்லை.

சமய அடிப்படையில் வழங்கப்படும் சகல உரிமைகளையும் வற்புறுத்திப் பெற்றுக் கொள்ள முயலும் ஒரு ஆசிரியர் தமது கடமையைச் செய்வதிலும் கண்டிப்பாயிருத்தல் வேண்டும். கடமையைக் கைவிட்டு உரிமைக்கு மட்டும் போராட எண்ணுவது பொருத்தமற்றதாகும். அதே வேளையில் தான் பெற்றிருக்கும் உரிமைகள் மத அடிப்படையில் வழங்கப்பட்ட உரிமைகள் என்பதையும் அவர் மறந்துவிடவொண்ணுது. தான் சார்ந்துள்ள சமுதாயப் பண்பாட்டைக் கைவிட்ட ஒரு ஆசிரியர் மாணவர்களைக் கற்பிப்பதும், அல்லாத ஒரு ஆசிரியர் கற்பிப்பதும் ஒன்றுதான். இக்கருத்தினை ஒவ்வொரு ஆசிரியரும் அழுத்தந்திருத்தமாக மனதிற் பதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

பெருமானார் (ஸல்) அவர்களும் ஒரு ஆசிரியரே ஆவார்கள். பெருமானார் ஒரு வெறும் உபதேசியாக மட்டும் இருக்கவில்லை. மக்களுக்கு எவற்றை உபதேசித்தார்களோ அவற்றையெல்லாம் தம் வாழ்க்கையில் செய்பவராயிருந்தார்கள். தாம் செய்யாதவொன்றைப் பிறருக்கு ஏவினுர்களல்லர். பெருமானுரைப் பின்பற்றிய இஸ்லாமிய ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் பெருமானுர் (ஸல்) அவர்களின் நடைமுறைகளை இயன்றவரைப் பின்பற்ற முயற்சித்தல் வேண்டும். இருமை வாழ்விற்கும் ஏற்ற போதனைகளையே பெருமானுரவர்கள் உபதேசித்தார்கள். அஃதே போன்று இஸ்லாமிய ஆசிரியர்களும் தம்மிடம் ஒப்புவிக்கப்பட்ட பாலகர்களின் இருமை வாழ்க்கைக்கும் பயன்படக்கூடிய போதனைகளை உபதேசிப்பதோடமையாது அன்னரை வழி நடாத்திச் சென்று தம்பணியை நிறைவு செய்யும் விதத்தில் கடமையாற்ற வேண்டும்.

## 'பூவரசம் பூ'விலிருந்து ஒரு கவிதை

எரியும் நெருப்பில் வீழ்ந்திட்ட
ஈசல் சொல்லும் கதையைக்கேள்

ஒரு கணந்தான் என்முலும்
உலக வாழ்வில் விருப்பைத்தா

கருகும் எனது புன் சடலம்
காலையரும்பும் போதெனினும்

இரவு முழுவதும் போராட
இறைவா எனக்கு வலுவைத்தா

— மூலம் மகாகவி அல்லாமா இக்பால்
தமிழுருவம் :— வ. அ. இராசரத்தினம்

நன்றி :— ''கர்பலா''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கக் கட்டுரை

# ஜாமிஆ நழீமிய்யா ஓர் அறிமுகம்

எஸ். எம். பளீல், பீ. ஏ. (ஆனர்ஸ்)

(பொருளியல், புவியியல் துறை விரிவுரையாளர்)

''ஜாமிஆ நழீமிய்யா,' கலா பீடம் தோற்றுவிக்கப்பட்டு ஏறக்குறைய இரண்டாண்டுகள் கடந்து விட்டன. 1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19 ம் திகதி மாண்புமிகு கல்வி அமைச்சர் அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் அவர்களால் இஸ்லாமிய சம்பிரதாய முறைப்படி இந்த நிறுவனம் திறந்துவைக்கப்பட்டது. பதினெட்டு ஏக்கர் பரப்பளவினைக் கொண்டுள்ள இத்தாபனம் அடக்கமான வளாகத்திற்குரிய அமைப்புக்களை கொண்டிலங்குகின்றது. பேருவலை நகரில் இருந்து உள்நோக்கி, சந்தடியற்ற அமைதியான இடத்தில் அமைந்துள்ள இக்கலைக் கூடம் அறிவினை அள்ளி வழங்குவதற்கான சகல இயற்கை வசதிகளையும் கொண்டிருக்கின்றது என்று தான் கூறுதல் வேண்டும். 'பேருவலை' என்ற பெயரை நாம் உச்சரிக்கின்றபோது ஈழத்து முஸ்லிம்களின் வரலாற்றின் தோற்றம் எமது கண்முன் தோன்றுகின்றது. அராபிய முஸ்லிம்கள் முதன் முதல் வந்து குடியேறிய இந்தப் புண்ணிய பூமியில் ஈழத்து இஸ்லாமியரின் மறுமலர்ச்சியினை எடுத்தியம்பும் இந்தக் கலா பீடம் அமையப் பெற்றிருப்பது சாலவும் பொருத்தமான ஒன்றாகும்.

ஜாமிஆவின் கட்டட அமைப்பு இஸ்லாமிய சிற்பக்கலைகளுடன் கூடியதாயும் காணப்படுகின்றது. சிறப்பாக பள்ளிவாசல் புதுமையுடனும், கலை அழகுடனும் மிளிர்கின்றது. மேலும் விரிவுரை மண்டபங்கள், மாணவர் விடுதிகள், நூலகம், ஆசிரிய விடுதிகள், சகல வசதிகளுடனும் கூடிய விளையாட்டுத்திடல் என்பனவற்றையும் இக்கலையகம் கொண்டமைந்திருக்கின்றது. தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் புதுமுறையிலான மகாநாட்டு மண்டபம் ஜாமிஆவின் கட்டட அமைப்புகளுக்கு புது மெருகூட்டுவதாக அமையவிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் வகுப்பில் சித்தியடைந்த 26 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட ஜாமிஆ இன்று சுமார் 79 மாணவர்களைக் கொண்டுள்ளது. க. பொ. த. சாதாரண பரீட்சையில் சித்திபெற்று, உயர்தர வகுப்பில் பயிலுவதற்கான தகைமை படைத்த ஆகக் கூடுதலான 30 மாணவர்கள் ஒவ்வொரு வருடமும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். இவ்வாறு சேரும் மாணவர்கள் ஏழு வருடங்கள் தமது பயிற்சியினை இங்கு மேற்கொள்வர். பயிற்சியினை முடித்து வெளியேறுகின்ற போது இஸ்லாமிய ஞானத்துடன் கூடிய பட்டதாரிகளாக தேர்ச்சி பெறும் வகையில் ஜாமிஆவின் படிப்பு நெறியானது, வகுக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாபனத்தின் தோற்றத்துக்கான காரணமும், நோக்கமும், இதுவரை காலமும் இலங்கையில் தோற்றம் பெற்ற கல்லூரிகளினதும், மதுரஸாக்களினதும் குறிக்கோள்களில் இருந்தும் வேறுபட்டதாக அமைந்துள்ளது. இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில் சமூகத்தை வழி நடாத்தக் கூடிய சிறந்த அறிஞர்களை உருவாக்குவதே இதன் அடிப்படை நோக்கமாகும். எமது நாட்டில் இன்று பரவலாக அமைந்திருக்கும் மதுரஸாக்களின் பணி ஒரு எல்லைக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதனை நாம் அவதானிக்கலாம். இதனால்தான் இஸ்லாத்தினைப் பற்றியும், சமூகத்தினைப் பற்றியும், எழுப்பப்படும் தர்க்கரீதியான, அறிவியல் சார்பான கேள்விகளுக்கு இந்த உலமாக்கள் பதிலளிக்க முடியாது ஒதுங்கி நின்று வருகின்றனர். இதேபோன்று மார்க்க அறிவில்லாமல் உலகக் கல்வியினை மட்டும் போதித்து வருகின்ற குறிப்பிட்ட வரம்புகளுக்குட்பட்ட இஸ்லாமியக் கல்லூரிகள் மதக் கோட்பாடுகளிலும், அது சம்பந்தமான பிரச்சினைகளிலும், தீர்வுகளைக் காண இயலாது தத்தளிக்கின்றன. எனவே தான் எமது சமுதாயம் இன்று எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை மேற்கூறிய வகையில் அமைந்த மதுரஸாக்களோ அல்லது கல்லூரிகளோ தீர்த்து வைப்பதற்கு தகுதியற்ற முறையில் காணப்படுகின்றன என்ற உண்மை நன்கு புலனாகின்றது. அடிப்படையில் நாட்டில் உள்ள சகல நிறுவனங்களுக்கெல்லாம் தலைமைப் பீடமாக இயங்கி அவற்றையும், ஒன்றிணைந்த வகையில் சமுதாயத்தை வழி நடதித்ச் செல்லக் கூடிய சிறந்த அறிஞர்களையும், தலைவர்களையும், உருவாக்குவதே இக்கலா பீடத்தின் தோற்றத்துக்கான அடிப்படை நோக்கமாகும்.

மேற்கூறிய வகையிலான பாரிய பொறுப்பினை இக்கலா பீடம் கொண்டிருப்பதனால் தான் இதன் திட்டங்களும் பயிற்சி நெறிகளும் விரிவான முறையில் வகுக்கப்பட்டுள்ளன. எமது சமூகத்தில் உலமாக்களாக மார்க்க அறிவினைப் பெற்றவர்கள், பொது அறிவின் நின்றும் தூர நின்று கொண்டிருக்கின்றனர். இதே போன்று பொது அறிவினை மாத்திரம் பெற்று பெரும் பெரும் பதவிகளை வகித்து வரும் அறிஞர்கள், இஸ்லாமிய முறையில் நின்றும், அப்பால் சென்றுகொண்டிருக்கின்றனர், இந்த வகையில் இரு துருவங்களில் நின்றுகொண்டிக்கும் இம்மக்களை ஒன்றிணைத்து இஸ்லாத்தின் கோட்பாட்டின்பால் வழி நடாத்தி சீர்திருத்தத்தை ஏற்படுத்த வேண்டியது சமுதாயத்தை இன்று எதிர்நோக்கியுள்ள மிக முக்கிய பணியாகும். எனவே இந்தப் பெரும் பணியினை, இருப்பணியினைத்தான் ஜயமிஆ கலைக் கூடம் தனது பிரதான தொழிலாகக் கொண்டுள்ளது. இதனால்தான் உலகியற் கல்வி முறையும் மதஅடிப்படையிலான கல்வியும் ஒருமித்தவகையில், அங்கு அளிக்கப்படுகின்றது. இஸ்லாமும் அறிவின் வளர்ச்சிப்படியில் உலகக் கல்விவேறு மார்க்கக் கல்விவேறு என்ற பாகுபாட்டினை பெரிது படுத்திக் கூறவில்லை. இஸ்லாத்திலும்அறபு மொழியிலும் மாணவர் சிறந்த தேர்ச்சியைப் பெறுவதற்காக அறபு மொழி, அறபு இலக்கணம், தப்ஸீர், இஸ்லாமிய சரித்திரம், இஸ்லாமிய நாகரீகம், அல் பிக்உற், அல் இன்ஷா, அல் உறதீஸ், அகீதா போன்ற பாடங்கள் போதிக்கப்படுகின்றன மாணவர்களுக்கு அறபு மொழி தேர்ச்சிக்காக மதுரஸாக்களின் முறைகள் போலன்றி நவீன முறைகள் போதனைகளில் பின்பற்றப்படுகின்றன. மாணவர்களின் உலகியல் கல்வியினையும், படப்பிடிப்பினையும், சிந்தனை வளர்ச்சியினையும், கருதிப் பொருளியல் புவியியல், கணிதம், தமிழ், விவசாயம் போன்ற பாடங்களும் போதிக்கப்படுகின்றன. மேலும் உலகியல் நாளாந்தம் ஏற்பட்டுவரும் பல்வேறுதுறை சார்பான பிரச்சினைகளை இஸ்லாமிய கண்ணோட்டத்துடன் மாணவர்கள் அணுகி ஆராய்ந்து வருகின்றனர்.

மேற்கூறிய பாடங்களுடன் வேறுபட்ட நான்கு மொழிகளையும், மாணவர் கற்று வருகின்றனர். இந்த நாட்டில் அரச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும மொழியாக விளங்கும் சிங்களத்தில் இஸ்லாத்தினைப் பற்றி நூல்களும், தகவல்களும் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன, இதனால் அன்னிய மக்களுக்கு எமது கோட்பாடுகளையும், கருத்துக்களையும் புரியவைக்க முடியாத துர்ப்பாக்கிய நிலையில் நாம் இருக்கின்றோம். எனவேதான் சிங்கள மொழியில் சிறந்த தேர்ச்சியினைப் பெற்று அதில் ஆக்கங்களை வெளியிடுவதற்கு அம்மொழியில் போதிய பயிற்சி அளிக்கப்படுகின்றது. சிங்கள மொழியில் இஸ்லாமிய வெளியீடுகளைச் செய்யும் பணியினை நழீமிய்யா இஸ்லாமிய கலா பீட நிறுவன சங்கத்தின் கீழுள்ள 'வெளியீட்டு சபை' மேற்கொள்ள இருப்பது இங்கு குறிப்பிடக்கூடிய அம்சமாகும். ஈழத்தில் வாழும் முஸ்லிம்களில் பெரும்பான்மையினர். பேசும் மொழியாக தமிழ் இருப்பதினால் ஜாமிஆவின் போதனை மொழியாக இருப்பதுடன் இதுமாணவர்களின் தமிழ் மொழி ஆற்றலை வளர்ப்பதற்கும், ஊக்கம் அளிக்கப்படுகின்றது. இஸ்லாமியர்கள் தாம் இழந்த கலாச்சாரப்பெருமைகளினையும், பண்பாட்டினையும், மீண்டும் பெற்றுக்கொள்வதற்கு துணைசெய்யக்கூடிய ஒரே ஒருசாதனம் அறபு மொழியும் அதனோடு கூடிய படைப்புக்களுமேயாகும். இதனால் இம்மொழியில் போதிய கவனம் செலுத்தப்படுவதுடன் ஜாமிஆவின் பயிற்சிக் காலத்தின் இறுதி வருடங்களில் அறபு மொழியே போதனை மொழியாகக் கொள்வதற்கும், திட்டமிடப்பட்டுள்ளது. இதேவகையிலான முயற்சிகள் ஆங்கில மொழியிலும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தரீதியில் பல்வேறுபட்ட தொழில்களைப் பயிலுவதன் மூலம் எந்த தொழிலிலும் இஸ்லாமிய கோட்பாடுகளையும், கருத்துக்களையும் எடுத்து விளக்குவதற்கு போதிய ஆற்றலை மாணவர்கள் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த விடையங்களினைத் தொகுத்து நாம் நோக்குகின்ற போது இங்கு பயிலும் மாணவர்களின் கடமையும், பொறுப்பும் நன்கு தெளிவாகின்றது. சகல துறைகளிலும் கூடிய சுமார் 17 பாடங்களினை தற்போது பயின்று வருகின்றார்கள். அதிகாலை 'தஹஜ்ஜத்' தொழுகையுடன் தமது கடமைகளை ஆரம்பிக்கும் மாணவர்கள் இரவில், தூங்கப் போகும் நேரம் வரையிலும் மேற்கொள்ளும் கடமைகள் சிறப்பான முறையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. அறிவு வளர்ச்சிக்காக மேற்கூறிய வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது, போன்று மாணவர்களின்உடல்நலத்திலும் தேகாரோக்கியத்திலும், வவர்ச்சியினைப் பெறுவதற்காக உடற் பயிற்சிகளும், இஸ்லாம் அனுமதிக்கும் வகையிலான விளையாட்டுக்களுக்கும், இடம் பெற்று வருகின்றன இந்தரீதியில் மாணவர்களுக்கான சகல வசதிகளும் சிறப்பான முறையில் செய்து கொடுக்கப்பட்டு அறிவு வளர்ச்சியில் அவர்கள் தமது முழுக்கவனத்தையும் செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை இங்கு சிறப்பான அம்சமாகும்.

மாணவர்கள் தமது மொழியாற்றல் பேச்சுத்திறன், எழுத்துப் பயிற்சி என்பனவற்றை சிறப்பாக விருத்தி செய்யும் பணியில் ஜாமிஆவின் மாணவர் மன்றம் தொடர்ந்தேர்ச்சியான முறையில் இயங்கி வருகின்றது. இதனூடாகப் பேச்சு, கவிதை, விவாதம் பொது அறிவு போன்றவற்றில் போதிய பயிற்சியானது அளிக்கப்படுகின்றது. மாணவர்களிடையே எழுத்தார்வத்தை ஏற்படுத்தும் நோக்குடன் ''அல்—பிக்ர்' (சிந்தனை) என்னும் பெயரில் இயங்கிவரும் 'சுவரொட்டிப் பத்திரிகை' உலகில் பல பாகங்களிலும் நாளாந்தம் நடைபெறும் விடையங்களில் மாணவர்களின் கவனத்தை ஈர்த்து வருகின்றது. இவ்வகையான ஏற்பாடுகள் எதிர்காலத்தில் சமுதாயத்தினை நலமை தாங்கி வழிநடாத்தி செல்லவிருக்கும் இம்மாணவர்களின் ஆற்றல்களை வளர்க்கும் நோக்குடன் செயற்படுத்தப்படுகின்றன. மேற்கூறிய வகையிலான கடமைகளையும், பாடத்திட்டத்தினையும், மாணவர்களுக்கு வழிப்படுத்துவதற்காக சிறந்த ஆசிரியர் குழுவினையும் ஜாமிஆ கொண்டுள்ளது. ஒவ்வொரு துறைகளிலும் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களைக் கொண்டு போதனைகள் நடாத்தப்படுகின்றன. இஸ்லாமிய உலகின் இருபெரும் சர்வகலாசாலைகளான கெயிரோவின் அல்—ஹரிலும், இந்தியாவின் லக்னோவில் உள்ள 'நத்வாவிலும்' பயின்று முதிர்ந்த அறிவினைப் பெற்ற ஒரு அறிஞரை இந்தக் கலா பீடம் அதிபராகக் கொண்டிருப்பது எல்லாவற்றிக்கும் சிகரம் வைத்தாற் போலமைந்திருக்கின்றது.

அறிவு வளர்ச்சியில் நூலகங்களும், வாசிகசாலைகளும், சிறப்பான இடத்தினைப் பெறுகின்றன. ஜாமிஆ தனது நோக்கத்தை அடைவதில் இவையே இணைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று துணைபுரிவாக இருப்பதினால் இதற்காக விரிவான திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமான இருமாடிகளுடன் கூடிய அடக்கமான நூல் நிலையம் தற்போது இயங்கி வருகின்றது. இத்துடன் இஸ்லாமிய ஆராய்ச்சிக்கும், மேற்படிப்புக்கும் உதவப் பொது நூல் நிலையமொன்றும், நிறுவப்பட உள்ளது. இந்த நூல் நிலையம் இஸ்லாமிய கலாச் சாரம், பண்பாடு, நாகரீகம் போன்ற பலவேறு துறைகளிலும் ஆராய்ச்சிக்கான வசதிகளைக் கொண்டிருக்கும். ஈழத்து முஸ்லிம்களுக்கு மட்டுமன்றி அயல் நாட்டு முஸ்லிம் மக்களுக்கும், சிந்தனை வளர்ச்சிக்குரிய களமாக இந்த நூல் நிலையம் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜாமிஆவின் வளர்ச்சி கருதியும், எதிர்காலத்தில் மேலும் பல திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. இதில் தொழில் கல்வியின் அறிமுகம் பிரதானதோர் ஏற்பாடாகும். இந்த வரிசையில் தற்போது விவசாயம் செயல் முறைகளுடன் போதிக்கப்படுகின்றது. மாணவர்களுக்கு இறுதி ஆண்டுகளில் தொழில்நுட்பக் கல்விப் பயிற்சிகளும், கணக்கியல், தட்டச்சு, சுருக்கெழுத்து போன்றனவும், அறிமுகப்படுத்தப்பட விருகின்றன.

எமது சமூகத்தினைப் பீடித்து வரும் வறுமையும் சிக்கல்களுமே கற்றறிந்த உலமாக்களை தனித்தன்மையுடனும், நம்பிக்கையுடனும், நின்று இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில் சமூகத்தை வழி நடாத்திச்செல்லுவதற்கு தடைகளாக அமைந்திருக்கின்றன. எனவே தான் மேற்கூறிய தொழிற் பயிற்சி ஏற்பாடுகளின் மூலம் அரசாங்க உத்தியோகத்தில் மாத்திரம் தாங்கி நின்று தனது தனித்துவத்தையும், நம்பிக்கையையும், நெகிழ்ந்து கொடுக்கும் ஆபத்தான நிலையிலிருந்து ஜாமியஆ உருவாக்கும் அறிஞர்களைப் காப்பாற்றுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில் இஸ்லாம் அனுமதித்த முறையில் இயன்றளவு சுய முயற்சிகளுடன் கூடிய தொழில்களில் ஈடுபடும் அதேவேளையில் சமூகத்திற்கும் நாட்டிற்கும் சேவையாற்றக் கூடிய தலைவர்களை உருவாக்குவதையே இக்கலா பீடம் தனது இலக்காகக் கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசம்பரில் நடந்தேறிய க. பொ. த. சாதாரண பரீட்சையில் ஜாமிஆ மாணவர்கள் காட்டிய வெற்றி இக்கலா பீடத்தின் ஒளிமிக்க எதிர்காலத்தினை எடுத்தியம்புவதாக அமைந்துள்ளது. அறபு மொழி, இஸ்லாமிய படிப்பு நெறிகள், வேறு நான்கு மொழிகள் என்பனவற்றைப் பயிலும் பெரும் பொறுப்புக்களுடன்தான் மேற்கூறிய பரீட்சைகளுக்குரிய பாடங்களையும், கற்று மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றினர். பரீட்சைக்குத் தோற்றிய 26 மாணவர்களுள் 24 பேர் சித்தியடைந்ததுடன் அதிலும் பெரும்பாலானவர்கள் உயர்தர வகுப்பில் பயிலக் கூடிய தகுதிகளைப் பெற்றனர். அறபு மொழியில் ஒரு அச்சரமும் கூடத்தெரியாமல் அனுமதியினைப் பெற்ற மாணவர்கள், குறுகிய காலத்தில் பயின்று, விஷேட சித்திகளுடன் அப்பாடத்தில் தேர்ச்சி பெற்றிருப்பது ஜாமிஆவின் நோக்கங்களையும், இதன் இலக்கினையும் மேலும் பலப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது.

எனவே மேற்குறியவாறு விரிவான முறையில் வகுக்கப்பட்டுள்ள ஜாமிஆவின் செயற்திட்டங்கள் இதுவரை காலமும் ஈழத்து முஸ்லிம் சமுதாயத்தில் ஏற்பட்டு வந்த இழிவு பட்ட நிலையினை சீர்ப்படுத்தும் நோக்குடன் அமுல் நடத்தப்பட்டு வருகின்றன. இன்று அன்னிய மதத்தவர்களாலும், எமது சமயத்தவர்களாலும் இஸ்லாத்தினைப் பற்றி எழுப்பப்பட்டுவரும் பிரச்சினையான கேள்விகளுக்கும், தர்க்கங்களுக்கும், இக்கலா பீடமே சிறந்த முடிவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இஸ்லாமியர்கள் எவ்வாறு தமது கலை, பண்பாடுகளை உலக நாகரிக வளர்ச்சிக்கு அளிப்பதில் முன்னோடிகளாக விளங்கினார்களோ அந்த இடத்தினையும் முன்னோடி நடவடிக்கைகளையும், மீண்டும் ஜாமிஆவே அளிக்க வேண்டுமென ஈழத்தில் வாழும் சிந்தனை உள்ள ஒவ்வொரு முஸ்லிமும் கற்பனை செய்துகொண்டிருக்கின்றனர். ஈழத்துக்கு மட்டுமன்றி தென்கிழக்காசியாவுக்கே இஸ்லாமிய ஞானத்தினையும் ஒளியினையும், பரப்பும் மத்திய நிலையமாக ஜாமிஆ விளங்குதல் வேண்டுமென்பதே இதனை உருவாக்கியவர்களின் ஒரே ஒரு அபிலாஷையுமாகும். எனவே ஜாமிஆ இதே வளர்ச்சியுடன் எதிர்கால நோக்கங்களை அடைவதற்கு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமானாரின் போதனையும் சாதனையும்

★ ★ ★ ★ ★

"நபியே இறைவன் நாமம் கொண்டு எடுத்தியம்புக. அவனே மனிதனை வெறும் இரத்தக்கட்டியில் இருந்து சிருஷ்டித்தான். கண்ணியம் வாய்ந்த அவ்விறைவனே மனிதன் அறியாதவற்றைக் கற்பித்தான்''. என 'ஹிரா' மலைக்குகையில் ஓரிரவு நடுப்பகுதியில் ஜிப்ரியீல் மூலமாக இஸ்லாமிய போதனையை ஆற்றும்படி எம்பெருமானார் கடமைப்படுத்தப்பட்டார்கள். நதிக்கரைகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் நாகரிகம், பண்பாடு ஒழிந்து மக்கள் வாழ்ந்தனர். குறிப்பாக பாலைவனத்தைக் கொண்ட அரபுப்பிரதேசம் இந்நிலையில் உன்னதம் பெற்றிருந்தது. அறியாமையின் கோரப் பிடியிலிருந்து அகல்வதற்கு அக்கால மக்கள் விரும்பவுமில்லை. அவர்களால் முடியவுமில்லை. அறியாமைக்கொடிய நோயினால் பீடிக்கப்பட்ட மக்களுக்கு நாகரீகமான வாழ்க்கையும் அறிவொளியும் பிணி தீர்க்கும் மாமருந்தாக பயன்படுத்தப்பட்டன. இறைவனின் உயர் நோக்கில் அமைந்த அறிவுரைகள் மேலுலக மோட்சத்தின் அடிப்படையில் மனிதனை செம்மையான வாழ்க்கையில் இட்டுச் செல்வதற்குப் பயன்படுத்தப் பட்டன.


**அ. கா. சைபுத்தீன்**
(ஏகுவருடம்—உடற்கல்வி)


சாதிக்க முடியாத போதனையும் போதிக்க முடியாத சாதனையும் இஸ்லாமிய அமைப்பில் இல்லை. உயர் நோக்கும், மேல் இலட்சியமும் உள்ள சான்றோர்களால் ஆராயப்பட்ட எம் பெருமானாரின் போதனை உலகம் எத்தனை கோடி ஆண்டுகள் இருப்பினும் அக்காலத்துக்குள் எழும் சகல சிக்கல்களையும் தீர்க்கும் உயர் பெரும் மாமருந்தாக வாழ்ந்திருக்கும்.

ஏறக்குறைய 23 ஆண்டுகள் சொல் ரீதியாக—செயல் ரீதியாக போதிக்கப்பட்ட கூற்றுக்களே இன்றைய இஸ்லாமிய அடிப்படைக் கருத்துக்களாகும். இப்போதனை இரு பெரும் காலகட்டங்களில் நடாத்தப்பட்டது. முதலாவது பகுதி ஏறக்குறைய 13 ஆண்டுகள் கொண்ட மக்காக் காலமாகும். அக்கால போதனை ஏகத்துவத்தை அடிப்படையாக் கொண்டு ஒருமைப்பாட்டுக் கொள்கைகளாக அமைந்தது.

பணத்திலும், செல்வாக்கிலும், புத்திக்கூர்மையிலும் மேம்பட்ட சிலர் விலைமதிக்க முடியாத மனிதத்தன்மையைத் தனது தந்திரத்தினால் அடிமைப் படுத்தினர். பாரம்பரியமாகக் கொள்ளப்பட்டு வந்த மூடப் பழக்கங்கள் மனிதனின் அறிவீனத்தினால் செழிப்பாக வளர்க்கப்பட்டன. கற்சிலைகளும், வெறும் உருவங்களும் தெய்வ நிலையை பெற்றமை இதனாலேயாம். இந்நிலையை ஒழிக்கு முகமாக அமைந்த கண்டனக் கணை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களே ஏகத்துவக் கோட்பாடாகும். இப்போதனையின்போது அறியாமையின் அடிப்படையில் அமைந்த அரசாங்கமும், ஆட்சி வல்லவர்களும் இப்போதனையை கடூரமாகக் கண்டிக்கலாயினர். இக்கண்டனம் நாயகத்தின் போதனையை எள்ளளவேனும் மாற்றவோ திருத்தவோ அழிக்கவோ இல்லை. மாறாக போதனையை மட்டுமன்றி சாதனையும் மேல் நோக்கித் தள்ளும் ஓர் ஊக்கியாக அமைந்தது. எவ்வளவுக்கு ஆட்சியாளரின் கண்டனம் பலமாகியதோ அவ்வளவுக்கு எம்பெருமானாரின் போதனையில் விரைவான இஸ்லாத்தின் வளர்ச்சி எண் ரீதியில் மட்டுமல்லாது பண்புரீதியிலும் பலம் பெற்று செழிப்புற்றது. மதீனக் காலத்தில் நுபுவ்வத் 11ம் 12ம் ஆண்டுகளில் மக்காவிலுள்ள 'உக்காஸ்' என்னும் சந்தையில் நாயகத்தால் ஆற்றப்பட்ட பகிரங்கப் பிரசங்கங்கள் பொதுவாக உலக நாடுகளிலும் குறிப்பாக அந்நாடான மதீனாவிலும் இஸ்லாத்தைப் பற்றிய ஒரு நல்லெண்ணத்தை ஏற்படுத்தின. மேற்கூறப்பட்ட வருடங்களில் ஹஜ் வணக்கத்துக்காக வந்த மதீனா வாசிகள் நாயகத்தின் போதனையின் உண்மையையும் மகிமையையும் உணர்ந்தனர். நாடு திரும்பிய இம் மக்கள் நாயகத்தின் பிரதிநிதிகளைப் போன்று தாமும் பிரசாரத்தை மேற்கொண்டனர்.

7—ம் 8—ம் 9—ம் நூற்றாண்டுகளில் மத்தியதரைக் கடலை அண்டிய பகுதிகளிலும் இஸ்லாமிய நாகரீகத்தினுள் செம்மையான வாழ்க்கையொன்றை மேற்கொண்டனர். ஆட்சித்துறையைப் பொறுத்தவரையில் செம்மையான மக்களாட்சியொன்று இப்பகுதியில் ஏற்படுத்தப்பட்டது. எம்பெருமானார் (ஸல்) அவர்களின் சாதனைகளின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட இவ்விஸ்லாமிய ஆட்சியமைப்பு அரசியல் அறிஞர்களால் செம்மையானது என உறுதிப்படுத்தப்பட்டு வந்துள்ளது. வெறும் பாலைவனத்தில் தொடங்கி வைக்கப்பட்ட இவ்வாட்சி கொள்கையில் ஏற்பட்ட கவர்ச்சியின் காரணமாக மேற்கில் இஸ்பைன் வரையும் கிழக்கில் சிந்துநதி வரையும் ரஷ்யாவின் எல்லைகளான தாஸ்கான், சமஸ்கந்து வரையும் மக்களால் கவர்ந்துகொண்டு செல்லப்பட்டது.

கல்வி நிலையில் உலகம் முழுவதும் இருள் சூழ்ந்திருந்த சமயமே இஸ்லாம் தோன்றியது. நாயகம் (ஸல்) அவர்களின் போதனைகளின் பிரதிபலிப்பே 12ம் நூற்றாண்டில் கார்டோவாவில் ஏற்படுத்தப்பட்ட 'அல்ஹம்ரா' சர்வகலாசாலையாகும். இருள் சூழ்ந்த காலமென ஐரோப்பியரால் வர்ணிக்கப்படும் இக்கால கட்டத்தில் ஸ்பையினிலுள்ள முஸ்லீம் மாணவர்கள் அல்ஹம்ரா சர்வகலாசாலையில் உயர் படிப்புகளையும் ஆராய்ச்சிகளையும் மேற்கொண்டனர். சுருங்கக்கூறின் மேற்கு நாடென்ன கிழக்கு நாடென்ன, முறைமையான கல்வித்தீபம் எம்பெருமானாரின் போதனையின் விளைவாகவே தோற்றுவிக்கப்பட்டது.

நீதியின் சின்னமாகவும் நேர்மையின் எடுத்துக்காட்டாகவும் சிப்பிக்குள் முத்துப் போல வறண்ட கொள்கையுடைய அறபு சமூகத்தில் அபூபக்கர் (ரலி) உமர் (ரலி) போன்ற அரும் பெரியார்கள் தோன்றினர். இவர்கள் வாழ்ந்து காட்டிய பெருமானாரின் அடிச்சுவட்டின் முறைகளும் நீதியை நடைமுறைப்படுத்திய விதமும் இன்றும் ஆட்சிவல்லுனர்களால் வியந்துரைக்கப்படுகின்றது.

பெருமானாரின் போதனைகளும் சரி சாதனைகளும் சரி எப்போதும் ஒன்றையொன்று தழுவியதாகவே இருந்து வந்திருக்கின்றது. அவை நிகரில்லாத வாழ்க்கைத் திட்டமாகும். நமது வாழ்வுக்குத் தேவையான சகல அறிவுரைகளும்—முன் மாதிரிகளும் பெருமானாரின் சரித்திரத்தில் அடங்கி இருக்கின்றது. பெருமானாரவர்கள் முழு உலகத்திற்குமான இறைவனின் அருட்கொடையாகும்.

## முத்திரைக் கதை

தென்னிந்தியரின் பிரபல சஞ்சிகையான 'ஆனந்தவிடன்' ரூ 501/- சன்மானம் பெறுகின்ற முத்திரைக்கதை வெளியிடத் தொடங்கியபோது, முதன் முதலில் அப்பரிசைப் பெற்றவர் முஸ்லிமாவார். 'தூயவன்' என்ற புனைப்பெயர் கொண்ட அவரது இயற்பெயர் அக்பர் என்பதாகும். பரிசுபெற்ற அவரது கதை இந்து தர்மங்களின் பின்னணியில் ஆக்கப்பட்டது அதன் விசேட அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# උපත් පාලනය ගැන ආගමික බැල්මක්......

අද ලෝකයේ උග්‍රව වැඩෙමින් පවතින ප්‍රශ්න අතුරෙන් ප්‍රධාන තැන ගන්නේ ආහාර ප්‍රශ්නය, නිවාස ප්‍රශ්නය හා රැකීරක්ෂා ප්‍රශ්නයන්ය. ඒ අවස්ථා-වේදීම මෙම ප්‍රශ්න නිරාකරණය කිරීම සඳහා සංග්‍රාමශීලී යෙදෙන රජය හා පෞද්ගලික ආයතන වලද අඩුවක් නැත කණගාටුවකි මේනෙක් මෙම ප්‍රශ්න නිරාකරණය කරගැනීමට අපහසු වී ඇත මෙම ප්‍රශ්න අපවෙතින් තුරන් කිරීමට නුපුළුවන් ඇයි දැයි අපි විමසා බැලිය යුතුයි. එවිට අපේ සිතේ නැගෙන්නේ මෙම ප්‍රශ්න විසඳිය හැකි ඒවාද එසේ නැති-නම් කවදාවත් විසඳිය නොහැකි රටෙන් තුරන් කළ නොහැකි බැරෑරුම් ප්‍රශ්නද යනුවෙනි ලෝකයේ විසඳිය නොහැකි ගැටලුවක් නැතැයි ඉස්ලාම් ධර්මය අපට උගන්වයි.

මෙම ප්‍රශ්න නිරාකරණය කිරීමට පෙළඹෙන රජය හා-පෞද්ගලික ආය-තන මෙම ප්‍රශ්න වලට ප්‍රධානතම හේතුව ලෝකයේ වැඩිවෙමින් පවතින ජනගහනයයයි හඳුනගති මේ හේ-තුවෙන් ලෝකයේ උත්පත්ති පාලනයක් කලයුතුයයි මෙම ආයතනයන් නානා ප්‍රකාර උපක්‍රම වලින් ක්‍රියා කරති. මේ සඳහා නොයෙක් නොයෙත් උත්-පත්ති පාලන උපකරණ හා-උපදෙස් පොදුජනයා අතර පතුරුවා ඇත. මෙම උපකරණ වලින් රටට ජාතියට සෙතක් වුනිද එසේ නැත්නම් ආපද-වක් වුනිද යන්නතවත් ප්‍රශ්නයකි මෙම උත්පත්ති පාලනය ගැන ඉස්ලාම් ආගම කුමක් කියයිදැයි අපි විමසා බලමු

''මංගල පෝරුවට ඇතුළුවන්න. එසේම ළදරුවන් බිහිකර සමූහය පතුරුවන්න මක්නිසාදයත් අනෙක් ලෝකයේ මගේ ජාතියේ බෝවීමදැක මං ආඩම්බර වෙන්නෙමි. ලැබූ ළදරුවා ලේ කැටියක් වුවත් කම් නැත''

(අල්හදීස්)

යනුවෙන් අප මුහම්මද් නබි (සල්) තුමානෝ සඳහන් කර ඇත තවද විවාහ ජීවිතයට ඇතුලුවීම ආගමික ක්‍රියාවෙන් අඩක් සම්පූර්ණ කිරීමට සම යයිද එතුමා පවසා ඇත. මෙය මෙ-සේ පවතිද්දී අපි මිනිස් ධර්මයට පට-හැනිව අල්ලාහ් දෙවියන්ගේ බලාපො-රොත්තුවට විරුද්ධව, නබි තුමාණන්ගේ කීම නොසලකා ක්‍රියා කිරීම යුක්ති සහගතද? අල්ලාහ් දෙවියන් වහන්සේ ලෝකයට නබි ආදම් තුමාණන් ව යැව්වේ කුමටද? ලෝකයේ මිනිස් සංහතිය බෝකිරීම සඳහා නොවේද? එසේ මානව සංහතිය ඇති කිරීමෙන් දිනෙන් දින ජනගහණය වැඩිවන බවත් හඳුනී. ළමයින් ලබා අධ්‍යාපනය දීමෙන් ඇතිවන ප්‍රතිඵල ගැන අපි සිතා බැලිය යුතුයි එක් ශුක්‍රාණු බිංදුවකින් අවුරුදු දසදහක් ඇතුලතදී මුස්ලිම්වරු නී දෙනෙක් ඇතිවී ලෝකය සරසයි ද? ඔවුනතරින් ආගමික ප්‍රජකවරුන්, අව්ලියානන්, සේහ්වරුන් නී පලක් ඇතිවිය හැකිදැයි අපි විමසා බැලිය යුතුයි එමගින් අපට ඇතිවෙන සෙත ගැනද අපි කල්පනා කළ යුතුයි.

තවද ශුද්ධ කුර්ආන් ග්‍රන්ථයේ; අල්ලාහ් දෙවියන් වහන්සේ ආහාර සැපයීමට බාරනොගත් කිසිම ජීවයක් පෘථිවියේ නැතැයි'' සඳහන් වී ඇත. එසේම

''ඔබලාගේ සිසු දරුවන් අපරාධ-යේ නොමරන්න ඔබටත් ඔවුන්-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ටත් ආහාර සැපයිමට අපි බාරව් සිටිමු''

(ශුද්ධ කුර්ආන්)

යනුවෙන්ද ශුද්ධ කුර් ආ න යේ සඳහන් කර ඇත මෙයින් අපට ලැබෙන නිගමනයක් නම් ආහාර වෙනුවෙන් මනුෂ්‍යයා තමාව හෝ තමාගේ ජාතිය විනාශ නොකළ යුතුයි. යන ධෛර්‍යය හා රක්ෂණය මිනිසාට අල්ලාහ් දෙවියන් වහන්සේ විසින් දී ඇති බවයි. නමුත් මෙම රක්ෂණය විශ්වාස කරන මිනිසා දියුණු වීමට දිරිනොගෙන නිකරුණේ කාලය ගත නො කළ යුතුයි. මක්තිසාදයත් අල්ලාහ් දෙවියන් වහන්සෙ ශුද්ධ කුරආන් ග්‍රන්ථයේ මෙසේ සඳහන් කළ සේක.

"ඔබලාටත් ඔබලා ආහාර දී හැනොගත් [වාතයේ හා පෘථිවියේ ජීවත් වන] ජීවින්ටත් ජීවිතයට අවශ්‍ය ද්‍රව්‍යයන් පෘථිවියේ ඇති කලේ අපිමයි. එසේම අපි රෑ කාලය වැස්මක් කළෙමු. තවද දවල් කාලය (ඔබලා) ජීවනෝපාය සොයා ගැනීමේ වේලාවක් වශයෙන්ද සාද දුනිමු"

එනම් ලෝකයේ මනුෂ්‍යයන්ට අවශ්‍ය සියලු වස්තු ඇති කර ඇතැයි සඳහන් කරන අල්ලාහ් දෙවියන් වහන්සේ එම ද්‍රව්‍යයන්ගෙන් තමන්ගේ ජීවනෝපාය ගෙන යන්නැයි අණ කරයි.

මානුෂික ජීවිතයට අවශ්‍ය සියලු දේ දෙවියන් වහන්සේ මවා ඇතැයිද මිනිසා සිය බුද්ධියෙන් හා ලැබූ අධ්‍යාපනයෙන් ඒවා තම ජීවිතයට අවශ්‍යවන පරිදි සකස්කරගත යුතු යයිද ධර්මය පවසයි. මෙය මිනිසාගේ යුතුකමකි. මෙම යුතුකම නිසියා කාර ඉටුනොකර ජනගහනය වැඩිවන ප්‍රමාණයට ආහාර නිෂ්පාදනයක් නැතැයි බිය වීමෙන් කිසිම ඵලක් නැත. මෙම බියවීමයි උපත් පාලනයට මූලික හේතුව ජනගහනය වැඩිවන තරමට සරිලන පරිදි ආහාර අස්වැන්නත් වැඩිවන සේ මිනිසාට අල්ලාහ් දෙවියන් වහන්සේ කලින් කල නොයෙක් උපායන් දුනු සේක එනම්. පුරාණයේ නො තිබුනු; කුඩා ඉඩම් ප්‍රමාණයකින් විශාල අස්වැන්නක් ලබා ගැනීම සඳහා මිනිසා පොහොර හා රසායනික ද්‍රව්‍යයන් පාවිච්චි කිරීමේ ක්‍රමයක් ක්‍රියාවේ යොදවයි. එපමණක් නොව කෙටි කාලයකදී අස්වැන්න ලබා ගැනීමටද මිනිසා පොහොසත් වී සිටි මේවා ජනගහණය වැඩිවන තරමට ආහාර අස්වැන්න වැඩිකිරීම සඳහා මිනිසා විසින් කරන ලද උපායන්ගෙන් සමහරකි මේ අනුව බලන කල ජනගහණය වැඩිවෙද්දී දැනට නො යෙදෙන උප්ක්‍රම පසු කලකදී යෙමව මිනිසා සමත් වේයයි බලාපාරොත්තු වියහැක.

තවමත් බිම් වැඩි ප්‍රමාණයක් වගා නොකර තිබෙද්දි මනුෂ්‍යයන් කෝටි ගණනකටවුවත් නො අඩු ආහාර ප්‍රමාණයක් මහ මුහුදේ ඇති බව විද්‍යාඥයන් පවසද්දි උපත් පාලනයක් අවශ්‍යද? මිනිස් ශ්‍රමය හා බලවේගය නිසි අන්දමට යොදගැනීමෙන් උපත්පාලනයක් අවශ්‍ය නොවෙයි නිකමුන්ද බිහි නොවෙති මිනිස් ශක්තිය වැඩි වන විටයි රටේ ශක්තියත් වැඩි වන්නේ. විවිධ ආගම්වල ආගමික පූජකවරුන්ට විවාහය තහනම් කර පවතිද්දී ඉස්ලාම් ධර්මයේ විවාහ ජීවිතයට ඇතුලුවීම සාමාන්‍ය මිනිසුන්ට මෙන්ම පූජකවරුන්ටත් එමෙන්ම නබි වරුන්ටත් "සුන්නත්" ක්‍රියාවක් ලෙස පවසා ඇත. ශක්තිය හා පහසුකම් ඇති කිසිම තරුණයෙක් විවාහ නො කර නොසිටිය යුතුයයි ඉස්ලාම් ධර්මය කියයි. එපමණක් නොව විවාහ වැඩි ප්‍රමාණයක් කරගැනීමේ අවසරයද දී ඇත මෙසේ විවාහ නීතිය මෙතරම් ලිහිල් කර ඇත්තේ ඇයි? ලෝකයේ මිනිස් සංහතිය පැතිරවීමට විස වෙනයම් හේතුවක් සඳහාද?

එම්. ඇස්. එම්. හුසෙයින්
අවසන් වසර (ගණිතය)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முறை தானோ?

**பாணந்துறை நவஸீர்**

(ஏகு வருடம் — கணிதம்)

பணமே பெரிதென நினைந்திடும் உலகில்
குணமே மாறிடல் சரிதானோ — பெண்கள்
இனமே துயரில் மூழ்கிடும் நிலையில்
தினமே வாழ்வதும் முறைதானோ ...

மனமே சிறிதும் இரங்கிடாமலே
மடமையில் வீழ்வது அழகாமோ
கடமை மறந்தே கண்ணியம் இழந்தே
காலம் கடப்பது விதியாமோ ...

சீதனம் என்னும் பேய் பிடித்தே
சிந்தையில் நேர்வழி தடுமாறி
சிந்தனை இல்லா மனிதர்களாலே
பெண்ணினம் அழுவதும் ஏன் தானோ ...

தந்தையைத் தனயன் பிரிந்திடச் செய்யும்
விந்தையே இந்தப் பணம் தானே ...
முந்தையர் சென்ற நீதியை மறந்தால்
முடிவினில் தீமை சுமை தானே ...

## மனித சமுதாயத்தை மாண்புறச் செய்த மார்க்கம்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றிய அக்கால சமுதாயத்தை நோக்கின், மது அருந்தாதவன் மதிக்கப் படவில்லை; சூதாடத் தெரியாதவன் ஓர் உதவாக்கரை; கொலை செய்ய அஞ்சுபவன் கோழை; கொள்ளையடிப்பவனே சிறந்த உழைப்பாளி; கீழ்த்தர உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பக் கூடிய பாடல்களை யாக்குபவனே உயர்ந்த கவிஞன்; பலி வாங்குவதே — சிறந்த இலட்சியம்; போர் செய்வதே பொழுது போக்கு; இதற்காக ஆண் குழந்தைகளைப் பெற்றெடுப்பதில் ஓர் ஆனந்தம். பெண் குழந்தைகளைப் பெறுவதில் இழிவு. அப்படிப் பிறந்த பெண் குழந்தைகளை உயிருடன் குழிதோண்டிப் புதைப்பதில் ஓர் மன நிறைவு. தலைமைக்கும், நீதிக்கும் அடங்காமையே சுதந்திரம். அடுப்பங்கல்லைக் கடவுள் என வழங்கும் பக்தி; விபச்சாரமே சிறந்த விளையாட்டு; இத்தனைக்கும் எழுத்தறிவென்பது சுத்தசூன்யம். இந்த அறியாமையினுள்ளும் அவர்களுக்கு ஒரு பெருமை.

